வாரப் பதிப்பு விலை சதம் 20

தந்திச் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 புரட்டாதி திங்கள் 6-ம் நாள் (22—9—1963) ஞாயிற்றுக்கிழமை ஜமா. அவ் 3 | இதழ் 17




# சாத்வீகமான பகிஷ்கரிப்பு

## ஆட்சியினர்க்கு வேதனை

### வட, கிழக்கு செல்ல ஊழியர்கள் மறுப்பு

பகிஷ்கார இயக்கம் ஆரம்பிக்கப்போவதை அறிவித்ததும் அரசாங்கம் என்ன செய்வது என்று தெரியாது திணறுகிறது. வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குச் சிங்களத்தை அமுல் நடத்த சிங்கள ஊழியர்கள் செல்ல மறுக்கின்றனர் என்றும், அதே வேளையில் சிங்களம் படித்த தமிழ் ஊழியர்களும் செல்ல முடியாது எனக் கூறுவதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன. பகிஷ்கார இயக்கத்தினால் தங்கள் இனத்தவர்களாகிய சிங்கள ஊழியர்கள் கஷ்டத்திற்குள்ளாக்கப்படலாகாதே என்றும் அரசாங்க எம். பிக்கள் கருதுகின்றனர். பலமுறை சந்தர்ப்பம் அளித்தும் சிங்களம் படியாத ஊழியர்களை என்ன செய்வது என்று தெரியாமல் அரசாங்கம் திண்டாடுகின்றது எனவும் தெரிகிறது.

உரிமைப் போராட்டத்தின் அடுத்த கட்டத்துக்கான ஆயத்தங்களைச் செய்வதில் தமிழரசுக் கட்சி தலைமைப் பீடம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. சிங்களத்தை அமுலாக்கும் பிடிவாதத்திலிருந்து அரசாங்கம் இம்மியளவும் அசைந்து கொடுக்கப் போவதாகவும் தெரியவில்லை. இந்நிலையில், தமிழ் பேசும் மக்கள் மீது துவேஷத்தைத் மூட்டி, நாட்டில் அமைதியை அழிக்க முயலுகின்றனர் பலர். குறிப்பாக சில சிங்களத் தினசரிகள் இவ்வேலையைக் கீழ்த்தரமான முறையில் செய்ய ஆரம்பித்துள்ளன. சிங்கள ஏகாதிபத்திய வெறி பிடித்த பலர் இந்த வேலையில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிங்கள அமுலைத் துரிதப்படுத்த சிங்கள இனத்தைச் சேர்ந்த ஊழியர்களை அனுப்பும் எண்ணத்தை அரசாங்கம் புனராலோசனை செய்து வருகிறது. சிங்கள ஊழியர்கள் இவ் வேளையில் வட கிழக்கு மாகாணங்களில் கடமை புரிவதை அரசாங்க எம். பிக்கள் பலர் விரும்பவில்லை என்று தெரிகிறது. பகிஷ்கார இயக்கம் ஆரம்பித்ததும் அதனால் தங்கள் சகாக்களுக்கு ஏதாவது அனர்த்தம் நேர்ந்து விடுமோ என்று அவர்கள் கிலேசமடைகின்றனராம்.

#### சிங்களம் படித்த தமிழர்கள்

சிங்களம் படித்தால், பரீட்சைகளில் தேறினால், சொந்த ஊருக்குச் சென்று ஊழியம் பார்க்கலாம் என்று கருதிப் பல தமிழ் ஊழியர்கள் சிங்களம் படித்துச் சோதனை எடுத்துக் கொண்டு, மாறுதலுக்காக மனுப்பண்ணி இருந்தார்கள். இவர்களை வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள அமுலைத் தீவிரப்படுத்த அனுப்பி விட்டு நெருக்கடியைச் சமாளித்தல் நல்லது என்றும் சில அரசாங்க எம். பிக்கள் அபிப்பிராயம் தெரிவித்தனராம். ஆனால் மாறுதலுக்கு விண்ணப்பித்தவர்களோ, பகிஷ்கரிப்பு இயக்கத்துக்குப் பயந்து வட கிழக்கு மாகாணங்களுக்குச் செல்ல விரும்பாது, தங்கள் மாறுதல் விண்ணப்பங்களை வாபஸ் பெற விரும்புகின்றனர். ஆனால் விண்ணப்பங்களை வாபஸ் பெற அரசாங்கம் ஆதரவளிப்பதாகத் தெரியவில்லை.

'ஊழியர்கள் அனைவரும் சிங்களம் படித்தாக வேண்டும், படியாதவர்களுக்கு உத்தியோக உயர்வோ, சம்பள உயர்வோ கிடையாது' என்று அரசாங்கம் பயமுறுத்தியதே தவிர, சிங்களம் படியாதவர்களை குறிப்பிட்ட காலத்தில் கடமையிலிருந்து விலக்கி விடுவோம் என்று அறுதியிட்டுக் கூற முடியவில்லை.

(9ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரன் பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணப் பகுதிக்கான இடையிறுதிப்போட்டி 21ம் திகதி முதல் யாழ்ப்பாணம் கொட்டடி நமச்சிவாய வித்தியாசாலையில் நடைபெறுகிறது. பிரபல பேச்சாளர் திரு. புதுமைலோலன் போட்டிப் பொறுப்பாளராகக் கடமையாற்றுகிறார். கொழும்புப் பகுதிக்கான இடையிறுதிப் போட்டி இம்மாதம் 28ம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது. இப் போட்டி, 34, விவேகானந்த மேடு, கொழும்பு—13 என்ற முகவரியிலுள்ள விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெறும். போட்டிப் பொறுப்பாளராகத் திரு. ஈழவேந்தன் கடமையாற்றுவார். கொழும்பு நகருக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

## தொண்டர்களுக்கு அழைப்பு

'திட்டமென்ன சொல்லுங்கள்! தீர்மானமென்ன காட்டுங்கள்! ஈழ நாட்டில் செந்தமிழ் செத்துமடிவதைப்பார்ப்பதா? பார்த்தும் வாழ்வதா?' என்று தியாகத்தின் முனையில் நின்று முழக்கமிடும் இளைஞர் பட்டாளமே, எஃகு உள்ளத்தினரே! உங்களுக்கு மீண்டும் அழைப்பு வந்துள்ளது.

நம்மைப் பழித்தோரை, நம் மொழியை ஒழித்தோரை ஒதுக்கும் நாள் வந்துவிட்டது. எனவே உங்கள் ஒத்துழைப்புக் கோரி அழைப்பு வந்துள்ளது.

நாலாவது போராட்டத்தின் தலைவாயிலுக்குத் தமிழ் பேசும் இனம் தள்ளப்பட்டுள்ளது. இப் பெரும் போராட்டத்தில்—இந்த இறுதிப் போராட்டத்தில் உங்களுக்கு நிறையப் பங்கு உண்டு. உங்கள் பணியை நிறைவேற்ற அழைப்பு வந்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் திரு. க. சிவானந்த சுந்தரம் கட்சியின் சார்பில் உங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த முப்பெரும் போராட்டத்திலும் தொண்டர்களாகக் கடமையாற்றியவர்களையும், புதிதாகத் தொண்டர்களாகச் சேர்ந்து தங்கள் பணியினை நிறைவேற்ற விருப்புடையோரையும் அவ்வப் பகுதியில் உள்ள கட்சிக் காரியாலயங்களுடன் தொடர்புகொள்ளும்படி வேண்டியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளவர்கள் 25, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் முகவரியிலுள்ள கட்சிக் காரியாலயத்துடன் நேரில் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளார்கள்.

வச்சிர நெஞ்சினரே! தமிழ் அன்னையின் துயர் துடைத்து அரியாசனத்தில் சரியாசனம் பெற உங்கள் பங்கினையும் பணியினையும் நிறைவேற்ற வாரீர்! வாரீர்!!

## அமைதியாக நடக்கும்

### தமிழரசுத் தந்தை தரும் விளக்கம்

இழந்துவிட்ட உரிமைகளை மீண்டும் பெறுவதற்காகத் தமிழ்பேசும் இனம் விடுதலைப் போராட்டத்தின் அடுத்த கட்டத்துக்கான ஆயத்தங்களைத் துரிதமாகச் செய்து வருகிறது. இப் போராட்டம் முற்றிலும் அஹிம்சையையே அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். வன்முறைச் செயல்கள் எதுவுமே இப் போராட்டத்தில் இடம் பெறப் போவதில்லை'' என்று தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் 'சுதந்திரன்' நிருபரிடம் கூறினார்.

பகிஷ்கரிப்பு இயக்கம் எந்தெந்த வகையில் நடைபெறும் என்பதை விளக்கிக் கூறும் பொழுதுதான் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''அறப் போராட்டத்தின் அடுத்த கட்டமான பகிஷ்கரிப்பு இயக்கம் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் யாவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் வெகு வேகமாகத் தயாராகி வருகின்றன. இப் பகிஷ்கரிப்பு இயக்கத்தை யிட்டு எவரும் எந்த வகையிலும் அஞ்சத் தேவையில்லை. அமைதியான முறையிலும் அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டுமே இயங்கும் இப்போராட்டத்தில் வன்முறை எதுவும் தலைகாட்டாது என்று அழுத்தந் திருத்தமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

''வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வதியும் தமிழ்

(9ம் பக்கம் பார்க்க)




சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# புத்தரின் புனித நகரில் கதிரேசன் கோயில் இருக்க முடியாதாம்

## புதிய கோயில் கட்ட பக்தர்கள் ஏற்பாடு

## பழைய ஆலய வரலாறு

சைவம்—பௌத்தம் ஆகிய இரண்டு மதங்களையும் இணைக்கும் முயற்சியில் பலர் இப்பொழுது முனைந்துள்ளனர். இது அரசியல் கண்கட்டி வித்தை என்பது பலருக்குத் தெரிவதில்லை. சில நகரங்களைப் புனித பௌத்த நகரங்களாக்குவதாகக் கூறி வேற்று மதத்தவர்களை ஆட்சியாளர் ஒதுக்கி வருகின்றனர். சில ஆண்டுகளில் இலங்கைத் தீவே புனிதமான பௌத்த நாடு — இங்கு வேறு எவருக்கும் இடம் கிடையாது என்று கூறத்தலைப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**அநுராதபுரம் கதிரேசன் கோயில் வரலாற்றை விபரிக்கும் இக் கட்டுரை மேற்கண்ட கருத்தைத்தான் வெளிக்காட்டுகிறது.**

மா. கணேசமூர்த்தி
(நியாய துரந்தரர்)

அநுராதபுரம் பல்லாண்டு காலமாக தமிழ் சிங்கள அரசர்களால் தலைநகராகக் கொள்ளப்பட்டு சீரும் சிறப்புடனும் விளங்கிற்று. சோழர்களின் இரண்டாம் படையெடுப்பிற்குப் பின் அதன் புகழ் மங்கி நகரம் பாழடைந்தது. ஆங்கிலேயரின் ஆட்சியின் போது அநுராதபுரத்தை புனர் நிர்மாணம் செய்ய பிற இடங்களிலிருந்து தமிழர்கள் தருவிக்கப்பட்டனர். அநுராதபுரத்துக் காட்டை நாடாக்கி, மக்கள் வசிக்கும் நிலைக்கு தமிழர்கள் கொண்டு வந்தனர். திரு. சேர். ஹென்றி வார்டு இலங்கையின் கவர்னராக ஆட்சி செலுத்திய காலத்தில் அநுராதபுரத்திலுள்ள பல குளங்கள் திருத்தியமைக்கப் பெற்றன. நிலங்கள் முடிக்குரிய சாதனமாகப் பொது மக்களுக்குச் சொற்ப தொகைக்கு கிரயமாக அளிக்கப்பட்டன. குடியேறிய மக்களுள் தமிழர்களே பெருந்தொகையினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### கதிரேசன் கோவில் வரலாறு

பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதியிலே அநுராதபுரத்தில் கணிசமான சைவ மக்கள் வசித்து வந்தனர். அவர்களின் வழிபாட்டுக்காக ஏற்பட்ட கோவிலே ஸ்ரீ கதிரேசன் ஆலயம்.

முதன் முதலாக இவ்வாலயம் அநுராதபுரம் பழைய நகர கடை வீதியில் உருவாகியிருக்கவாமென்பது இங்குள்ள பழங்குடி மக்களின் அபிப்பிராயம். அந்நாட்களில் ஒரு சைவப் பெரியார் வேல் ஒன்றை ஸ்தாபித்து வழிபட்டு வந்தாரெனவும் பின்னர் அக்கோவிலே ஸ்ரீ கதிரேசன் ஆலயமாகியதெனவும் கூறுவர் மற்றொரு சாரார். பழைய நகரிலுள்ள கடைவீதி மிகவும் அசுத்தமாக இருந்ததாலும், கோவிலை விஸ்தரிக்க இடமின்மையாலும், ஊரிலுள்ள பெருங்குடி குடி மக்கள் ஒன்று திரண்டு ஆலோசித்து ஒட்டுப்பள்ளம் என்னுமிடத்திலே, தற்போதுள்ள முகைதீன் ஜும்மா பள்ளிவாசலுக்கு எதிரே ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தை இற்றைக்குச் சுமார் எண்பது வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபித்தனர்.

சீரும் சிறப்புடனும் ஸ்ரீ கதிரேசப் பெருமான் அநுராதபுரம் பழைய நகரத்திலுள்ள ஒட்டுப்பள்ளத்தில் எழுந்தருளிய நாட்களில் சில தவிர்க்க முடியாத சம்பவங்கள் ஏற்பட்டன. வீதி விலாசமுள்ள ஓர் சுத்தமான இடத்தில் கோயிலை நிறுவ வேண்டுமென்ற எண்ணம் அநுராதபுரத்திலுள்ள சைவப் பெருங்குடி மக்கள் உள்ளத்தில் உருவாகியது. இதற்கென திருவாளர்கள்: வேலுப்பிள்ளை ராமசாமி (நியாயதுரந்தரர்), சம்பந்தர் நடராசா (நியாயதுரந்தரர்), முருகப்பர் அம்பலவாணபிள்ளை, முருகேசர் தியாகராசா, முருகேசர் கணபதிப்பிள்ளை, கதிர்காமர் இளையதம்பி, வைத்தியநாதர் மயில்வாகனம், சந்திரசேகரம் நடராசா சிற்றம்பலம், வள்ளியப்பர் ராமலிங்கம் ஆகியோரைக் கொண்ட தானேசர் சபை நியமிக்கப்பெற்று, பழைய நகரிலுள்ள மாவடி என்னுமிடத்தில் ஒரு ஏக்கர் மூன்று ரூட் பதின்மூன்று பேர்ச் விஸ்தீரணம் கொண்ட காணியொன்றை (இல:1061 உடையதும் 26-ம் திகதி செப்டம்பர் மாதம் 1927-ம் ஆண்டு திரு. ஆ. சிவக்கொழுந்து பிரபல உறுதியெழுத்தாளரால் வரையப்பட்ட ஒரு உறுதி மூலம்) தரும சாதனமாகப் பெற்று, அந்நிலத்திலே கோவில் திருப்பணி வேலைகள் மும்முரமாக நடைபெற்றன.

அந்நாட்களில் வசித்த மக்களில் கணிசமான தொகையினர் தமிழர்களாக இருந்தபடியாலும், அம்மக்களுடைய தார்மீக ஆதரவு இருந்தமையாலும் அழகான கோவிலொன்று உருவாகியது. 1927-ம் ஆண்டு தொடங்கப்பெற்ற கோவில் திருப்பணி 1930ம் ஆண்டு முடிவுற்று, பிரமோதூத வருடம் வைகாசி மாதம் அச்சுவினி நட்சத்திரம் பொருந்திய சுப நன்னாளில் சைவாகம முறைப்படி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இவ்வாலயம் மாவடிக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் பல விதத்தாலும் விஸ்தரிக்கப்பட்டு, அநுராதபுரத்திற்கே ஒரு எழிலை ஏற்படுத்தியதென்றால் மிகையாகாது.

### அரசினர் குறுக்கீடு

1942-ம் ஆண்டிலே அநுராதபுரத்தின் புனிதத்தன்மை கெடுவதாக பௌத்த மக்கள் கிளர்ச்சி செய்ததன் விளைவாக அநுராதபுரம் பாதுகாப்புச் சட்டம் அரசாட்சியினரால் நிறைவேற்றப்பட்டு அநுராதபுரம் புனித நகரமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. அநுராதபுரத்திலுள்ள பழைய சரித்திரப் பிரசித்திபெற்ற சின்னங்களையும் பௌத்த மத சம்பந்தமான சின்னங்களின் புனிதத்தன்மைகளையும் பேணுவதற்காகப் பழைய நகரிலுள்ள சகல குடிகள், நிறுவனங்கள், பௌத்த மதமல்லாத ஆலயங்களைப் புதிய நகரிலிருந்து அப்புறப்படுத்துவதில் அரசாட்சியார் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதற்கென 1961ம் ஆண்டில் அநுராதபுரம் பாதுகாப்புச்சபையை நிறுவி அதன் மூலம் செயல்படுகின்றனர். அநுராதபுரத்திலுள்ள ஸ்ரீ கதிரேசன் ஆலயமும் புனித நகருக்குள் இருப்பதால் அவ்வாலயமும் இவ்வருடம் டிசம்பர் மாதம் 31ம் திகதிக்கு முன் புனித நகரிலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டுமெனப்பாதுகாப்பு சபையினர் பணித்துள்ளனர். இதற்கென அநுராதபுரம் புதிய நகரில் பண்டார நாயக்க மாவத்தையும் ஜயந்தி மாவத்தையும் சந்திக்கும் நாற்சந்திக்கு எதிரே அமைந்துள்ள சுமார் நாலு ஏக்கர் நிலத்தைப் பாதுகாப்புச் சபையினர் ஸ்ரீ கதிரேசன் ஆலயம் நிறுவ கோவில் தானேசர் சபையினரிடம் அளித்துள்ளனர். தற்போதுள்ள கோவிலுக்கு அரசாங்கம் நட்ட ஈடாக ரூபாய் 105,000/- தருவதாக ஒப்புக்கொண்டு முன்பணமாக ரூபாய் 73,000/-மும் அளித்துள்ளனர். மிகுதியான தொகையை இவ்வருட இறுதிக்குள் தருவதாக வாக்குறுதியளித்துள்ளனர்.

### புதிய ஆலயம் நிறுவுதல்

ஸ்ரீ கதிரேசன் ஆலய தானேசர் சபையில் திருவாளர்கள் ச. நடராசா, (தலைவர்) சி. கந்தசாமி, (செயலாளர்) இரா. சதாசிவம்பிள்ளை, (பொருளாளர்) சோ. சிவராமலிங்கம், ஆர். வி. கந்தசாமி, எஸ். கே. சுப்பையா, ம. மல்லிநாதன், இ. பரம்சோதி, வை. சேனாதிராசா ஆகியோர் அங்கத்தவராகப் பணியாற்றுகின்றனர். புதிய நகரத்தில் நிறுவப்படும் ஸ்ரீ கதிரேசன் கோவில் திருப்பணியை திரு. ச. நடராசா அவர்களைத் தலைவராகக் கொண்ட ஏழு பேர் அடங்கிய கட்டிடக் குழுவிடம் கோவில் தானேசர் சபை ஒப்படைத்துள்ளது.

(15-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174. ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். வெகுகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3,00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.





## களம் விரைவாய்!

—எருவில் மூர்த்தி—

அடடா, தமிழ் மகனே! உனை அயலார் சிறை கொளவா
அமிழ்தாகிய தமிழ் மாதவள் அரியாசனம் விழவா
நெடுநாள்வரை உனதாருயிர் நிலையாய் உறு மொழியை
நினையாது சிங் களமாகிய சிறியாள் அடி தொழுவாய்?
சடமா? படுமரமா? எட! சதிகாரரின் திறனல்
சரியாதென பிழையாதென சரியாய்இனும் அறியாய்!
கொடடாஇனி ஒரு சூள் உரை; குலமேபட வரினும்
கொடியார் மொழி தமிழ் நாவினில் குலவா தினி எனவே?

புற வாழ்வினில் புலியாம் எனப் புகழ் நாட்டிய இனமா
புதர் வாழ் சிறு நரியாய்...மனுப் புழுவாய்...!இது நனவா?
விறல் ஏந்தி யிப் புவி ஆண்டவர் கரம் ஏந்திய கொடுவாள்
வினை நீத்தொரு புறம் மூலையில் விடலானதும் விதியா?
திறனுற்றிய நெடுவேல் முனைத் துருப் போக்கிட எழுவாய்!
திசையாவிலும் உனை வாழ்த்திடத் திரளாய்க்கவி பொழிவார்!
அறப் போர் முனை அடையாதினும் அகம் வாழ்ந்திடல் முறையா?
அரிமா நிகர் தமிழா! இனி அயராய்; களம் விரைவாய்!

அடி நாள் முதல் அட! நீவளர் அசல்நாட்டினைக் கரவாய்
அயலார் பறித்திடவே இனும் அசடாய்உறங் குவதா?
கடி மாமலர்க் கொடியாள் தரும் கனிவாய் இதழ்ச் சுவையும்
கலைமேவிடும் மகவோடுறும் களிதான் ஒரு நிலையா?
பொடி ஆசைகள் நிறைவாகிடப் பிறர்தாழ் விழல் தரமா?
புலி தீட்டிய கயல் ஏற்றிய சிலைநாட்டிய தமிழா!
படிமீதுனை ஒரு மாபெரும் பழிமூடிடு முனமே
பகை சாயுட உடனேஅறப் படைநாடிடு; விரைவாய்.

## ஆசை!

—சிற்பி—

உள்ளக் குளத்தினுக் குள்ளே—புது
வெள்ளம் போல் ஆசைகள் துள்ளும்
அள்ளி மகிழ்வுடன் தருவேன் - எனை
எள்ளி நகையாட வேண்டாம்.

மாரியைப் பாரியைப் போலே—கொடை
வீரனாய் நான் வாழ வேண்டும்.
ஊரிலுள்ள மிடிக் கொடுமையை—நெஞ்ச
ஈரத்தினால் ஓட்ட வேண்டும்.

இல்லவர் உள்ளவர் பேதம்—என்றும்
இல்லாமலே போக வேண்டும்.
எல்லார்க்கும் எந்நாளும் வாழ்வில்—இனி
எல்லா நலன்களும் வேண்டும்.

சாதி சமயத்தின் பேரால்—என்றும்
பாதிக்கப் பட்டோர்கள் மீண்டும்
மேதினி மேம்பட வாழ—நன்கு
நீதி செலுத்திட வேண்டும்.

இத்தனையுஞ் செய்த பின்னர்—எந்தன்
சித்தத்துச் சுந்தரியோடு
மெத்த மகிழ்வுடன் வாழ்ந்து—உயர்
புத்திரரைப் பெற வேண்டும்.

அன்பு நிறைந்த உலகினை—நாம்
ஆக்கிப் படைத்திட வேண்டும்.
பண்பு தவறாமல் வாழ்ந்து—இந்தப்
பாருக்குக் காட்டிட வேண்டும்.




திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

மோ. றொசாரியோ,
கொழும்பு-2

கே: இடதுசாரி முன்னணியின் தலைவர் தக்க சமயத்தில் தோன்றுவார் என்று டாக்டர் பெரேரா கூறியுள்ளார். மறைந்திருக்கும் அந்தத் தலைவர் யார்?

ப: அவர்கள் புத்திசாலிகள்! தலைவர் யார் என்ற சிக்கலைத் தீர்க்க முதலில் முயன்றிருப்பார்களாயின் இடதுசாரி முன்னணியே தோன்றியிருக்காது. தலைவர் யாரோ! அவர் வரும்வரை இந்த முன்னணி நிலைத்திருக்க வேண்டுமே என்பது தான் எனது கவலை.

ஃ

தமிழ் ஆனந்தம்,
கொழும்பு-14

கே: இலங்கைக்கு தி. மு. க. தேவையா?

ப: தேவையில்லை என்கிறார் ஜே.ஆர். தமிழர்களுக்கு எந்தக் கட்சி தேவை, எந்தக் கட்சி தேவையில்லை என்று கூறும் அளவுக்கு வந்துவிட்டார்கள் சிங்களத் தலைவர்கள்.

ஃ

அ. ஸாகிர், யாழ்ப்பாணம்

கே: சில பெண்கள் தெருக்களில் கண்டபடி சைக்கிள் ஓடுகிறார்களே!......?

ப: அதில் அவர்களுக்குத் தனியொரு பிரீதி உண்டு.

ஃ

தோ. மி. அந்தோனி,
தலவாக்கெல்லை,

கே: இலங்கை தொழிலாளர் கழகத்தில் அங்கம் வகிக்கும் என்னை, இ. தொ. காங்கிரஸ்காரர்கள் "பட்டம் பதவி பணம் தருகிறேன்" என்று அழைக்கிறார்களே, போகக்கூடாதா?

ப: அந்த எண்ணம் இருந்தால் நீங்கள் கழகத்தில் உறுப்பினராக இருக்கவே தகுதியற்றவர். உடனே காங்கிரஸுக்குப் போய் விடுங்கள்.

ஃ

கா. மகாதேவன், மானிப்பாய்.

கே: சுந்தரலிங்கத்தார் அறிக்கைகள் விடும் பொழுது தனது கடமை என்கிறாரே!

ப: அவர் கடன் அறிக்கை விட்டுக் கிடப்பதே!

ஃ

"வடலூரான்", அனலைநகர்.

கே: அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் பத்திரிகையை நடத்துவதின் காரணமென்ன?

ப: மாற்றுக் கட்சிகளைக் கன்றுபின்றுவென்று திட்டுவதற்குப் பத்திரிகை ஒரு சாதனம்.

ஃ

இ. குமாரகுலசிங்கம்,
மானிப்பாய்.

கே: ஜி ஜியை யாழ்ப்பாணம் பகுதியில் நீண்ட நாளாகக் காணவில்லையே!

ப: மக்கள் மத்தியில் அவருக்கு என்ன வேலை. எங்கேயாவது நீதிமன்றங்களில் தேடிப்பாருங்கள். கிடைப்பார்.

கே: நாம் பாடசாலை சென்றது வீண்தானே. படித்தும் பட்டம் பெற்றாலும் வேலை கிடையாதே!

ப: உத்தியோகத்தை எண்ணிக் கொண்டு படிக்காதீர்கள். அறிவு வளர்ச்சிக்காகப் படியுங்கள்!

ஃ

அ. சிவப்பிரகாசம்,
ஏழாலை மேற்கு.

கே: சீனு-இந்தியா எல்லைத் தகராறில் இந்தியாவை ஆதரித்து அளிசாவெல்லைப் பிரதிநிதியும் சீனுவை ஆதரித்து புலத்சிங்கலப் பிரதிநிதியும், நடுநிலைமை வகித்து எட்டியாந்தோட்டைப் பிரதிநிதியும் பேசுகிறார்கள். இவ்விஷயத்தில் ஐக்கியப்படாதவர்கள் வேறு எதில் ஐக்கியப்படுவார்கள்?

ப: இந்திய-சீனத் தகராறு பற்றி நிலையான கொள்கையொன்று இடதுசாரி ஐக்கிய முன்னணிக்குக் கிடையாது. முன்னணியில் யார் வேண்டுமானாலும் சீனவை ஆதரிக்கலாம்-இந்தியாவைத் தாக்கலாம் இல்லையேல் சீனவைத் தாக்கலாம்-இந்தியாவை ஆதரிக்கலாம்.

ஃ

கா. இன்பம், கொழும்பு.

கே: சமஷ்டி அரசியல் திட்டத்தைத் தற்காலிகமாகப் பிற்போட்டு மொழியுரிமைக்காகத் தமிழரசுக் கட்சி போராடினால் நன்றல்லவா? அப்படிப் போராடினால் தமிழ் மக்கள் மாத்திரமல்லாமல் சிங்களவர்களில் நற்புத்தி படைத்தவர்களும் ஆதரவு கொடுப்பார்கள் அல்லவா?

ப: மொழியுரிமைக்காகவே கட்சி இன்று போராடுகிறது. அந்த உரிமை கிடைத்து, அதனை அமுல் நடத்தும் போது சமஷ்டிக்குப் பாதை தானாகவே செப்பனிடப்பட்டுவிடும். அது தவிர்க்க முடியாதது.

ஃ

ஆர். கே. கரன், மட்டக்களப்பு.

கே; சமீபத்தில் மட்டக்களப்பில் நடந்த தமிழ் விழா பற்றி இலங்கை வானொலியில் ஒலிபரப்பான தொகுப்புரையிலும் 'கண்டதும் கேட்டதும்' நிகழ்ச்சியிலும் மட்டக்களப்பு முதல் பிரதிநிதி திரு. செ. இராசதுரையின் பேச்சு இருட்டடிப்புச் செய்யப்பட்டதேன்?

ப: அவர் எதிர்கட்சி எம். பி. யாக இருப்பதுதான் காரணம். அவர் பேச்சை ஒலிபரப்பாதிருந்தது ஒரு வகையில் நன்று. இன்றேல் திரு. ஜே. ஆர். போல திரு. இராசதுரையும் தனது பேச்சைத் திருத்தி ஒலிபரப்பியதாக இலங்கை வானொலி மீது பாராளுமன்றத்தில் குற்றஞ்சாட்ட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

ஃ

எம். வி. ராசு,
தலவாக்கொல்லை.

கே: பதிவுப் பிரஜைகள் கையிலிருக்கும் துணி வர்த்தகத்தைப் பிடுங்கி வம்சாவளிப் பிரஜைகள் கையில் கொடுக்க வேண்டுமென்று நிதி மந்திரி கூறுவதேன்?

ப: பதிவுப் பிரஜைகள் என்போர் "பிரஜாவுரிமையுடன் கூடிய பிரஜைகளல்லாதோர்" என்பதும் அவர்களின் முடிவாம். நிதி மந்திரியின் கண்ணோட்டத்தில் வம்சாவளிப் பிரஜைகள் என்போர் சிங்களவர்களே—அதாவது: கண்டியச் சிங்களவர்களே—அதாவது: கண்டிய பௌத்த சிங்களவர்களே—அதாவது: கண்டிய பௌத்த கொயிகம சிங்களவர்களே.

ஃ

சு. பொன்னுத்துரை,
ஈறற் பெரியகுளம்.

கே: சிறிமாவோ அரசாங்கம் விற்பனவு வரி என்று ரூபாவொன்றிற்கு ஏழரைச் சத விதம் எடுத்தார்களே இரண்டு மூன்று நாள்! இதன் முடிவு?

ப: பொது மக்கள் பணத்தை இழந்ததுதான் முடிவு.

கே: நான் உங்களுக்கு 25 கேள்விகள் அனுப்பவிருக்கிறேன்.

ப: 25 என்ன, 25,000 கேள்விகளைக் கூட எனது குப்பைக் கூடை விழுங்கி ஏப்பமிடத் தயாராயிருக்கிறது!

ஃ

ஏ. எம். சுபைர்,
மட்டக்களப்பு.

கே: கிராம விதானைமார் திட்டத்தை மாற்றிக் கிராம சேவையாளர்களை நியமித்த அரசாங்கம் இப்பொழுது செய்வதென்னவென்றறியாது திணறுகிறதே. இதன் மர்மம் என்ன?

ப: கிராமங்கள் தோறும் மாஜி விதானைமார் அரசாங்க-எதிர்ப்புப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதுதான் காரணம்.

ஃ

இரா. வெ. அழகர்சாமி,
பண்டாரவளை.

கே: 'இந்திய துணைக் கண்டத்தில் ஒவ்வொரு மாநிலத்திலும் தன் தாய் மொழியோடு (இந்திக்குப் பதில்) ஆங்கிலமே நீடிக்க வேண்டும்; இல்லையேல், இலங்கையிலும் மொழிச் சிக்கல் தீராது—என்கிறான் என் நண்பன். அப்படியா?

ப: நண்பனின் கூற்றில் உண்மை உண்டு. இந்தியாவில் மொழிச் சிக்கல் தீர்ந்தால் அது இலங்கையின் மொழிச் சிக்கலைத் தீர்க்க வழிகாட்டியாக இருக்குமல்லவா?

ஃ

நா. தம்பிராசா, கொழும்பு-11.

கே; திருமலையில் சமஷ்டிக் கட்சியினர் மண் கவ்வுவார்கள் என ஐந்தாம்படைத் தோழர்கள் ஆருடம் கூறுகின்றார்களே. அவர்களுக்கு தாங்கள் என்ன சொல்லப் போகின்றீர்கள்?

ப; அவர்களுக்குப் பதில் சொல்லும் பொறுப்பைத் திருமலைத் தொகுதி வாக்காளரிடம் ஒப்படைத்துள்ளேன்.

ஃ

ஏ. எஸ். வாஸ்,
கஹட்டகஸ்திகிலிய.

கே: சில பெண்கள் ஆண்கள் மீசை வைத்திருப்பதை விரும்புகிறார்கள். சில பெண்கள் வெறுக்கிறார்கள்! ஏன்?

ப: இக்காலப் பெண்கள் பெரும்பாலும் மீசையின் விரோதிகளே. ஒரு காலத்தில் மீசை, வீரத்தின் லட்சணமாகக் கருதப்பட்டது. இன்று அப்படியில்லையே!

ஃ

கு. செல்வநாயகம், சுன்னாகம்.

கே: எட்டப்பர்கள் தொலையாமல் இருக்க, விடுதலை வீரர்கள் மட்டும் மறைவதன் காரணம் என்ன?

ப: எட்டப்பன் எத்தன்—பிறரைக் காட்டிக்கொடுத்து சுகவாழ்வு வாழ்பவன். எனவே அவனது பாபஉடலை உயிர் நீண்ட நாள் தாங்கி நிற்கும். விடுதலை வீரனோ சொந்தச் சுகங்களை 'தூ' என உதறித் தள்ளிவிட்டு இரவு பகலென்று பாராமல் விடுதலைக்காக இடையறாது பாடுபடுபவன். ஆகவே விரைவில் அவன் உடல் தேய்ந்து விழுந்து விடுகிறது.

ஃ

ஏ. லாஹிர், யாழ்ப்பாணம்.

கே: தோளில் போடும் முந்தானையைக் கையில் ஏந்திக் கொண்டு திரியும் பெண்களைப் பற்றி என்ன கூறுகிறீர்?

ப: அவர்கள் குடும்பப் பழுவைச் சுமக்க முடியாதவர்கள். முந்தானையைச் சுமக்க கூட அவர்கள் தோளில் வலுவில்லையே! குடும்பச் சுமையை எப்படித் தாங்க முடியும்?

ஃ

எஸ். எம். இரத்தினம், பதுளை.

கே: எனக்கு சிங்களம் படிக்க ஆசை. ஆகையால் சிங்களம் எஸ். எஸ். ஸி. பாஸ் பண்ணிய ஒரு தமிழ் ஆசிரியையை மணக்க விரும்புகிறேன். தங்கள் கருத்தை தெரிவியுங்கள்?

ப: ஒரு மொழியைப் படிக்க ஆசை ஏற்படும் போதெல்லாம் அந்த மொழி தெரிந்த ஒரு பெண்ணை மணப்பது உங்கள் உத்தேசமா? மணக்க முன்பே அந்தப் பெண்ணிடம் படிக்க வேண்டியதைப் படித்து முடித்துவிடுங்கள்!

ஃ

இ. பேரின்பநாயகம்,
களுவாஞ்சிக்குடி

கே: இலங்கை அரசாங்கத்துக்கும், தென் வியட்நாம் அரசாங்கத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: அது ஒரு மதத்தினரை நசுக்குகிறது. இது ஓர் இனத்தவரை நசுக்குகிறது.

ஃ

மு. கருணாநிதி,
ஏழாலை மேற்கு

கே: இலங்கை சர்வாதிகார நாடாகினால் உம்மிடம் நாங்கள் கேள்வி கேட்கலாமா?

ப: கேட்கலாம். சர்வாதிகாரத்தை ஆதரித்து.

ஃ

"குமாரச் செல்வன்"
ஏழாலை மேற்கு

கே: தமிழினத்தின் பகிஷ்கரிப்பு இயக்கத்தைக் கேள்விப்பட்ட காக்கை வன்னியர் திருக்கூட்டங்கள் முழிப்பது ஏன்?

ப: மக்கள் தங்களையும் சமூகப் பகிஷ்காரம் செய்துவிடுவார்களோ என்ற பீதி!

கே: சிறிமாவுக்குப் பந்தம் பிடித்துத் திரிந்த ஓர் எட்டப்பரின் மனைவியார் 'ஸ்கொலஷிப்' பெற்றிருப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டீரா?

ப: ஆஹா ஹா! பந்தத்தின் மகிமையே மகிமை!

ஃ

பி. சுப்பிரமணியம், மாவத்தகம

கே: இலங்கையில் முதலாவது தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படமான 'தோட்டக்காரி' படத்தைப் பற்றியும், அதன் தயாரிப்பாளர் தங்கவேலு, கிருஷ்ணகுமார் ஆகியோரைப் பற்றியும் உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள்?

ப: நான் அப்படத்தைப் பார்க்கவில்லை. இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதலாவது தமிழ்ப் படம் என்பதற்காகப் பார்க்காமலேயே அதைப் பாராட்டலாம்!

## "கள்ளியல்"

—அளவை மு. திருநாவுக்கரசு—

தந்தை மகற்காற்றும் உதவி பின் வளவில்
பனங்கன்று நாட்டி விடல்.

குடித்ததனுல் ஆய பயனென் கொல் பலர்சிரிக்க
நடுத்தெருவில் நின்றாடாவிடில்.

மண்டி மதுவை மனதோடு மாந்தினார்க்கு
வண்டியே பகரும் சான்று.

தேடிப்புளித்த தென்னங்கள் அருந்தினோர்க்கு
யாண்டும் பேதி எதற்கு.

றம் வெறிக்கும், ஜின் வெறிக்கும் என்பர்—நம் கள்ளின்
நற்சுவை காணாதவர்.

தலை நகரிருந்து தவித்தோடி வருவார்
கலை மிகுந்த கள்ளருந்த வேண்டி.

கொலை குன்றும், கொலைஞர் தம் கலை குன்றும்
பனை மூட்டி கட்டாவிடின்.

மனக் கவலை தீர்க்க மருந்து இனி வேண்டில்
பனங்கள் சிறிதருந்திப் பார்.

வளர்த்த பெரு மீசை வடிகட்டிக் காப்பதனால்
வண்டினமும் எறும்பினமும் வாழ்த்தும்.

கைகட்டி நின்று கரம் நீட்டிப் பருகுவதால்
பொய்ச் சாதிப் பேத மெலாம் போம்.


# பரீட்சை எடுப்பவர்களுக்கு விசேஷ அறிக்கை

எந்த விதமான பரீட்சையிலும் சித்தி அடைய பாடங்கள் மனதில் பதிய, போட்டிகள், நேர்முகப் பரீட்சை முதலியவற்றில் வெற்றியும் உயர்வும் அடைய, உத்தியோகங்கள் கிடைப்பதற்கும் வேண்டிய நபர்கள் உங்களை விரும்பவும் என்றால் கொடுக்கப்படும் மார்க்கத்தை கடைப்பிடியுங்கள். விபரங்களுக்கு எழுதவும்.

*கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மந்திராச்சாரியார்.*

## பி. எம். திசாநாயக்க,

கம்பளை.

# தமிழ்ப் பிரதேசத்தில் புத்தர் சிலை உடைக்கப்படுகிறதாம்

## தமிழரசுக் கட்சி ஆதரவுடன் 'நாம் தமிழர்' குடியேற்றம்

## அரசாங்கத்தை வீழ்த்த 'இரகசியச் சதி'

### சிங்களப் பத்திரிகைகள் விஷமப் பிரச்சாரம்

### சிங்கள இதழ்களில்...

"சேருவாவில ஆலயத்தையொட்டியுள்ள பகுதிகளில் புத்தரின் சிலைகளை உடைத்தெறிந்து, அந்த இடங்களில் தெய்வங்களின் உருவங்களை அமைத்து, குடியேற்றத்திட்டங்களில் "நாம் தமிழர்களை"க் குடியேற்றும் இயக்க மொன்றைத் தமிழரசுக் கட்சி நடத்துவதாகக் கூறப்படுகிறது" என்று பிரபல சிங்கள வாராந்தப் பத்திரிகை "ரிவிதின" செப்டம்பர் 15உ இதழில் ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

"சேருவாவில பகுதியில் உள்ள புராதன புத்தர் சிலைகளை உடைத்தெறிவது பற்றி அப்பகுதி பௌத்தர்கள் பிரதம மந்திரிக்கும், கலாசார இலாகாவுக்கும் தொல் பொருள் ஆராய்ச்சி இலாகாவுக்கும் புகார் செய்துள்ளனர்.

கள்ளராய் குடியேற்றப் பகுதியை அடுத்துள்ள இடங்களில் சில புத்தர் சிலைகள் கைகால்கள் உடைக்கப்பட்டு சுமார் 15 அடி ஆழமான குழிகளில் வீசப்பட்டிருந்ததையும், புத்தர் சிலைகள் சில இருந்த இடங்களில் தெய்வங்களின் சிலைகள் வைக்கப்பட்டிருப்பதையும் தான் கண்டதாகச் சேருவில விஹார தலைமை பிக்கு வண சுமேதங்கார நாயக்க தேரோ கூறினர்" என்று "ரிவிதின" பத்திரிகை எழுதுகிறது.

#### சுருட்டின் தாக்குதல்

"தமிழரசுக்கட்சி அரசாங்கத்தைச் சுருட்டால் தாக்குகிறது" என்று தலைப்பிட்டு சிங்களத் தினசரி "தவஸ" இம் மாதம் 17-ந் திகதி ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

அச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:

"அரசாங்கத்துக்கு வருமானம் கிடைக்கும் பொருட்களைப் பகிஷ்கரிக்கும்படி தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக் கொள்ளும் இயக்கமொன்றைத்தமிழரசுக்கட்சி தொடங்கவிருக்கிறது.

பகிஷ்கரிக்கப்படும் பொருட்களில் சிகரெட், சீனி, வெளி நாட்டு, உள் நாட்டு மதுபானம் ஆகியவைகளும் உண்டு.

இந்த மூன்று பொருட்களிலிருந்தும் தற்போது அரசாங்கத்துக்குப் பெரும் இலாபம் கிடைக்கிறது. சீனியைப் பகிஷ்கரித்தல் அரசாங்கத்தின் வரவு செலவைப் பாதிக்கக் கூடும்.

சீனியிலிருந்து 2,60,00,000 ரூபாயும் சிகரெட்டிலிருந்து, ரூ. 4,50,00,000 ரூபாயும், மதுபானத்திலிருந்து 1,00,00,000 ரூபாயும் அரசாங்கத்துக்கு வருடந்தோறும் இலாபம் கிடைக்கிறது.

பகிஷ்கரிக்கப்படும் பொருட்களுக்குப் பதிலாக வட, கீழ் மாகாணங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை உபயோகிக்குமாறு தமிழ் பேசும் மக்களிடம் கேட்டுக்கொள்ளுமாம். சிகரெட், சீனி, மதுபானம் ஆகியவற்றுக்குப் பதிலாக சுருட்டு, கருப்பட்டி, பனங்கள் ஆகியவை உபயோகிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படும்.

அரசாங்கத்துக்கு வருமானம் கிடைக்கும் பொருட்களைப் பகிஷ்கரித்தல் தமிழரசுக் கட்சி நடத்தவிருக்கும் ஒத்துழையாமை இயக்கத்தின் இரண்டாவது கட்டமாகும்".

#### இரகசியச் சதி

வட மத்திய மாகாணத்திலே ஓர் இரகசியச் சதியொன்று நடைபெறுகிறதென்றும், அந்தச் சதி வெற்றி பெற்றால் அனுராதபுரியிலுள்ள பௌத்த விஹாரைகளெல்லாம் தவிடு பொடியாக நொறுக்கப்பட்டுவிடலாமென்றும் அந்தப் பிரதேசத்திலே சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பிய ஒரு சிங்களவர் கூறியதாக ஒரு செய்தியை 'சலஸ' என்னும் சிங்கள மாலை (தினசரி) பத்திரிகை செப்டம்பர் 17ந் திகதி வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:

"சட்ட விரோதக் குடியேற்ற இந்தியர்களும், தோட்டத் தமிழரும், கத்தோலிக்க ஆக்கிரமிப்பாளர்களும் கைகோத்துக் கொண்டு இரகசிய சதியில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தங்களின் சதி மந்திராலோசனைகளை அனுராதபுரியிலும் வடக்கே சில தேவாலயங்களிலும் நடத்துகின்றனர். இன்று அனுராதபுரியில் வசிப்பவர்களில் 75 சத விகிதம் பேர் பௌத்தரல்லாதவர்களே. 50 சத விகிதம் பேர் தமிழர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழர்கள் ஒவ்வொரு நாளும் அனுராதபுரி மாவட்டத்துக்கு வந்து கொண்டிருக்கின்றனர். இந்தப் பகுதியில் குடியேறும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் விவசாயத்துக்காக மாதம் ரூ. 50 வீதம் கத்தோலிக்கத் தேவாலயத்திலிருந்து கொடுக்கப்படுகிறது தமிழன் அல்லது கத்தோலிக்கன் ஒருவன் இப்பகுதிக்குக் குடியேற வந்தவுடன் தரகர்கள் அவனைத் தேவாலயத்துக்கு அழைத்துச் சென்று அவன் பெயர், விலாசம் முதலியவற்றைப் பதிவு செய்வார்கள்.'

#### தமிழர்களிடம் சிங்களச் சிறுவர்கள் அடிமைகளாம்!

அண்மையில் கிழக்கிலங்கையில் மீன்பிடி வாடிகளில் பலவந்தமாக வேலைக்கமர்த்தப்பட்டிருந்த சிறுவர்களைப் பொலிஸார் கண்டு பிடித்து அவர்களை விடுவித்த செய்தியைச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பத்திரிகையான "சிங்களே" (11-9-63) வகுப்புவாதக் கண்ணோட்டத்திலே திரித்துஎழுதியுள்ளது.

தமிழர்கள் ஆயிரக்கணக்கான சிங்களச் சிறார்களைப் பிடித்து வடக்கே கொண்டு போய், அவர்களைத் தங்களின் அடிமைகளாக்கி அடித்துத் துன்புறுத்தி, கொடுமைப் படுத்தி வேலை வாங்குகிறார்களென்றும், சிங்கள நாட்டிலே சிங்களப் பிள்ளைகளை அடிமைகளாக்கி சித்திரவதை செய்து இரவு பகலாக வேலை வாங்குவது உடனடியாக விசாரணை செய்து நிவாரணமளிக்க வேண்டிய ஒரு தேசியக் குற்றம் என்றும் "சிங்களே" எழுதுகிறது.

சிங்களே மேலும் கூறுவதாவது:

(13-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசாங்க ஊழியர் கூட்டம்

கொழும்பு செப்—19.

தமிழ் அரசாங்க ஊழியர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 25-9-63 புதன்கிழமை மாலை ஆறு மணிக்கு கலாநிதி வ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும். தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் பிரச்சனைகள் பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்படும். தமிழ் பிரதேசங்களிலுள்ள அரசாங்க திணைக்களங்களின் சார்பில் பல பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்றும் நமது நிருபர்கள் அறிவித்துள்ளார்கள். தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களை எதிர் நோக்கும் பல முக்கிய பிரச்சினைகள் அன்று ஆராயப்படும் என்றும் அறியப்படுகிறது.

## பாரதி விழா

கொழும்பு செப்—18.

கவின் சிவகுருநாதன் தலைமையில் இயங்கும் கலை இலக்கியப் பேரவையின் சார்பில் பாரதி விழா ஒன்று சனிக்கிழமை (21-9-63) பிற்பகல் ஆறு மணிக்குப் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் தலைமையில் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருமதி மீனாட்சி பொன்னுத்துரை, பீ. ஏ., செல்வி சற்சொருபவதி நாதன் பீ. எஸ். ஸி, திரு. மு. சிவானந்தன் எம். ஏ., பேராசிரியர் ஆ. சின்னத்தம்பி ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். கலை நிகழ்ச்சிகளும், திரைப்படக் காட்சியும் விழா முடிவில் இடம் பெறும்.

## சந்தியில்....

தொலைபேசி கட்டுப்பாட்டிலாகாவிலுள்ள உயர்தர அதிகாரி ஒருவருக்கு 57 வயதாகிறது. அவருடைய மனைவி இறந்ததற்கு மூன்றேநாட்கள்தான் லீவு எடுத்தார். ஆனால் சிங்களச் சோதனை எடுப்பதற்காகப் பல நாட்கள் லீவு போட்டு விழுந்தடித்துக் கொண்டு படிக்கிறாராம். வயது போனாலும் பதவிக்காகப் பாடுபடுகிறார் அவர் பாவம்!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சிங்களப் பரீட்சையின்போது பரீட்சார்த்திகள் மிகுந்த கருணையுடன் நடந்து கொண்டனராம். அடையாளச் சீட்டுகளைக் கூட அவதானிக்காததனால் பலர் ஆள்மாறாட்டம் செய்தும் சோதனை எடுத்துள்ளனராம்.

சிங்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களைப் பகிஷ்கரிப்பது என்று தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளதை அடுத்து, சிங்களம் படித்து அம்மொழியில் கடமை புரிய ஆவல் கொண்டுள்ள தமிழ் ஊழியர்கள் பலருக்கு நடுக்கம் கண்டுள்ளது

ஓய்வுபெறும் வயதைத் தாண்டியும் பதவியில் ஒட்டிக் கொள்ள முயற்சித்த ஒருவர் ஓய்வு பெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்வதில் முனைந்துள்ளனராம்.

ஊரோடு சென்று வாழ ஆசைப்பட்டுச் சிங்களத்தில் கடமை புரிய முனைந்தும், மாறுதலுக்கு மனுப் பண்ணியுமிருந்த பலர், தங்கள் மனுக்களை வாபஸ்பெறுகின்றனராம். சிங்களத்தில் போதிய பயிற்சி பெற்ற தமிழர்கள் வட—கிழக்கு மாகாணங்களுக்குச் செல்லத்தான் வேண்டுமென்று மேலதிகாரிகள் வற்புறுத்தி மனுவை ரத்துச் செய்யமறுக்கின்றனராம். தங்கள் இனத்தவர்களான சிங்கள ஊழியர்கள் பகிஷ்கரிப்பினால் பாதிக்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லையாம்.

சிங்களம் படித்த பல தமிழ் இளைஞர்கள் ஏனைய தமிழ் இளைஞர்களுடன் உறவு கொள்ளத் தயங்கித் தாமாகவே ஒதுங்கி விடுகிறார்கள். இப்பரிதாப நிலை கொழும்பிலேயே தென்படுகிறது.

அரசாங்க லிகிதர் சேவா சங்கத் தூண்களில் ஒருவரும் சமசமாஜவாதியுமான ஒருவர் 3-ம் வகுப்பு சிங்களத்தில் சித்தியெய்தியதும், தமது "மேதா" விலாசத்தைக் காண்பித்துப் பிரலாபப்படுத்துகிறாராம். தமக்குத் தெரிந்த தமிழ் அன்பர்களுக்கும், மேலதிகாரிகளுக்கும் கூட "தானறியா"ச் சிங்களத்தில் கடிதம் வரைகிறாராம். மேலதிகாரி ஆங்கில மொழிபெயர்ப்புக் கேட்டதற்கு "உத்தியோக மொழியில் எழுதியுள்ளேன். இதற்கு மொழி பெயர்ப்புத் தர வேண்டியதில்லை" என்று அடம்பிடித்தாராம். வாழ்க அவருடைய அடிமை மோகம்.

— அம்மான்


# இது புதிது!

## இது முதல்தரமான! ஹன்சயா

கல்வனைஸ்ட் தகர வாளிகள்



★ இலங்கையில் செய்யப்பட்டது
★ பாவனைக்குச் சிறந்தது
★ சிக்கனமானது



'அன்னம்' அடையாள கல்வனைஸ்ட் வாளிகளையே கேளுங்கள்.



சென்ற் அந்தனீஸ் இன்டஸ்ரீஸ்
752, பேஸ்லைன் ரோட், கொழும்பு 9.

# சம்பள உயர்வுப் போராட்டத்தில்

## முழுமூச்சுடன் கலந்து கொள்வோம்

## மலையக மக்களுக்குப் புனர் வாழ்வு அளிக்கப் புதிய திட்டம்

### இ. தொ. கழக செயற்குழுக் கூட்டத்தில் முடிவு

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக இதர தொழிற் சங்கங்கள் போராட்டம் ஆரம்பித்தால் அந்தப் போராட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகமும் முழுமூச்சுடன் கலந்து கொள்ளும்.

இம்மாதம் 14, 15 ந் திகதிகளில் அட்டன் கழக அலுவலகத்தில் நடைபெற்ற கழகத்தின் மத்திய செயற்குழு க்கூட்டத்தில் மேற் கண்ட முடிவு செய்யப்பட்டது. இக் கூட்டத்தில் கழகத்தின் காப்பாளரான தமிழரசு தந்தை திரு. செல்வநாயகமும் கலந்து கொண்டார்.

கூட்டத்துக்கு இ. தொ. க. துணைத் தலைவர் திரு. ரெ. ம. ராமையா தலைமை வகித்தார்.

தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம், சம்பள நிலைகளைப்பற்றி ஆராய்வதற்காக நடவடிக்கை மேற் கொள்வதெனவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

#### மலைநாட்டுப் பிள்ளைகளின் கல்வி

தோட்டக் குழுவின் செலவினங்களுக்காக தோட்டக் குழுக்களால் வசூல் செய்யப்படும் பணத்தில் ஒரு சேமிப்புத் திட்டத்தை ஏற்படுத்துவதென்றும், வசூலாகும் பணத்தில் மிகக் குறைந்த அளவே செலவு செய்யப்படல் வேண்டுமென்றும், செலவு போக மீதியாகும் பணத்தை ஒரு நிதியில் சேமித்து வைப்பதெனவும், இந்த நிதியை மலைநாட்டுப் பிள்ளைகளின் கல்வி முதலிய நலன்களுக்கு மட்டுமே பயன்படுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கழகத்தின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக மாவட்டக் குழுக்கள் அமைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் காலஞ்சென்ற திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு. இராஜவரோதயத்தின் மரணம் குறித்து ஒரு அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## விமோசனம் வேண்டும்

[ஞா. பெ. அல்பிரட், டிக்கோயா]

1960 — 1961ம் வருடங்களில் பயிற்சிக் கலாசாலைப் புதுமுகப் பரீட்சையில் சித்தி பெற்ற தோட்டப் பாடசாலை ஆசிரியர்கள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டுப் பின்பு, தோட்டப் பாடசாலை ஆசிரியர்கள் என்ற காரணத்தினால் நீக்கப்பட்டது தெரிந்ததே.

இவர்களின் பரிதாபகரமான நிலையை உணர்ந்த, வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் "இவர்களின் கதி என்ன?" என்று பாராளுமன்றத்திலே, 1963ம் வருடம் ஜனவரி மாதம் 8ம் திகதி குரல் எழுப்பினர். இதற்கு விடையளிக்கும் முகமாக முன்னாள் கல்வி மந்திரி ஜனாப் பதியுதீன் மகமூத் அவர்கள், "தற்போது வேலையற்றிருக்கும் பயிற்றப்பட்ட தமிழாசிரியர்களுக்கு வேலை கொடுத்து, முடிவில் இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படும்" என வாக்குறுதியளித்தார்.

எனவே, இவ்வாண்டு, பயிற்றப்பட்ட தமிழாசிரியர்களுக்கு நியமனங்கள் கொடுத்துமுடிய எங்களையும் கல்வி மந்திரியார் கவனிக்க வேண்டுமென விண்ணப்பிக்கின்றோம். திரு. அமிர்தலிங்கம் எம். பி. அவர்கள், மீண்டும் இந்த விடயத்தில் தலையிட்டு எங்களுக்கு விடிவு பெற்றுத்தர வேண்டுகின்றோம்.

தமிழரசுத் தந்தையும், மற்றும் தலைவர்களும் எங்களுக்காகப் பரிந்து பேசுவார்கள் என எதிர்பார்த்திருக்கின்றோம். அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கத்தாரும், அனுதரவான நிலையில் இருக்கும் எங்கள் நிலைக்குப் பரிகாரம் தேடுவார்கள் என நம்பியிருக்கின்றோம்.

## சொற்பயிற்சி பிரசாரக் கூட்டம்

மஸ்கெலியாவைச் சேர்ந்த லெட்சுமி தோட்டம், பால்காமம் தோட்ட இலங்கைத் தொழிலாளர் கழக ஆதரவில் சொற்பயிற்சி பிரசாரக் கூட்டமொன்று லெட்சுமிதோட்ட இ. தொ. கழகத் தலைவர் திரு. எஸ். நடராஜா தலைமையில் 14-9-63 மாலை நடத்தப்பட்டது.

அவ்வமயம் இ. தொ. கழகப் பிரமுகர் திரு. தென்னரசு பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டார்.

அவர் குறிப்பிட்டதாவது:-

"தொழிலாளர்களின் நலன்களுக்காகச் சேவை செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸ் ஸ்தாபனம் உண்மைத் தலைவர்கள் மறைந்த பின் பதவி மோகமும், போட்டியும், பொறாமையும் நிறைந்த ஒரு ஸ்தாபனமாக மாறியதால், அவர்களின் உள் பூசலைத் தீர்ப்பதற்கே முடியாத தருணத்தில் எங்கே தமது செல்வாக்குக் குறைந்து விடுமோ என்ற காரணத்திற்காக, பிளவுபட்ட காங்கிரஸின் இரு பிரிவுகளும் ஒற்றுமையற்ற ரீதியில் போராட்டமென்ற நாடகம் நடிக்கத் தலைப்பட்டு விட்டன.

உண்மையில் காங்கிரசாரின் போராட்டம் நடைபெறப்போவதில்லை; நடைபெற்றால் இ. தொ. கழகத்தின் தார்மீக ஆதரவினை நாம் மகிழ்ச்சியுடன் அளிப்போம்."

## பிரஜா உரிமை

பத்துலட்சத்துக்கு மேற்பட்ட இந்திய வம்சாவளியினரில் இது வரை இந்தியப் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பித்தவர்கள் 59,318 பேரேயாகும். இவர்களில் 48,869 பேர் மட்டும் இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். பிரஜா உரிமை கோரி விண்ணப்பித்தவர்களில் 85 சதவிகிதமானோருக்கு உரிமை வழங்கியுள்ளது இந்திய அரசு. ஆனால் இலங்கை அரசோ, இலங்கைப் பிரஜா உரிமை கோரியவர்களில் 85 சத விகிதமானோருக்கு உரிமை மறுத்துவிட்டது.

# கதர் உடுத்தால்...?

—தமிழோவியன்—

வெள்ளைநிறக் கதர்வேட்டிச் சட்டை பூண்டு
வேகமிக நடைபோட்டுத் தோட்டம் விட்டுப்
பிள்ளைக்கும் பெண்டுக்கும் உடைகள் வாங்க
பெருமாளாந் தொழிலாளிப் பேராசை யோடே
கள்ளமிலா உள்ளத்தில் பல்லுணர்வு பொங்கக்
கடைவீதி வந்துபல கடைகள் சென்று;
அள்ளி(ப்)பலத் துணிகளையு மாய்ந்து பார்த்து
அதிற்பிடித்த சேலையுடன் சட்டை பெற்றார்!

மீதியுள்ள சில்லறையில் இனிப்புப் பண்டம்
மிகஅன்பு மகனுக்கு வாங்கிக் கொண்டு
வீதியிலே சுமையோடு நடக்கும் போது;
விருப்புப் பொலிசார் தடுத்து வைத்து
ஏதேதோ கேள்விகளைக் கேட்டு உருட்டி
ஏதுமறியாப் பெருமாளைக் காரில் ஏற்றி;
நீதிவழி இலங்கையனு? என்று காண
நிறுத்திட்டார் நிலையத்தில்! அந்தோ பாவம்!

பிறந்தஇடம் வளர்ந்தஇடம் வாழும் தோட்டம்,
பெண்சாதிப் பிள்ளைகளின் விபரங் கேட்டார்!
பிறந்தஇடம், பெற்றோர்கள், மறைந்த நாட்கள்,
பிறவிளக்கம் அடுக்கடுக்கா யளந்து கேட்டார்!
மறந்தவையை நினைக்காமல் மனதில் மிஞ்சும்
மற்றவையை உரைத்திட்டான்! பிடித்தோர் தாமும்
சிறந்தவர்க ளென்பதையே நிலைநாட்டிக் கொள்ளச்
சிந்தித்துப் பார்க்காமல் 'கள்ளத்தோணி' என்றே;

தொலைபேசி வழியாகச் செய்தி சொல்லத்
தோட்டத் துரையகனே மயங்கிட்டார்! கணக்கரோடு*
நிலைபேசி; பெருமாளின் பிறந்த தேதிபெற்று
நேராகப் பொலிசு நிலையம் வந்தார்!
அலைபோலக் கண்ணீரும் முகத்தி லோட
அழுகின்ற பெருமாளின் முதுகில் தட்டி;
மலைபோல வீற்றிருந்தக் காவற் தலைவர்கூட
மலைக்கின்ற சான்றுகளை எடுத்துப் போட்டார்!

"இப்போதோ அப்போதோ இலங்கை மண்ணில்
இருக்கின்ற ஆளல்லப் பெருமாளுந் தான்!
முப்பத்தோ ராண்டாய்(ப்) பிறந்தவீட்டில் வாழ்ந்து,
முதுகுடியின் வழிவழியா யுழைக்கு மாளை;
இப்போது பிடித்து வைத்துக் கள்ளத்தோணி
என்றியம்புவது முறையாமோ?" என்னும் போது;
"தப்பேதும் கொள்ளாதீர்! கதர்வேட்டிச் சட்டை(த்)
தலைமீது கட்டிருந்த முண்டாசு முற்றும்—


அப்படியே கள்ளத்தோணி ஆளைப் போல
அச்சாக விளங்கியதால் பிடித்து வைத்தோம்!
இப்படியே கதராடை உடுத்த வேண்டாம்—
எனஇம் மனிதனுக் கெடுத்துச் சொல்க!
எப்படியோ நடந்திட்ட(இக்) குறைக்கு எல்லாம்
என்றென்றும் பொறுப்பாளி நாங்க ளல்லோம்!
இப்போதே பெருமாளை யழைத்துச் செல்க!"—
—எனக்கூறி விடுவித்தார்! எந்தமிழா, ஐயோ!

(*தோட்டப் பெரிய கிளார்க்கரோடு)

# மலை நாடு

## பாரதி விழா

13-9-63-ல் சாமிணியர் குரூப் தங்க மலைத் தோட்டத்திலுள்ள காந்தி வாசிகசாலையின் சார்பில் பாரதி விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விழாவைத் திருக்குறளார் அவர்கள் தொடக்கிவைத்து, பாரதியாரின் கவிதையின் சிறப்பைப் பற்றியும், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பாரதி எடுத்த பங்கையும் பற்றிப் பேசினர். சிறுமிகள் பாரதியாரின் பாடல் இசைத்து விழாவைச் சிறப்பித்தார்கள். செல்விகள் ராஜலெட்சுமி, சிவந்தி, திரு. வி. நடராசன் ஆகியோர் பாரதியாரின் வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்களை யிட்டுப் பேசினார்கள். எஸ். கோவிந்தனின் நன்றியுரையுடன் விழா இனிது நடந்தேறியது.

பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
தந்தி தாமரை
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11
தொலைபேசி 3597—6522

# வர்க்க ஒற்றுமை பேசுவோரின் வகுப்பு வாதத் திட்டம்

## தமிழ்ப் பிரதேசத்திலும் சிங்களமே ஆட்சி மொழி

## மலைநாட்டு மக்களை நாடு கடத்த வேண்டும்

## இடதுசாரி ஐக்கிய முன்னணியின் இலட்சியம் இதுவே

(8-9-63 இதழ் தொடர்ச்சி)

"தமிழ் மொழிக்கு சிங்கள மொழியுடன் சரியாசனம் தருவோம்," என்று அடித்துக்கூறிய சமசமாஜிஸ்டுகள், பின்பு சில காலம் பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டு வதைப் போன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஒரு வேடமும் சிங்கள மக்கள் மத்தியில் வேறு வேடமும் போட்டு குட்டையைக் கலக்கி மீன் பிடிக்க முயற்சித்தார்கள். ஆனால் இந்நாட்டின் சிங்களப் பெரும்பான்மை அரசியல் வாதிகளின் இரத்தத்துடன் கலந்துவிட்ட துரோக புத்தி, வஞ்சனை தங்களை மட்டும் விட்டுவிடவில்லை என்பதை எடுத்துக்காட்ட இடதுசாரிகள் ஐக்கிய முன்னணியை அமைத்து "தமிழ் பேசும் மக்களே! இந்த நாட்டின் வரலாறே சிறுபான்மையினருக்குத் துரோகமிழைத்து வந்த வரலாறு! இதற்கு நாம் மட்டும் விதிவிலக்காக இருந்துவிட முடியாது. உங்களை ஏமாளிகளாக்கி விட்டோம்! நாங்கள் கூட்டாளிகள் கூடி விட்டோம்!" என்று எக்காளமிட்டுச் சிரிக்கிறார்கள்.

### விதண்டா வாதம்

தமிழ் மொழியைத் தரங்கெட்ட நிலைக்கு இன்று கொண்டு வந்திருக்கும் இடதுசாரிகள் தங்கள் மொழிக் கொள்கையின் மூலகர்த்தாவான காவஞ்

## சர்வ சிங்கள அரசை உருவாக்க

## தமிழ் தொழிலாளர் உடந்தையாவதா?

சென்ற பண்டாரநாயக்கா தமிழ் மொழிக்குக் கொடுப்பதாக அளித்த உறுதிமொழியிலும் குறைவாகவே தங்கள் கொள்கையை வகுத்துக் கொண்டுள்ளனர். ஆனால் தமிழ் இலங்கையில் உள்ள தொடை நடுங்கித் தோழர்களோ இடதுசாரி ஐக்கிய முன்னணியின் மொழிக் கொள்கையைக் கிழித்தெறியப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் மூலம் தமிழரசுக் கட்சி ஏற்றுவிட்டதாக வீண் விதண்டாவாதம் செய்கிறார்கள். பண்டா-செல்வா ஒப்பந்தம் உருவான சூழ்நிலை — அந்த ஒப்பந்தம் தமிழ் பேசும் மக்களுக்குப் பெற்றுத் தந்திருக்கக் கூடிய பெரு நன்மைகள்

—இவற்றை அறியாதவர் —உணரமுடியாதவர்கள் தான் அவ்வொப்பந்தத்தை முறையற்றது என்று கண்டிக்க முடியும்.

### ஒப்பந்தம் கூறுவது என்ன?

"பண்டா-செல்வா ஒப்பந்தம் ஒரு குறிப்பிட்ட சட்ட மறுப்பு இயக்கத்தைக் கைவிடுவதற்காக உருவாக்கப்பட்டது. அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைக் கொடுக்க மறுத்ததைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சி ஒரு கால எல்லையை அரசாங்கத்துக்குக் கொடுத்து அக்கால எல்லைக்குள் அரசாங்கம் தன் போக்கைத் திருத்தாவிட்டால் தமிழ் பேசும் மக்கள் நேரடி நடவடிக்கை ஆரம்பிப்பார்கள் என்று அறிவித்திருந்தது. அவ்வாறான நேரடி நடவடிக்கையை அரசாங்கம் விரும்பவில்லை. எனவே தமிழரசுக் கட்சிக்குக் கொஞ்சம் விட்டுக் கொடுத்து — ஒரு நேரடிப் போராட்டத்தைத் தவிர்க்க விரும்பியது. பண்டா—செல்வா ஒப்பந்தம் கட்சிகளின் கொள்கையை உருவாக்கவோ, அவற்றை நாட்டு மக்கள் வைத்து அரசாங்கத்தை கைப்பற்றவோ உருவான ஒப்பந்தம் அல்ல. மாறுக இரண்டு கட்சிகளின் கொள்கையிலும் எவ்விதமும் மாற்றம் ஏற்படுத்தாமலே தமிழ் பேசும் மக்களுக்குச் சில உரிமைகளை அரசாங்கத்தைக் கொடுக்க வைத்தது. அப்படி ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் பேசும் மக்களுக்கு தம் மொழி சம்பந்தமாக கிடைத்த உரிமைகள் இரண்டு. அவற்றுள் ஒன்று—தமிழ் வட, கிழக்கு மாகாணங்களின் அரசகரும மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இரண்டாவது—

**செங்கோன்**

தமிழ் இந்நாட்டின் தேசிய சிறுபான்மையினரின் மொழி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### சமத்துவம்

மொழி சம்பந்தமாக பண்டா-செல்வா ஒப்பந்தம் தமிழ் பேசும் மக்களுக்கு அளித்த உரிமைகளைச் சிறிது ஆராய வேண்டும். அப்படி ஆராயப்புகுமுன் இவ்வொப்பந்தம் ஏற்படுவதற்கு முன் தமிழ் பேசும் மக்களுக்கு அவர்கள் மொழி சம்பந்தமாக எதுவித உரிமைகளும் இருக்கவில்லை. இந்நிலையில் அவ்வொப்பந்தத்தின் மூலம் - சிங்களம் வட, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் எந்த அந்தஸ்தைப் பெற்றிருந்ததோ அதே அந்தஸ்தை வட, கிழக்கு மாகா

## தமிழ்ப் பகுதிகளை பகற்கொள்ளை அடிக்க இடதுசாரியினர் முயற்சி

ணங்களில் தமிழ் பெற்றது. இதை ஒரு உதாரணத்தினால் விளக்கலாம். வட, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் தமிழ் உபயோகத்திற்கு எவ்வகை வசதிகளை அவ்வொப்பந்தம் அளித்ததோ அதே வகை வசதிகளையே வட, கிழக்கு மாகாணங்களில் சிங்கள உபயோகத்துக்கு அவ்வொப்பந்தம் அளித்தது. நடைமுறையில் தமிழ் இலங்கையில் தமிழுக்கு இருந்த அந்தஸ்து தென்னிலங்கையில் சிங்களத்துக்கிருந்த அந்தஸ்தாகும். அதே போல தமிழ் இலங்கையில் சிங்களத்துக்கிருந்த அந்தஸ்து தமிழுக்குத் தென்னிலங்கையில் அளிக்கப்பட்டது தான்.

இரண்டாவதாகத் தமிழ் தேசிய சிறுபான்மையினரின் மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இலங்கையர் என்றால் சிங்களவர் என்று கருதி நடந்துவரும் இலங்கை ஏகாதிபத்திய அரசு, இலங்கை தனி ஒரு இனத்துக்குச் சொந்தமானதல்ல; இங்கே இன்னோர் இனமும் உண்டு, அதற்கென ஒரு மொழியும் உண்டு என்பதைச் சட்டப்படி ஏற்க வைத்தது இவ் ஒப்பந்தம், இவ்வொப்பந்தத்துடன்—இடதுசாரிகள் ஒப்பந்தத்தை நோக்குமிடத்து இரண்டுக்குமுள்ள வேறுபாடு தெற்றெனத் தெரியும்.

### பகற் கொள்ளை

இடதுசாரிகள் ஒப்பந்தத்தின் படி தமிழ் மொழி—வட, கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளில் ஒரு நிர்வாக மொழியாக மட்டுமே விளங்கும். யூ. என். பி. அரசாங்கத்தினால் விதைக்கப்பட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்கள், சிறி ல. சு. கட்சி அரசாங்கத்தினால் பலனுள்ள பயிராக வளர்க்கப்பட்டு, இடதுசாரி ஐக்கிய முன்னணியினால் அறுவடை செய்யப்பட்டுள்ளது. ஆம். தமிழ் இலங்கையில் சிங்களக் குடியேற்றத் திட்டங்களை யூ. என். பி. ஆரம்பித்தது. சிறி ல. சு. கட்சி அரசாங்கம் அவற்றை வளர்த்து உறுதிப்படுத்தியது. இப்பொழுது இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி சிங்களக் குடியேற்றத்தினால் பாதிக்கப்பட்ட பரம்பரைத் தமிழ்ப் பகுதிகளை தமிழ் பேசும் மக்களிடமிருந்து பகற்கொள்ளை அடித்து அபகரிக்கத் திட்டம் தீட்டி விட்டது.

இம்மூன்று கட்சிகளும் தமக்குள்ளே சிண்டு பிடித்தாலும் தமிழ் பேசும் மக்களை ஒழித்துக்கட்டும் முயற்சியில் ஒன்றுக்கொன்று துணை போகின்றன. ஒரு கட்சி சய்யத் தவறியதை மற்றக் கட்சி செய்து சிங்கள ஏகாதிபத்தியத்தை உறுதிப்படுத்துகிறது. தமிழ் இலங்கையின் பகுதிகளை அபகரிக்கத் திட்டம் தீட்டி விட்ட இடதுசாரி ஐக்கிய முன்னணி என்னும் கொள்ளையர் கூட்டம் எஞ்சிய தமிழ்ப் பகுதிகளில் தமிழுக்கு அளித்துள்ள அந்தஸ்து ஒரு நிர்வாக மொழி அந்தஸ்தே.

### வஞ்சனைத் திட்டம்

எனவே எஞ்சிய தமிழ்ப் பகுதிகளிலும் சிங்களமே அரசகரும மொழியாகவிருக்கும். இத்தகைய வஞ்சனைத் திட்டத்தைத், தமிழ் பேசும் மக்கள் மன்றத்தில் வைத்து அவர்களைப் பதுமுட்டாள்களாக ஆக்க நினைக்கும் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் நெஞ்சழுத்தம் தான் என்ன?

### இலங்கை பிளவுபடும்

தமிழ் பேசும் மக்கள் தங்கள் மொழிக்கு இலங்கை முழுவதிலும் சிங்களத்துடன் சம அந்தஸ்துக்குக் குறைந்த எதையும் ஏற்கமாட்டார்கள். காலம் தமிழ் பேசும் மக்களின் கோரிக்கையின் நியாயத்தைப் பெரும்பான்மை இனத்துக்கு எடுத்துக் காட்டும் என்றே நம்புகிறோம். தவறின் பிளவுபட்ட இலங்கையை இந்நாட்டு மக்கள் காணுவார்கள்.

### மலைநாட்டு மக்களையும் ஏமாற்றி விட்டது

தமிழ் பேசும் சிறுபான்மையினரின் மொழி சம்பந்தமாக துரோகம் இழைத்து விட்ட இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி தமிழ் பேசும் மக்களின் குடியுரிமைப் பிரச்சினையிலும் அவர்களைக் கைவிட்டு விட்டது. அரசியல் கோமாளி அசிஸ் அவர்களே அங்கலாய்க்கிறார் இடதுசாரி ஐக்கிய முன்னணி மலைநாட்டுத் தமிழ் பேசும் தொழிலாளர்களை ஏமாற்றி விட்டது என்று. இந்நாட்டிலே பிறந்து, இந்நாட்டிலே வளர்ந்து, இந்நாட்டுக்கே உழைத்து உருக்குலைந்து போன மலை நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் மனிதாபிமானமற்ற முறையில் நடைப்பிணங்களாக்கப் பட்டனர். மலைநாட்டுத் தமிழர்களுக்கு இந்நாட்டை விட வேறு நாடு கிடையாது. வெள்ளையர் ஆட்சியிலே அவர்கள் தங்கள் உரிமைகளை அனுபவித்து வந்தனர். அடுத்து வந்த யூ. என். பி. அவர்களை நாடற்றவராக்கி ஒரு புதிய பிரச்சினையை உருவாக்கியது.

இல்லாதிருந்த ஒரு பிரச்சினையைத் தானே உருவாக்கி அதை அயல்நாட்டு அரசாங்கம் தீர்த்துவைக்க வேண்டுமென எதிர்பார்க்கும் மட்ட ரக அரசியல் புத்தி இந்நாட்டின் சிங்கள ஏகாதிபத்தியவாதிகளுக்கே உரித்தானதாக இருக்கிறது. மார்க்சியம் பேசுகின்ற இலங்கையின் மானங்கெட்ட இடதுசாரிகளும் மலைநாட்டுத் தமிழர்பிரச்சினையை இந்தியப் பேரரசுடன் கதைத்துத் தீர்க்கமுயற்சிப்பது அவர்களின் துரோக புத்தியைத் தான் காட்டுவதாகும். எவ்வாறு யூ. என். பி., எஸ்.எல். எவ்.பி. கட்சிகள் நடத்திய சிங்களக் குடியேற்றங்களைக் கொண்டு தமிழ் இலங்கையைப்பகற்கொள்ளை கொள்ள இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி திட்டம் தீட்டி விட்டதோ அதே போல யூ. என். பி. நாடற்றவராக்கிய மலைநாட்டுத் தமிழர்களை இந்தியாவுக்குப் பாடைகட்டி அனுப்ப இடதுசாரி ஐக்கிய முன்னணி முடிவு செய்து விட்டது.

### முடியாது

இந்த நிலையில்தான் சமசமாஜத் தோழர் எட்மண்ட் சமரக்கொடி "புரட்சி" செய்யப்புகுந்து விட்டார். அவர் 'புரட்சி' வாழ்க! ஆனாலும் ஒரே ஒரு கேள்வி! "ஐயா! சமரக்கொடியே! பதினைந்து ஆண்டுகள் மலைநாட்டுத் தமிழர்கள் மிருகங்களிலும் கேவலமாக நடத்தப்பட்டு வருகிறார்களே? அவர்களுக்காக ஏன் உங்கள் சுட்டு விரலைக் கூட அசைக்க இதுவரை மறுத்தீர்கள்? ஏன் உங்கள் சிங்களத் தொழிலாளரையும் இணைத்து மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்கள் உரிமைக்குப் போராட மறுத்தீர்கள்? தமிழ்த் தொழிலாளர் உரிமைக்காக உங்களால் போராட முடியாது. ஆனால் சிங்களத் தொழிலாளர் போராட்டத்துக்கு நீங்கள் அரசாங்கம் அமைப்பதற்கு மட்டும் தமிழ்த் தொழிலாளர்களையும் சேர்க்க வேண்டுமா?' நீங்கள் வகுப்பு வேற்றுமை கடந்த வர்க்கப் போராட்ட வீரர்கள் என்றால் ஏன் பதினைந்து ஆண்டு காலம் காத்திருந்தீர்கள்? உங்கள் கையாலாகத்தனம் எங்களுக்குத் தெரியும். நீங்கள் தமிழ் பேசும் தொழிலாளரை ஏமாற்றி விட முடியாது. அரசியல் கோமாளி அசிஸே மனம் வருந்துகிறாரே உங்கள் போக்குக் கண்டு! துடிக்கும் இளமை, கொதிக்கும் செங்குருதி கொண்ட தமிழ் பேசும் தொழிலாளரை நீங்கள் எப்படி மயக்க முடியும்?

### ஏமாற்று வித்தை,

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் உடனடி வேலைத்

(11-ம் பக்கம் பார்க்க)


**உங்கள் வியாதி எதுவானாலும் தீர்த்துத் தருகிறோம்**



நரம்பு பெலவீனம், பெலக்குறைவு, குண்டிக்காய், மூத்திரப்பை கோளாறுகள், அசுத்த இரத்தத்தால் ஏற்படும் புண்புரைகள், படர்துகள், க்ஷயரோகம், இளைப்பு, இருமல், வலிப்பு, தீராத வயிற்று வலி, வாதம், வயிற்றுக் கோளாறுகள், பித்த சுாமாலை, சோகை, பாண்டு, அண்டவாய்வு, இரத்த மூலம், சீழ்மூலம், வெளி மூலம், பெண்களுக்கு ஏற்படும் சூதகக் கோளாறுகள், கெர்ப்பக் கோளாறுகள் இன்னும் பல டாக்டர்களால் கைவிடப்பட்ட நாட்பட்ட வியாதிகளினின்று பூரண குணமடைவதற்கு உடனே காலதாமதமின்றி புகழ்வாய்ந்த ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் MD. MS. (H) Cal. அவர்களைக் கலந்தாலோசியுங்கள்.

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# சமரச ஒப்பந்தம் கைச்சாத்தாகியது

## அரங்கம் 7

பார்ட்டனும் டபியும் தனியாகப் போகப் போவதை உணர்ந்த கிரிபித், அயர் பிரதிநிதிகள் மத்தியில் பிளவு ஏற்பட்டுவிட்டது என்பதை ஆங்கிலேயர் அறியாதிருக்கும் பொருட்டுத் தானும் வருவதாக அறிவித்தார், மூவருமாக லொயிட் ஜோர்ஜையும் சகாக்களையும் சந்தித்தனர்.

அயர் நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்றித் தர முடியுமென்றால்தான், தாம் பிரித்தானியப் பேரரசில் இருப்பதற்கு ஒப்புக் கொள்வதில் பொருளுண்டு என்று அயர் பிரதிநிதிகள் லொயிட் ஜோர்ஜிடம் கூறினர். அந்த நிபந்தனைக்குத்தான் ஒப்புக் கொள்ள முடியாதென்றும், எல்லை ஆணைக் குழு ஒன்றின் முடிவைப் பார்த்ததும் சிறுபான்மைப் புரட்டஸ்தாந்தர்கள் கத்தோலிக்கர்களோடு கூடியிருக்க ஒப்புக் கொள்வார்கள் என்று தான் நம்புவதாகவும் லொயிட் ஜோர்ஜ் பதிலளித்தார். அதன் காரணமாகப் பேச்சு வார்த்தைகள் முட்டுக் கட்டையொன்றுக்கு வந்தன. பேச்சு வார்த்தைகள் முடிந்ததாகவும் யுத்தம் ஒன்று தம்மை எதிர் நோக்குகின்றதென்றும் அயர் பிரதிநிதிகள் நம்பினர்.

மறுநாள், லொயிட் ஜோர்ஜ் முதல் நாள் பேச்சு

## குடியரசு வாதிகள் மத்தியில் குழப்பம்

வார்த்தைகளில் கலந்து கொள்ளாத மைக்கேல் கொளின்ஸைச் சந்தித்தார். கொளின்ஸை ஒரு மாதிரி வளைத்து, அயர் பிரதிநிதிகள் அனைவருடனும் அன்று பின்னேரம் இன்னுமொரு கூட்டத்திற்கு ஒழுங்கு செய்யும்படி கேட்டார்.

அயர் பிரதிநிதிகள் அனைவரும் பிற்பகல் 3-00 மணிக்கு ஆங்கிலப் பிரதிநிதிகளைச் சந்தித்தனர். எந்த உத்தேச உடன்படிக்கைகளை அயர் அமைச்சரவை நிராகரித்ததோ அதே உடன்படிக்கைகளை ஏற்றுக் கையொப்பமிடுமாறு லொயிட் ஜோர்ஜ் வற்புறுத்தினார். அயர் பிரதிநிதிகள் மறுக்கவே, லொயிட் ஜோர்ஜ், முன்னர் ஆதர் கிரிபித் தனக்குக் கொடுத்த வாக்குறுதியை நினைவூட்டினார். உண்மையில் லொயிட் ஜோர்ஜின் அரசியல் வாழ்வைக் காப்பாற்றுவதற்காக அளிக்கப்பட்ட வாக்குறுதியேயன்றி அது கிரிபித்துக்கு எதிராகப் பாவிக்கப்பட வேண்டிய வாக்குறுதியல்ல. எனினும், தன் வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக ஆதர் கிரிபித், தன் அரசாங்கத்திற்குக் காட்ட வேண்டிய விசுவாசத்தை மறந்து, தன் சகாக்களுக்கும் குடியரசுக்கும் காட்ட வேண்டிய விசுவாசத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, தான் உடன்படிக்கையில் கையொப்பமிட ஒப்புக்கொள்வதாக அறிவித்தார்!

லொயிட் ஜோர்ஜ் வெற்றியடைந்துவிட்டார். எனினும் அந்த வெற்றியைப் பூரணமாக்க அவர் எண்ணினார். அயர் பேராளர் குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், கையொப்பமிடாவிட்டால் அயர்நாடு உடனடியாக யுத்தத்தை எதிர்பார்க்க வேண்டும் என்று பயமுறுத்தினார். தம் இறுதி முடிவை இரவு 9-00 மணிக்குத் தெரிவிப்பதாகக் கூறிவிட்டு அயர் பிரதிநிதிகள் ஆங்கிலப் பிரதிநிதிகளை விட்டுப் பிரிந்தனர்.

இரவு 9-00 மணியாகியது; 10-00 மணியாகியது; 11-00 மணியாகியது, நள்ளிரவாகியது. இன்னும் அயர் பிரதிநிதிகள் லொயிட் ஜோர்ஜைச் சந்திக்கச் செல்லவில்லை. அவர்கள் சிந்தித்துக் கொண்டிருந்தனர். ஆதர் கிரிபித்தோடு ஏமன் டக்கன் தானும் கையொப்பமிடுவதாகக் கூறினார். இன்னும் மூன்று பேர் பாக்கி

## மந்திரி சபையில் கோஷ்டி மனப்பான்மை

யிருந்தனர். இன்னுமொரு யுத்தத்தை அயர் குடியரசு இராணுவம் தாங்க மாட்டாது என்று எண்ணிப் போலும் மைக்கேல் கொளின்ஸும் கையொப்பமிட ஒப்புக்கொண்டார். கொளின்ஸ் ஒப்புக்கொண்டதினால் அதிர்ச்சியுற்றதினாலும், தன்னால்தான் மீண்டும் யுத்தம், ஏற்பட்டது என்ற பழி வரக் கூடாது என்ற காரணத்திற்காகவும் இந்த உடன் படிக்கையை அயர் அமைச்சரவை' நிச்சயமாக நிராகரிக்கும் என்று நம்பியதாலும் ரொபட் பார்ட்டன் கைச்சாத்திட ஒப்புக்கொண்டார். தான் மட்டும் எஞ்சி நிற்பதில் பொருளில்லை என்று எண்ணி கவன் டபியும் கையொப்பமிட மிகவும் தயக்கத்துடன் ஒப்புக்கொண்டார். இவ்வளவு பேரும் ஏன்தான் டப்ளினிலுள்ள தம் அமைச்சரவையுடன் தொலை பேசியிலாவது தொடர்பு கொள்ளாது கைச்சாத்திட ஒப்புக் கொண்டார்கள் என்பது

## இரத்த வெள்ளம் அளித்த ஐரிஷ் விடுதலை

இன்றும்தான் புதிராக இருக்கின்றது!

ஐந்து பிரதிநிதிகளும் லொயிட் ஜோர்ஜின் அலுவலகத்திற்குச் சென்றனர். வின்ஸ்தன் சேர்ச்சில் கபடப் பார்வையோடு காணப்பட்டார். ஆங்கிலப் பிரதிநிதிகள் அனைவரும் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்க அயர் பிரதிநிதிகள் ஐவரும் 6-12-1921 முற்பகல் 2-15க்கு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். பேராளர் குழுவின் செயலாளர் ஏஸ்கின் சில்டேஸ் தன் நாட்டின் சுதந்திரம் பறிகொடுக்கப்படுவதைத் தாங்க முடியாது அலுவலகத்திற்கு வெளியே அழுது கொண்டிருந்தார்!

## அரங்கம் 8

ஆங்கிலேயருக்கும் தமக்குமிடையில் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதை ஆதர் கிரிபித் உடனடியாகக் குடியதிபதிக்கு அறிவிக்கவில்லை. ஆனால் பத்திரிகைகளுக்குக் கொடுத்துவிட்டு ஒப்பந்தத்திற்காகப் பிரசாரமும் செய்யத் தொடங்கினார். பத்திரிகைகள் மூலம் ஒப்பந்தத்தைப் பற்றி அறிந்த நேரத்தில்தான் ஏமன் டக்கனும் உடன்படிக்கை உறுப்புரைகளுடன் டப்ளினை அடைந்து குடியதிபதியைச் சந்தித்தார்.

நாட்டில் எஞ்சியிருந்த அமைச்சரவை உறுப்பினர்களான கதல் புருகா, ஒஸ்ரின் ஸ்ரக், வில்லியம் கொஸ்கிராவ் ஆகிய மூவரும் குடி

**'கோமகன்'**
**'மாமல்லன்'**

யதிபதியை அவசரம் அவசரமாகச் சந்தித்தனர். அமைச்சரவைக்கு அறிவியாது கையொப்பமிட்டதற்காக ஆதர் கிரிபித், மைக்கேல் கொளின்ஸ், ரொபட் பார்ட்டன் ஆகிய மூவரையும் பதவி நீக்கஞ் செய்யக் குடியதிபதி மற்றவர்களிடம் சம்மதம் கேட்டார். இந்த மூவரும் விளக்கம் கொடுக்க அனுமதிக்கப்பட வேண்டும் எனக் கொஸ்கிராவ் கேட்டதின் பேரில் டி வேலரா அந்தக் கடும் நடவடிக்கையை எடுக்காது, 8-12-1921 நண்பகல் நடைபெறவிருக்கும் மந்திரி சபைக் கூட்டத்திற்காக உடனடியாக வரும்படி லண்டனிலிருந்த மூவருக்கும் அழைப்பாணை அனுப்பினார்.

மந்திரி சபைக் கூட்டத்திற்காக வரும் மூவரையும் தேசத் துரோகத்திற்காகக் கைது செய்வதற்கு அயர் குடியரசு இராணுவத் தளபதிகள் ஆயத்தம் செய்தனர். இதைக் கதல் புருகா தடுத்துவிட்டார். மந்திரி சபைக் கூட்டம் ஆரம்பமாகியது. யுத்த பயமுறுத்தல் காரணமாகத்தான் தாம் கையொப்பமிட்டதாகக் கையொப்பமிட்டவர்கள் கூறினர். எனினும் குடியரசுக்கு விசுவாசமாக இருப்பதாகச் சத்தியம் செய்த ஆதர் கிரிபித் உண்மையிலேயே குடியரசில் நம்பிக்கையற்றவர் என்பது கூட்டத்தின் போது தெரிய வந்தது. ஆதர் கிரிபித்தின் வாதங்களைக் கேட்ட பின் விலியம் கொஸ்கிராவ்

## பெண்கள் ஆதரவு குடியதிபதிக்கே

ஒப்பந்தத்திற்குச் சாதகமாகப் பேசத் தொடங்கினார். வாக்குக்கு விடப்பட்டபொழுது ஆதர் கிரிபித், கொளின்ஸ், ரொபட் பார்ட்டன், விலியம் கொஸ்கிராவ் ஆகிய நான்கு அமைச்சர்கள் சாதகமாகவும் குடியதிபதி டி வேலரா, கதல் புருகா, ஒஸ்ரின் ஸ்ரக் ஆகிய மூவர் பாதகமாகவும் வாக்களித்தனர். அமைச்சரவையில் முடிவு ஏற்படாது போகவே அயர் மன்றம் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று 14-12-1921-க்குப் பாராளுமன்றம் அழைக்கப்பட்டது.

'தோள் அயரின்' கூடி முடிவு செய்யும்வரை நாட்டு மக்களைப் பொறுமையோடு இருக்கும்படி குடியதிபதி டி வேலரா வேண்டிக் கொண்டார். இதற்கிடையில் ஒப்பந்தத்துக்கானவர்கள் தமக்கு ஆதரவு தேடுவதில் முனைந்தனர். ஈஸ்டர் வாரப் புரட்சியைத் திட்டமிட்டு நடாத்திய பெருமையுள்ள நிறுவனங்களில் அயர் குடியரசு மன்றமும் ஒன்று. சின் பீன் எனும் அரசியல் கட்சி குடியரசுக்குப் போரா

## விடுதலை விரும்பிகள் மத்தியில் கருத்து வேறுபாடு

டுவதற்காகப் புனரமைப்புச் செய்யப்பட்ட பின்பும் அ. கு. மன்றம் இரகசியமாக இயங்கியே வந்தது. அ. கு. மன்றத்தின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவர் மைக்கேல் கொளின்ஸ். அவர் உறுப்பினராக இருக்கின்றார் என்ற காரணத்துக்காக அ. கு. மன்றத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பந்தத்துக்காக வாக்களிக்க வேண்டும் என்று பிரசாரம் செய்யப்பட்டது. அது மட்டுமல்லாது குடியரசு இராணுவத்தின் தலைமைப் பீடத்திலிருந்த பலரும் அ. கு. மன்றத்தைச் சேர்ந்தவர்களே. இதனால் ஒப்பந்தத்துக்காக அ. கு. இராணுவத்தினர் மத்தியிலேயும் பிரசாரம் செய்யப்பட்டது. இந்தப் பிரசாரத்திற்கெல்லாம் உற்சாக மூட்டுவதாக இருந்தது கத்தோலிக்க திருச் சபையைச் சேர்ந்த 15 உறுப்பினர்கள் உடன்படிக்கைக்குத் தமது ஆதரவைத் தெரிவித்தது.

பிரித்தானிய மக்கள் சபையிலும் பிரபுக்கள் சபையிலும் அயர் மன்றத்தில் போல் 14—12—1921ல் ஒப்பந்தத்தின் மேலான விவாதம் ஆரம்பித்தது. உடன்படிக்கைகளை ஆதரித்து லொயிட் ஜோர்ஜ், வின்ஸ்தன் சேர்ச்சில் முதலியோர் மிகவும் நுணுக்கமாகப் பேசி ஆதரவு கோரினர். அயர்நாட்டுச் சிறுபான்மையினரான புரட்டஸ்தாந்தர்களின் பிரதிநிதிகளான இணையாளர்கள் ஒப்பந்தத்தை எதிர்த்துப் பேசினர். எல்லை ஆணைக் குழு ஒன்று ஏற்படுத்தப்படுவதை அறவே வெறுத்தனர். ஆனால் அந்த ஆணைக் குழுவில் ஆங்கிலேயரின் பிரதிநிதியொருவர், வட அயர் நாட்டுப் பிரதிநிதியொருவர், தென் அயர் நாட்டுப் பிரதிநிதியொருவர் ஆக மூவர் இருக்கப் போவதால் அதனால் வட அயர்நாட்டு இணையாளர்களுக்கு நயமேயன்றி நட்டமில்லையென்பதை அவர்கள் உணரத் தவறிவிட்டார்கள். எனினும் ஒப்பந்தம் மிகக் கூடிய பெரும்பான்மை வாக்குகளால் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அயர்நாட்டில் 14—12—1921ல் தோள் அயரினில், கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்கு அயர் மன்றம் சம்மதம் தெரிவிக்கின்றது என ஆதர் கிரிபித் முன்மொழிய விவாதம் ஆரம்பமாயிற்று. குடியதிபதி டி வேலரா பிரேரணைக்கு ஒரு திருத்தத்தைக் கொண்டுவர முற்பட்ட பொழுது ஒப்பந்தத்திற்குக் கானவர்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பிரிவை ஏற்படுத்த விரும்பாத குடியதிபதி தன் பிரேரணையை மீளப் பெற்றார்.

நடைபெற்ற விவாதத்தில் கொளின்ஸ், தளபதி சோண் மக்கியன், கெவின் ஓ கிக்கின்ஸ், டாக்டர் பட்றிக் மக்காட்டன், விலியம் கொஸ்கிராவ், ஏமன் டக்கன் முதலியோர் ஆதர் கிரிபித்தை ஆதரித்துப் பேசினர்; கையொப்பமிட்ட காரணத்திற்காக ரொபட் பார்ட்டன், கவன் டபி ஆகிய இருவரும் ஒப்பந்தத்தை ஆதரித்துப் பேசினர்; அ. கு. மன்ற உறுப்பினரும் அயர் இராணுவத் தண்டநாயகனுமான றிச்சட் மல்க்கஹி போரொன்றுக்கு இராணுவம் தயாராக இல்லை என்று ஒப்பந்தத்தை ஆதரித்தார். ஆனால், 700 ஆண்டுகளாக அயர்நாட்டை ஆண்டுவரும் அன்னியரை அகற்ற ஆயுதந் தாங்க ஓடோடி வந்த இவர்கள் இப்பொழுது மரணத்துக்கு அஞ்சுவது வியப்பாகவே இருந்தது.

குடியதிபதியை ஆதரித்து ஒஸ்ரின் ஸ்ரக் பேசினார், கைச்சாத்திடப்பட்டிருக்கும் உடன்படிக்கை ஆநிலப் பதத்தைக்கூட அயர்நாட்டுக்கு அளிக்கவில்லை என விளங்கப்படுத்தினார் சட்ட வல்லுநரான ஏஸ்கின் சில்டேஸ், பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் குடியதிபதியை ஆதரித்தனர். ஈஸ்டர் வாரப் புரட்சிக்குப் பின் சுடப்பட்ட தோமஸ் கிளாக்கின் கைம்பெண், ஈஸ்டர் வாரப் புரட்சிக்குப்பின் சுடப்பட்ட

(13-ம் பக்கம் பார்க்க)

# சுதந்திரன்

SUTANTIRAN

1963 செப்டம்பர் மாதம் 22-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண்: 3411 த. பெ. 1183


## சிங்களத் திணிப்பும் அரசாங்க ஊழியரும்

அடுத்த ஆண்டு தொடக்கம் தனிச் சிங்களம் தலை விரித்தாட வேண்டுமென்பது சிங்கள ஏகாதிபத்திய அரசாங்கத்தின் நிர்க்கமான முடிவு. ஆனால் அந்த முடிவு மூன்று மாதங்களுக்கு முன்பே அமுலுக்கு வருகிறது. இன்னும் எட்டே நாட்களில் சிங்களப் பேயாட்டம் தொடங்கிவிடும். அன்றே தமிழ் பேசும் மக்களின் பகிஷ்கரிப்பு இயக்கமும் ஆரம்பமாகும்.

அதன்பின் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் கதி என்ன? இதுபற்றி இவ்வாரம் மந்திரிகள் முடிவின்றி விவாதித்தனர். அடுத்த வாரமும் விவாதிப்பார்களாம். சிங்கள வகுப்புவாதிகளைத் திருப்திபண்ணக் கூடியதாகவே அவர்களின் முடிவு இருக்கும். இதில் ஐயம் வேண்டாம்!

சிங்கள அரசாங்க ஊழியர்கள் சிலர் அன்று தமிழ், ஆங்கில சுடிதங்களைப் பகிஷ்கரித்து அரசாங்கத்துக்குச் சவால் விட்டனர். அவர்களிடம் அடிபணிந்து சரணாகதி அடைந்த ஆட்சியாளர் அடுத்த ஜனவரி முதற்திகதி தொடக்கம் சிங்களம் நிச்சயம் அமுலாக்கப்படும் என்று கண்ணை மூடிக்கொண்டு உறுதி கூறினர். அத்திகதியில் சிங்களத்தை அமுலாக்க முடியுமா என்பதை அப்பொழுது மந்திரிகள் ஆராயவில்லை, பிறகுதான் ஆராயத் தொடங்கினர்.

அரசாங்க ஊழியர்களில் 40 சத விகிதம் பேர்களே சிங்களம் படித்துள்ளனர் என்று சிங்கள அமுல்பற்றி விசாரணை செய்ய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளது. எஞ்சிய 60 சத விகிதம் பேர்களுக்குச் சிங்களமே தெரியாதாம். இந்த இலட்சணத்தில் தனிச் சிங்களம் அமுலுக்கு வந்தால் அரசாங்க இலாகாகளின் நிர்வாகம் பெரும்பகுதி சீர்குலைந்து விடுமென்பதில் ஐயமில்லை.

நிர்வாகச் சீர்குலைவுபற்றி வகுப்புவாதிகள் கவலைப்படவில்லை, நாடு குட்டிச் சுவரானாலும் சிங்களத்தைத் திணித்துவிட வேண்டும்—அதுவே அவர்களின் அபிலாஷை. தமிழ் அரசாங்க ஊழியர்களை விரட்டியடித்துவிட்டு, அந்த இடங்களைச் சிங்களவர்களைக்கொண்டு நிரப்பிவிட வேண்டுமென்பது சிங்கள வகுப்புவாதிகளின் திட்டம். சிங்கள நாட்டிலே சிங்கள மந்திரிகளால் சிங்களத்திலே நடத்தப்படும் சிங்கள அரசாங்கத்தில் சிங்களவர்களே ஊழியர்களாக இருக்க வேண்டுமென்பது அவர்களின் கோரிக்கை.

அரசாங்கத்தின் மீது சிங்கள வகுப்புவாதிகளின் நிர்ப்பந்தம் பெருமளவு அதிகரித்துள்ளது. பௌத்த பலவேகய, ஜாதிக்க விமுக்தி பெரமுன, சிங்கள ஜாதிக்க சங்கமய, சமஸ்த லங்கா ராஜ்ய விபிகரு சங்கமய முதலிய சிங்கள வகுப்புவாத ஸ்தாபனங்கள் அரசாங்கத்தை நெருக்குகின்றன. அவற்றின் எந்தக் கோரிக்கையையும் நிராகரிக்க முடியாத நிர்ப்பந்த நிலைமை ஆட்சியாளருக்கு ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் வகுப்புவாதிகள் கையில் சிக்கித் தவித்துக் கொண்டிருப்பினும், தமிழ் அரசாங்க ஊழியர்களின் நிலைமை தெளிவாக இருக்கிறது.

சிங்களம் படிப்பதுமில்லை—ஓய்வு பெறுவதுமில்லை; இது அவர்களின் திட்டவட்டமான முடிவு. சிங்களத்தைப் படித்து, சொந்த இனத்தை அழிக்கும் சதிச் செயலுக்கு உடந்தையாக இருக்க அவர்கள் தயாரில்லை.

அரசாங்க உத்தியோகங்களில் சிங்களவர்களையே அமர்த்த வேண்டுமென்ற வகுப்புவாதக் கூச்சலுக்கு ஆட்சியாளர் தலைவணங்குவதால், "சிங்களம் படித்தும் பயனில்லை" என்பதைத் தெளிவாக உணர்ந்துள்ளனர் தமிழ் ஊழியர்கள். அவர்களின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிக்கும் முயற்சியில் சிங்கள வகுப்புவாதிகள் நிச்சயம் தோல்வியே காண்பார்கள்.

தமிழ் ஊழியர்களை வெளியேற்றிவிட்டு, சிங்களத் திணிப்புடன் சேர்த்துச் சிங்களவர் திணிப்பையும் நடத்த மந்திரிகள் முயற்சி செய்தால், தமிழ் பேசும் தேசிய இனம் தனியாட்சி நிறுவ வேண்டிய நிர்ப்பந்த நிலைமையை அவர்களே உருவாக்கியவர்களாவர். மந்திரிகள் இந்த உண்மையை உணராமலிருக்க முடியாது.

இன்று மந்திரிகளின் முழு முயற்சியும் சிங்களத் திணிப்பைத் தீவிரப்படுத்துவதே. அவர்கள் தமிழ் பேசும் மக்களின் உணர்ச்சியை மதிக்கவோ, அவர்களின் நிலையை ஆராயவோ, அவர்களின் கருத்தைத் தெரிந்துகொள்ளவோ தவறிவிட்டனர்; மறுத்துவிட்டனர். அதில் மந்திரிகளுக்குச் சிரத்தையும் கிடையாது.

சிறுபான்மை இனத்தை முற்றிலும் அலட்சியம் செய்வது, அப்படி ஓர் இனம் இந்நாட்டில் இருப்பதை அங்கீகரிக்க மறுப்பதாகும். சிறுபான்மை இனம், இனமாற்றம் செய்யப்பட்டுப் பெரும்பான்மை இனத்துள் ஐக்கியமாகிவிட்டதென்பதே அதன் கருத்து.

அடுத்த வாரம் சிங்களத் திணிப்புத் தமிழ்ப் பிரதேசங்களில் அமுலாக்கப்படும் போது தமிழ் பேசும் மக்கள் பெரிதும் கஷ்டப்படுவார்கள். சொந்த அலுவல் நிமித்தம் கச்சேரிக்கோ, அரசாங்க அலுவலகங்களுக்கோ செல்லும் தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரும் ஒரு சிங்களவரையும் கையோடு அழைத்துச் செல்ல வேண்டிய நிலைதான் ஏற்படும். இல்லையேல் தமிழ் பேசும் இனத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் சிங்களம் படித்து, சிங்களவராக மாறிவிட வேண்டும்.

இம்மாதிரியான இழி நிலையைத் தமிழ் பேசும் சமுதாயம் அனுமதிக்க முடியாது. அவர்கள் தங்களின் இனம், மொழி, கலாச்சாரம், பண்பாடு, தன்மானம் ஆகியவற்றை நிச்சயம் பாதுகாக்கவே வேண்டும். அதற்கு உரிமைப் போராட்டத்தை நடத்துவதைத் தவிர வேறு வழி கிடையாது. நாம் சுதந்திர மனிதர்களாக இந்த நாட்டில் தலை நிமிர்ந்து வாழ வேண்டுமானால், ஏகோபித்து எதிர்த்து நின்று சிங்களத் திணிப்பைக் கட்டாயமாக முறியடித்தே தீரவேண்டும். நாம் இன்று ஓர் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளோம். போராட்டமின்றி இனி ஓர் அங்குலமும் முன்னேற முடியாது.

## சிங்களத் தினசரியின் விஷமம்

## தமிழரசுத் தந்தை மறுப்பு

சூட்டரீதியான இலங்கைத் தொழிலாளர் கழகத்தையிட்டுத்தான் இரத்தினபுரி வாடி வீட்டில் வைத்து தொழிலாளர்களைச் சந்தித்து உரையாடினேனே தவிர எதுவித இரகசியக் கூட்டமோ, 'நாம் தமிழர்' இயக்கத்துக்கு ஆதரவு தேடும் கூட்டமோ நடத்தவில்லை" என்று சிங்களத் தினசரியன 'லங்கா தீப' வெளியிட்ட ஒரு பொய்ச் செய்திக்கு மறுப்புத் தெரிவித்து அப் பத்திரிகை ஆசிரியருக்கு திரு. செல்வநாயகம் அறிவித்துள்ளார்.

அவர் தமது மறுப்பில் மேலும் கூறுவதாவது:

எனது இரத்தினபுரி விஜயத்தையிட்டு உங்கள் பத்திரிகை பொய்யான செய்தியை வெளியிட்டுள்ளது. இ. தொ. கழகம் சம்பந்தமாகவே நான் இரத்தினபுரி சென்றிருந்தேன். அங்கு ஒழிவு மறைவாக எதுவும் நடைபெறவில்லை. 'நாம் தமிழர்' இயக்கம் பற்றியும் எதுவும் நடைபெறவுமில்லை. பண்டாரநாயக்க மாவத்தை 6ம் இலக்கத்தில் இருப்பது எங்கள் தொழிற் சங்க அலுவலகமாகும். இங்கும் 'நாம் தமிழர்' இயக்கத்துக்கான எதுவித வேலைகளும் நடைபெறுவதில்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். பொய்யான திரிப்புச் செய்தியை அனுப்பிய உங்கள் நிருபர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கோருகிறேன்.

["லங்கா தீப" என்னும் சிங்களத் தினசரி, "இரத்தினபுரியில் 'நாம் தமிழர்' இயக்கத்தை வலுப்படுத்துகின்றனர்" என்ற தலைப்பின் கீழ் ஒரு செய்தியை 19-9-63ந் திகதி பிரசுரித்துள்ளது.

அச் செய்தி மேலும் கூறுவதாவது:

"நாம் தமிழர் இயக்கத்தால் இம்மாதம் 20ந் திகதி காவத்தையில் நடாத்தவிருந்த கூட்டத்தை நிறுத்துவதற்காகவும், மலைநாட்டு தோட்டப் பகுதிகளைக் கைப்பற்றுவதற்காகவும் ஒரு திட்டம் தீட்டி, இரத்தினபுரி மாவட்டத்தில் இந்த இயக்கத்தை வளர்க்கும் நோக்கத்துடன் தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இன்னும் சில முக்கியஸ்தர்களுடன் இரத்தினபுரி வாடி வீட்டுக்கு வந்து இரகசிய சம்பாசனைகள் நடத்தியிருப்பதாக அறியப்படுகிறது.

இரத்தினபுரி மாவட்டத்தில் வேவல்வத்தை, அலுபொல, ரம்புக்கனை, கிரிஎல்ல, கெட்டே தென்ன, ரக்வானை, டெப்டன் ஆகிய தோட்டங்களிலிருந்து வந்த "நாம் தமிழர்" இயக்கத்தின் தலைவர்களெனப்படுவோர் இந்த சம்பாஷணையில் கலந்து கொண்டனர், பண்டார வளையில் 'நாம் தமிழர்' இயக்கத்தினர் நடத்திய கூட்டம் சம்பந்தமாகவும் சம்பாஷணை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்த இயக்கத்தை இரத்தினபுரி மாவட்டத்தில் வலுப்படுத்துவது பற்றியும் பேசப்பட்டதாம்.

கிடைத்துள்ள கடைசிச் செய்திகளின்படி இரத்தினபுரி பண்டாரநாயக்க வீதியிலுள்ள ஒரு கட்டிடத்தில் இரவு பகலாக இந்த இயக்கம் பற்றிய இரகசிய அமைப்புத் திட்டம் செயல்படுவதாகத் தெரிகிறது.

"நாம் தமிழர்" இயக்கத்தை நசுக்குவதற்காக "நாம் சிங்களவர்" என்ற பெயரில் ஓர் இயக்கம் இரத்தினபுரியில் ஆரம்பிக்கப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.]

## இந்திய வர்த்தகரை ஒதுக்க இலங்கரத்தின திட்டம்

இலங்கைப் பிரஜைகளாக இருந்தும் வர்த்தகத்திலீடுபட்டிருக்கும் இந்திய வம்சாவளியினரிடமிருந்து எல்லா வர்த்தகங்களையும் பறிமுதல் செய்துவிடுவதற்கான திட்டமொன்று நீதி மந்திரி டி. பி. இலங்கரத்தினவால் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் ஆரம்பக் கட்டமே ஜவுளி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இந்திய வர்த்தகர்களை இப்போது தண்டிக்க முனைந்திருப்பதாகும்.

சென்ற வாரத்தில் மந்திரியார் கூட்டிய ஜவுளி வர்த்தகர்களின் கூட்டங்களில் மந்திரி திரு. இலங்கரத்தின கண்மூடித்தனமாக நடந்து கொண்டும் காரசாரமான கண்டனங்களை அவர்கள் மேல் சுமத்தியும், பொறுப்பற்ற குற்றச்சாட்டுகளைப் பொழிந்தும் வெறுப்பாக நடந்து கொண்டதாகக் கூறப்படுகிறது. இதிலிருந்து அவருடைய திட்டம் என்னவென்பது தெளிவாகப் புலப்படுகிறது.

"எம்மை ஒழித்துக்கட்டி விட்டார்" என்று தூது கோஷ்டியில் சென்ற பிரமுகர் ஒருவர் மகாநாட்டு முடிவில் வாய்விட்டுக் கூறியதாக தெரியவருகிறது.

இலங்கைப் பிரஜைகளாகியிருக்கும் இந்திய வம்சாவளியினரை 'கள்ளமார்க்கெட்காரர்கள்' என்று பட்டதாமம் சூட்டியும், தேசத் துரோகிகள் என்று அவமானப்படுத்தியும் ஒதுக்கித் தள்ளிவிடவும் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

இதன் ஒரு பகுதி தான் கௌரவப் பிரஜா உரிமை வழங்கப்பட்டவர்களிடமிருந்து, அதைப் பறித்து அவர்களையும் நாடற்றவர்களாக்க முனைந்திருப்பதாகும். இதை அடிப்படையாகக் கொண்டுதான் அதற்கான பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் கொண்டுவரப் படவிருக்கிறது.

இனிமேல் இறக்குமதி செய்ய விரும்பும் இந்திய வர்த்தகர்கள் மீது அரசாங்கம் தீவிர கண்ணோட்டம் செலுத்தவிருக்கிறது. இறக்குமதி அனுமதி கொடுக்கப்படுவதற்கு முன்னர், அதற்கான எல்லா விபரங்களும் மேலிடத்துக்கு அறிவிக்கப்பட வேண்டுமெனவும் பிரதமருடைய ஆலோசனையின்படிதான் இறக்குமதித் தொகைக்கான "கோட்டா" வழங்கப்படவிருப்பதாகவும் நம்பகமாகத் தெரிய வருகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

## முருங்கைக்காய் சுமந்த "பிரமுகர்"

(நமது யாழ். நிருபர்)

கடந்த புதன்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் முருங்கைக்காய்க் கட்டுடனும், வாடி வதங்கிய பூமாலையுடனும் யாழ். கல்வி அதிகாரி திரு. சோமசேகரம் காணப்பட்டார். கல்வி இலாகா நிரந்தரக் காரியதரிசி திரு. ஜினதாசா அன்று யாழ்தேவியில் கொழும்பு நோக்கிப் பயணமானார். அவருக்கு அன்பளிப்புச் செய்யவே முருங்கைக்காயைச் சுமந்து கொண்டு திரு. சோமசேகரம் வந்திருந்தார்.

புகைவண்டியைக் காத்துக் கொண்டிருந்த பல பிரமுகர்களை அணுகி "ஒரு விஷயம் ... வாருங்கோ ... வாருங்கோ" என்று அழைத்து வந்து அந்த அதிகாரிக்கு அறிமுகப்படுத்தினார். "யாழ்ப்பாண நாட்டில் தானும் ஒரு 'பிரபல பிரமுகர்' என்பதை வெளிக்காட்டவே இந்த வேடங்கள் போடுகிறார்" என்று அங்கிருந்த பலர் அவரைப் பரிகசித்தது அவருடைய காதுகளுக்கு நிச்சயம் கேட்டுத்தானிருக்கும்.

## சுதந்திரன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியில் உள்ளவர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.

அட்டன் பகுதிக்கான இடைவிறுதிப் போட்டி 5—10—63 சனிக்கிழமை காலை 10 மணிக்கு அட்டன் இந்து மகா சபை மண்டபத்தில் ஆரம்பமாகும். போட்டிப் பொறுப்பாளராக திரு. இ. நாகேந்திரம் கடமையாற்றுவார். கண்டிப் பகுதியில் உள்ளவர்களும் அட்டனில் நடைபெறும் போட்டியிலேயே கலந்து கொள்ளவேண்டும்.

பதுளைப் பகுதிக்கான இடைவிறுதிப் போட்டி 5-10-63 சனிக்கிழமை காலை 10 மணிக்கு பதுளை—தேவாலய வீதியிலுள்ள சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும். போட்டிப் பொறுப்பாளராகத் திரு. தமிழோவியன் கடமையாற்றுவார். அவரின் முகவரி; தமிழோவியன், 180, லோவர் வீதி, பதுளை என்பதாகும்,

அட்டன், பதுளை பற்றிய ஏனைய விபரத்திற்கு அடுத்த இதழைக் கவனிக்கவும்.

# சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுள்ளவரே பிரதமரை அணுகலாம்

## திருமலை நோக்கி தமிழரசார் பயணம்

திருகோணமலைத் தொகுதி இடைத் தேர்தலுக்கு வேட்பாளர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு நியமிக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேர்தல் குழு இம்மாதம் 25ம் திகதி திருமலைக்கு விஜயம் செய்யவிருக்கிறது. இக்குழு, தொகுதி பூராவும் சென்று நிலைமையைத் தெளிவாக ஆராய்ந்து தனது முடிவைக் கட்சி மத்திய குழுவிற்குச் சமர்ப்பிக்கும்.

திருமலைத் தொகுதி மக்கள் உண்மையான தமிழ்த் தொண்டன் ஒருவனை தமிழ் பேசும் மக்களுக்கு அளிப்பதற்கு இச் சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கட்சியுடன் நீண்ட காலமாக ஈடுபாடுடையவராகவும் மக்கள் நலனில் நாட்டமுடைய ஒருவராகவும் இருக்கக்கூடிய ஒருவரைக் குழு தேர்ந்தெடுப்பதற்கு வசதியாகத் தொகுதி பூராவும் உள்ள தமிழரசுக் கட்சி அனுதாபிகள் குழுவினருக்குப் பேட்டி கொடுக்கத் தவறக் கூடாது.

அன்றைய தினம் அமரர் இராஜவரோதயத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற விருப்பதால் வேறு பல தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர்களும் திருமலைக்குச் செல்லக் கூடும்.

25ந் திகதி பிற்பகல் திருமலை காளி கோவில் வீதியில் இரங்கற் கூட்டம் ஒன்று நடைபெறும் என்றும் அறியப்படுகிறது.

### ஆட்சியினர்க்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல தடவைகள் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தும் கூட சிங்களம் படியாமலும், உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற மாட்டோம் என்ற உறுதியுடனும் பல ஊழியர்கள் திடமாக விருக்கின்றனர். இவர்களை 1964 ஜனவரியில் என்ன செய்வது என்பதைப்பற்றி எதுவித முடிவுக்கும் வர முடியாமல் அரசாங்கம் திண்டாடுகின்றது. 'சிங்களம் படியாதவர்கள் உத்தியோகத்திலிருந்து விரட்டப்படுவர்' என்று எந்த இடத்திலும் அரசு வற்புறுத்தவேயில்லை.

சிங்களத் தேர்வு பெறாமல் இருக்கும் பல தொழில் நுட்ப ஊழியர்களைப் பொறுத்தமட்டில் அவர்களையும் இழந்துவிட அரசாங்கம் தயாரில்லை. அவர்கள் வெளியேறினால் நாட்டின் நிர்வாகத்திலும் செயற்பாடுகளிலும் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்றும் அரசாங்கம் கருதுகிறது. இந்தக் கருத்துடன் தொழில் நுட்ப ஊழியர்களுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கும் பட்சத்தில், அரசாங்கம் பாரபட்சம் காட்டுகிறது என்றும் பெரும் கூச்சல் கிளம்பக்கூடும். அதனால் அரசாங்கத்தின் கொள்கைகள் பொடிப் பொடியாகி விடக்கூடும் என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

சிங்கள அமுலையும் அரசாங்க ஊழியர்களின் நிலையையும் இட்டு எதுவிதமான தீர்க்கமான முடிவையும் ஏற்படுத்த முடியாத சூழ்நிலையில் அரசாங்கமும் மந்திரி சபையும் திணறிக் கொண்டுள்ளன.

### அமைதியாக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசும் இனம் ஒரு தேசிய இனமாக இருந்து வருகிறது. அந்த இனம் வேற்று மொழி வந்து தங்கள் மத்தியில் புகுவதை விரும்பாது. தாங்கள் விரும்பாத மொழியைத் தடுத்து நிறுத்துவதற்காகவே இப்போராட்டத்தைச் சாத்வீக முறையில் நடத்துவதற்குத் தமிழ் பேசும் மக்கள் முயலுகிறார்கள்.

"தமிழரசுக்கட்சியின் போராட்ட முறைகள் யாவும் சாத்விகச் சத்தியாக்கிரக முறைகளையே அடிப்படையாகக் கொண்டவையாக இருந்து வருவது உலகம் அறிந்த உண்மை. காலிமுகக் கடற்கரையில் நடந்த சத்தியாக்கிரகமும், 'ஸ்றீ'ப் போராட்டங்களும், 1962ம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகமும், கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்களும் அகிம்சையின் அடிப்படையிலேயே நடைபெற்றவை. அகிம்சையை ஆயுதமாகக் கொண்டு அறப்போரிலீடுபடுவோரான தமிழ் பேசும் மக்களுக்கெதிராக இராணுவமும், காடையர் கூட்டமும் ஏவப்படுவது நாடறிந்த விடயமே. இம்முறை கூட நாம் அகிம்சையை ஆயுதமாகக் கொண்டு அறப் போராடும் போதும் பழைய அடக்குமுறைகளே அவிழ்த்து விடப்படக்கூடும். அவற்றை எண்ணி நாம் நமது உரிமைப் போரில் பின் வாங்குவோமேயாயின் நமது இனம் அழிந்து விடும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. நாம் வாழ வேண்டுமானால் நாம் அறப்போராட்டங்கள் மூலம்தான் நமது உரிமைகளைப் பெற்றாக வேண்டும்.

"பகிஷ்கரிப்பு இயக்கம் தனிப்பட்ட எவரையும் பாதிப்பதாகாது. தமிழ்ப் பிரதேசங்களான—வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிங்களத்தை அமுலாக்க முடியாத சூழ்நிலையினை உருவாக்குவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்" இவ்வாறு திரு. செல்வநாயகம் மேலும் கூறினார்.

## மொழிப் பிரச்சினை பேட்டிக்கு பிரதமர் விதித்துள்ள கட்டுப்பாடு

பிரதம மந்திரியுடன் மொழிப் பிரச்சினை சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடாத்த விரும்புபவர்கள் முதலில் சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக்கொண்டவராக இருத்தல் வேண்டுமாம். இத்தகவலை நீதி மந்திரி அவர்கள், அவரைப் பேட்டி காணச் சென்ற தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிலரிடம் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

கடந்த வாரம் கொழும்பில் கூடிய தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிலர் தங்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினை சம்பந்தமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி அதைப் பிரதம மந்திரியிடம் சமர்ப்பிப்பதாக முடிவு செய்திருந்தார்களாம். இத் தீர்மானத்தைப் பிரதமரிடம் சமர்ப்பிக்கச் சென்ற குழு நீதி, நிதி மந்திரிகளை முதலில் பேட்டி கண்ட பொழுதே இக் கருத்தை நீதி மந்திரி வெளியிட்டிருந்தாராம்.

மேலும் சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக்கொள்ளாத எவருடனும் மொழிப் பிரச்சினை சம்பந்தமாக மந்திரிகளும் பேச்சுவார்த்தை நடாத்தக் கூடாது என்று பிரதமர் கட்டளை பிறப்பித்துள்ளாராம்.

ஆங்கில மொழி மூலம் சேவையில் சேர்ந்த தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தூதுக் குழுவினர் மந்திரிகளுக்கு எடுத்துக் கூறிய பொழுது, நீதி மந்திரி அவர்கள் சிங்களம் படிக்க மறுப்பின் சேவையை விட்டு விலக வேண்டும் என்றும் கூறியுள்ளாராம்.

### இந்திய...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

#### மற்றொரு காரணம்

இதேசமயத்தில் மந்திரி இலங்கரத்தின இந்தியர்களுக்கெதிராக இந்த மாதிரியான திடீர் நடவடிக்கைகளை எடுத்து வருவதற்கு இன்னும் ஒரு காரணம் கூறப்படுகிறது. அது என்னவெனில்; அடுத்த ஆண்டில் தேர்தலை நடத்துவதற்கான திட்டமாகும்.

தேர்தல் செலவுகளுக்காக சுதந்திரக்கட்சி பணம் சேமித்து வருவதாகக் கூறப்படுவதும் திரு. இலங்கரத்தினவின் இந்தத் திட்டத்துடன் சம்பந்தப்பட்டதாக இருக்கக்கூடுமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.


### வன்னியர் வாய் மொழிகள்

"தமிழன்னையின் உரிமையைக் காப்போம், பெருமையைப் பேணுவோம், என்றெல்லாம் ஒருபுறம் பேசிக்கொண்டு, இன்னொருபுறம் தமிழல்லாத இன்னொரு மொழியைக் கைக்கொள்வோமேயானால் அதைவிடச் சிரிப்புக்கிடமான செயல் பிறிதொன்றில்லை. நாமே நமது தமிழ் மொழியைப் புறக்கணிப்பவர்கள் ஆவோம். ஆகவேதான் எந்தத் துறையிலும் தமிழ் மொழியைக் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எல்லாம் தமிழியக்கத்தை ஆதரித்து அதனைக் கைக்கொள்ளும்படி வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

*

பணம் கொடுக்கிற விஷயம் ஒன்றுதான் இலஞ்சம் என்று சொல்ல முடியாது. பதவி கொடுப்பதும், பறிப்பதும் கூட இலஞ்ச ஊழல் தான். பிரதமர் பதவியை பலப்படுத்துவதற்காக நம் பிக்கை, நாணயம் அற்றவர்களுக்கும் பதவிகள் வழங்குகிறார். இதற்காக இலஞ்ச விசாரணைக் கமிஷன் முன் முதலில் நிறுத்தப்பட வேண்டியது பிரதமரே!


உழவுத் தொழிலுக்கு உகந்த உன்னத ஜோடி !
டேவிட் பிரவுண் டிராக்டர்
அது புதிய கொர்ரி டில்லர்



துரித வேலை — கூடுதல் லாபம்!
ஆச்சர்யகரமான புதிய கொர்ரி டில்லரை உங்களது டேவிட் பிரவுனுடு சேர்த்து பணியாற்றும் போது லாபத்தையும் நேரத்தையும் வெகுவாக மிச்சம் பிடிக்கலாம்.
அங்கீகாரம் பெற்ற எல்லா வியாபாரிகளிடத்திலும், அநுராதபுரத்திலுள்ள எமது சொந்தக்கிளை வேலைத்தளத்திலும் எப்பொழுதும் பரிபூரண ஸ்டொக்கான பாகங்களும் அதனுடன் முதல்தரமான சேவையும் இட்டும், பயிற்றப்பட்ட நபர்களைக் கொண்ட முழுச் சாதனங்களையும் உடைய சேர்விஸ் வேன்கள், உங்கள் சாதனம் எப்பழுக்கின்றி இயங்குவதற்கு உத்தரவாதமளிக்கும்!
அஸோஷியேட்டட் மோட்டோர்வேய்ஸ் லிமிட்டெட்


### தென்னைச் செய்கைக்கு காணி விநியோகம்

முல்லைத் தீவுக் காரியாதிகாரிப் பிரிவில் உள்ள பத்திபுரம் என்னுமிடத்தில் நடுத்தர வகுப்பினருக்குத் தென்னைச் செய்கைக்கு நிலம் வழங்கப்படவுள்ளது. ஒருவருக்கு ஐந்து முதல் பத்து ஏக்கர் வரை கிடைக்கும். காணி பெற விரும்புவோர் 1963 புரட்டாதி 30-ம் திகதிக்கு முன்னர், அரசாங்க அதிபர் வவுனியா என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும். 1963ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20-ம் திகதி காணிக் கச்சேரி நிகழும். விபரங்களுக்கு 30—8—63 அரசாங்க வர்த்தமானி மூன்றும் பகுதியைப் பார்க்கவும்.

# கதிர் ஆறு கருமுகில்

பனிப்படுக்கையில் நழுவிச் செல்லும், 'நாய் வண்டி' யைப் போல, 'ஹில் எஸ்டேட்'டின் கீழிறங்கும் மலைப் பாதையில், கார்கள் இரண்டும் விரைந்து செல்கின்றன. திடீர் திடீர் எனப் பொழியும் மழை, தார் வீதியைப் பளிங்காகக் கழுவி வைத்திருக்கின்றது. கன்னியின் மேடுபள்ளமற்ற கன்னத்தின் பளபளப்புப் போன்ற வீதியில், காயும் கதிரவனின் உவப்பான கதிர்களிடையே புகுந்து விரைகின்றன கார்கள்.

ஒளிக்கதிர்கள் சில வேளைகளில் காரின் முன் கண்ணுடியினூடாக உள்ளே நுழைந்து, அதனுள் இருந்த ஐவரையும் குளிப்பாட்டுகின்றன; கண்களுள் நுழையும் ஒளிக் கதிர்களுக்கு அஞ்சிச் சிறிய தாயின் முதுகிற்குள் பதுங்குகிருள் உமா.

கதிர்கள் சில வேளை முன்னுசனத்தில் அமர்ந்திருக்கும் ராஜாவின் கன்னத்தில் பட்டுத் தெறிக்கின்றன; சில வேளை கார் டிரைவரின் கன்னத்தில் படிகின்றன. மலைப் பாதையின் வளைவு நெளிவுத் திசைகளுக்கொப்பக் கதிர்களின் தாக்கமும் அமைந்து சிதறுகிறது.

ராமையா பின்னுசனத்தின் மூலையொன்றில் சுற்றுடலை மறந்து தூங்குகிறுர். காரினுள் நிலவிய அமைதியைச் சாவித்திரி சிறிக் கலைக்கின்றுள்:

'என்ன தம்பி! பேசாமல் இருக்கிறீங்க...? பிரயாணக் களைப்பா...?'

அவன் திரும்பிப் பார்க்கிறுன்; உமா சிறிய தாயின் பின் தோளில் சாய்ந்து கிடக்கிருள்.

'அப்படி யொன்றுமில்லை..'

'இந்தப் பிரயாணத்தை உங்களால் அனுபவிக்க முடிகிறதா...?'




கூட்டாக எழுதும் தொடர் கதை

'பிரயாணம் நல்லாத்தான் இருக்கு...! மலைகளும், நதிகளும், மரங்களும் நிறைந்த இமமலைநாட்டினுள் பிரயாணம் செய்வது மனதுக்கு அமைதியைத் தருகின்றது...'

உமா இப்போது வெடுக்கென்று தலையை நிமிர்த்துகின்றுள்: 'அப்படியானுல் உங்களுக்கு மனதில் அமைதியில்லை பா?'

அவன் ஒரு கணம் திடுக்குற்றுப் போகிறுன்:

'எதைக் கொண்டு கேட்கிறீர்கள்?...'

'நீங்கள் இப்போது கூறிய வார்த்தைகளைக் கொண்டு தான் கேட்கிறேன்...'

'நான் எனக்கு மனதில் அமைதியில்லையென்று கூறவில்லையே...?' அவன் முகத்தில் படர்கின்ற அசட்டுக் களையினூடே குரல் பரிதாபமாக ஒலிக்கிறது.

உமாவின் இதழ்க் கோடியில் புன்னகை நெளிகிறது:

'நீங்கள் கூறவில்லை; ஆனுல் உங்களுடைய வார்த்தைகள் கூறுகின்றன! மலைநாட்டில் பிரயாணம் செய்வது மனத்திற்கு அமைதியைத் தருகிறதென்ருல், உங்களுக்கு முன்பு மனதில் அமைதி இருக்கவில்லை என்று தானே அர்த்தம்?'

'கெட்டிக்காரி' என்று அவன் மனம் கூறிக் கொள்கிறது; முகத்தைத் திருப்பிக் கண்ணுடியினூடாக வெளியே பார்க்கிறுன்.

காதுகளில் சாவித்திரி சிரிப்பது கலகலக்கிறது:

'தம்பி, 'எஸ்டேட்' களைப் பார்த்தீர்களா? அவைதான் இலங்கையின் பொருளாதார முதுகெலும்பு......

அவன் திரும்பவும் முகத்தைத் திருப்புகிறுன்; சாவித்திரி கதையை வேறு வழியில் மாற்ற முயல்கிருள் போலிருக்கிறது. 'என் அமைதி இன்மையை உமா சுட்டிக் காட்டிக் கிளறி விட்டாளே என்பதனுல், இவள் என் மனதை வேறு வழியில் திருப்பி விட முயல்கிருளா? நான் அமைதியை இழந்தா தவிக்கின்றேன்?'

'ஆம். அந்தப் பொருளாதார முதுகெலும்பைப் பாதுகாக்கின்ற தொழிலாளரின் நிலைமையைக் கண்டீர்களா? வெகு பரிதாபத்துக்குரிய

செங்கை ஆழியான்

தாக இருக்கிறது! பிரஜா வுரிமை...வசிப்பதற்கு நல்ல வீடுகளில்லை ......மாட்டுக் கொட்டில்கள் போல இருக்கின்றன!......அவர்களுடைய குழந்தைகள் படிப்பதற்குத் தக்க வசதிகளில்லை...'

'இந்நிலைமைக்குக் காரணம் என்ன, என்று கருதுநீர்கள்?...'

'இலங்கையின் பொருளாதாரத்தில் இந்தியத் தொழிலாளர்களின் முக்கியத்துவத்தை உணரத் தவறிவிட்ட, இந்த அரசாங்கம் தான்...'

'அது மட்டுமல்ல...' என்ருள், உமா: 'சொந்த நாட்டை—பிறந்த, உழைத்துப் பொன் கொழிக்க வைக்க வழி தெரியாமல், இக்கரைச் சீமையில் பொன் திரட்டலாம் என்ற நப்பாசையால் இங்கு இறக்குமதியாகி, இந்த நாட்டைப் பொன் கொழிக்க வைக்கிருர்களே, அவர்கள் மீதுதான் பிழை...'

'அந்தப் பிழையைச் செய்தவர்களில் இன்று எவருமேயில்லை...இன்று இருக்கின்ற பத்து லட்சம் தொழிலாளர்களும் இலங்கையில் பிறந்தவர்கள்! இந்தியாவின் மண்ணையே அறியாதவர்கள்......! இலங்கையில் பிறந்தவர்களை, இலங்கையின் மண்ணில் புரண்டவர்களை, இலங்கைப் பிரஜைகளே அல்ல என்று கூறுவது எவ்வளவு பிழை?...'

அவன் பேசுவதை ஆச்சரியத்தோடு, கண்களை மலர்த்திக் கேட்கிருள் உமா. அவன் தொடர்கிறுன்:

'அரசாங்கத்தின் பிழையைச் சுட்டிக் காட்ட ஒரே ஒரு வழிதான் இருக்கிறது! தோட்டத் தொழிலாளர்கள் அத்தனை பேரும் தக்க தொரு தலைமையின் கீழ் ஒன்று திரள வேண்டும்! பிரிந்து பிரிந்து பலருடைய தலைமையின் கீழ் சிதறிக் கிடப்பதினுல் ஒரு போதும் பயன் கிடைத்து விடப் போவதில்லை! ஒன்றுசேர்ந்து ஒரே குரல் எழுப்பப்படும் போதுதான் அரசாங்கத்தின் காதுச் சவ்வுகளை அக்குரல் தாக்க முடியும்!...'

கார்கள் விரைந்து கொண்டிருக்கின்றன.

ராமையாவின் நித்திரை கலைந்ததாகத் தெரியவில்லை; சாவித்திரி பின்னுல் சாய்ந்து அமர்ந்து கொள்கிருள்.

'இன்றுகாலை நாங்கள் முதலில் போனுேமே, ஒரு 'எஸ்டேட்' டிற்கு? அங்கு நடந்த கலாட்டா நினைவிருக்கிறதா? யாரோ ஒரு கங்காணி, 'ஒரு பெண்ணிடம் தவருக நடந்து கொண்டதற்காக, அவனை இரத்த வெள்ளத்தில் மிதக்க வைத்து விட்டார்களே...?'

உமா குறுக்கிடுகிருள்:

'அவனுக்கு அதைவிட வேறு தண்டனை கொடுக்க முடியாது!...'

'அதை நான் சொல்லவில்லை......இத் தோட்டத் தொழிலாளர்கள் இத்தகைய பெரிய விஷயங்களில் படுகின்ற அதே விதமான கோபத்தைத்தான், மிக அற்ப விஷயங்களுக்கும் படுகிருர்கள்! இரு பெண்களுக்கிடையில் அற்ப விஷயத்திற்காகத் தொடங்குகின்ற சச்சரவு, பின் ஆண்களுக்கிடையில் அடிதடியாகி, கத்தி வெட்டு அளவுக்கு மாறிவிடுகிறது! இதற்குக் காரணம் என்ன தெரியுமா...?'

ராஜா கேள்விக்குறியோடு பேச்சை நிறுத்துகின்றுன்; பெண்களிருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றுர்கள்.

'அவர்களுடைய மனத்தன்மை அப்படி...? 'அவர்களின் வாழ்க்கை அப்படி...?' என்று கூறிய சாவித்திரி, அவனைப்பார்க்கிருள். அவன் புன்னகைக்கிறுன்:

'அவர்களின் வாழ்க்கை அப்படி என்று கூறிவிடுவது தவறு! அவர்களுடைய மனத்தன்மை அப்படி என்று கூறினீர்களே, அது உண்மைதான்! ஆனுல், அத்தகைய ஒரு மனத்தன்மை—அற்ப விஷயங்களுக்காகக் கச்சை கட்டுகின்ற மனநிலை ஏற்பட என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்...?'

பெண்கள் இருவரும் திரும்பவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கிருர்கள்; அவன் தொடர்கிறுன்;

'வாழ்க்கை வசதிக்குறைவு தான், அம் மன நிலைக்குக் காரணம்! நாடில்லையே என்ற மனநிலை, வாழ்க்கையை நடாத்தப் போதிய வருவாய் இல்லையோ என்ற கவலை, எல்லாம் ஒருங்கே சேர்ந்து இவர்களின் வாழ்க்கையில் ஒருவித விரக்தியை ஏற்படுத்தியிருக்கிறது! விரக்திதான் எடுத்ததற்கெல்லாம் ஆத்திரமடைய வைக்கிறது...'

'உண்மைதான்...' என்கிருள் உமா.

கார்களின் விளக்குகள் இருளடைந்த வீதியை ஒளியாக்குகின்றன.

* * *

ராஜகோபாலின் விழிகள் மெதுவாக மூடுகின்றன; காரின் ஆசனத்தில் நன்கு சாய்ந்து, கண்களை மூடிக்கொள்கின்றுன்.

இனந்தெரியா வேதனைகள் மனதில் எழுகின்றன; அக்காரில் அவனேடு நான்கு பேர்கள் இருந்தும், ஏதோ மீளாத தனிமையில் ஆழ்ந்து அமிழ்ந்து போவது போல இருக்கின்றது.

கார்கள் விரைந்து கொண்டிருக்கின்றன.

'சித்தி!...'

உமா, சாவித்திரியை விளிக்கின்ற குரல், அவன் காதுகளில் விழுகின்றது.

'என்ன, உமா?...'

சாவித்திரியின் வினவிற்குச் சிறிது நேரம் பதில் கிடைக்கவில்லை; எனவே, சாவித்திரி திரும்பவும் கேட்கிருள்:

'என்ன உமா?...'

'எனக்கு ஒருவர் படிப்பிக்கிருர், சித்தி! அவர் இவரைப் போலவே இருப்பார்...'

அவன் காதுகள் கூர்மையாகின்றன; 'அட ஆண்டவா, உலகத்தின் பிரச்சனையே இதுதானு?'

'அவருக்கு என்ன, உமா?' சாவித்திரியின் வார்த்தைகளில் ஒருவித கலக்கம் இருப்பதாக அவனுக்குப் படுகிறது.

'அவர் மிக நல்லவர்; மிகவும் இரக்கமான இதயம் படைத்தவர்; பிறர் கலங்குவதைக் கண்டால் கலங்கிப் போய் விடுவார்; அவர் ஒரு பெண்ணை நேசித்தார்; அவர்களுடைய காதல் மூன்று நான்கு வருடங்களாக முறிவின்றி இருந்தது! சித்தி...... காதலுக்குத் தடைகள் எவ்வெவ் விதங்களில் உண்டாக முடியும் என்று நினைக்கிறீர்கள்?......' உமா ஒரு கேள்வியோடு நிறுத்துகிறுள்,

'காதலுக்குத் தடைகள்... எவ்வெவ் விதத்தில்...' அவன் இதயம் ஏனே உயர்ந்து தாழ்கிறது. சாவித்திரி கூறப் போகின்ற பதிலைக் கேட்க அவன் காதுகள் துடிக்கின்றன.

'காதலுக்குக் குறுக்கே சாதி, சமயம் நிற்கலாம்...... பண ஏற்றத் தாழ்வுகள் இருக்கலாம்... பெற்றேர்கள் விரும்பாமல் குறுக்கே தடையாகலாம்...'

'இல்லைச் சித்தி, இல்லை...' என்று குறுக்கிடுகிருள் உமா. 'நீங்கள் ஆகப் புறத்தடைகளைத்தான் பார்க்கின்றீர்கள்! அகத்தடைகள் சிலவும் இருக்கின்றன...!'

'அதென்ன தடைகளடி உமா?'

உமா சிறிது மௌன நிஷ்டையில் ஆழ்கிருள்.

'நான் சொன்னேனே, எனக்கு ஒருவர் படிப்பிக்கிருர் என்று, அவருடைய காதலுக்குப் பெற்றேர்கள் தடை விதிக்கவில்லை! ஆனுல், அவர்களே தடை விதித்துக் கொண்டார்கள்...'

'ஏன்...?'

சாவித்திரி கேட்ட 'ஏன்' என்ற கேள்வியைக் கேட்க அவனும் தன்னையறியாமனுல் வாயெடுத்தான். ஆனுல் வார்த்தை உருப்பெறவில்லை.

'மன வேற்றுமை தான், காரணம் சித்தி! அவருடைய குணவியல்புகளோடு அவளால் ஒத்துப்போக முடியவில்லை! அவளுடைய குணவியல்புகளோடு அவரால் ஒத்துப்போக முடியவில்லை......'

'ஆராவது ஒருவர் விட்டுக் கொடுத்திருக்கலாம், அல்லவா?'

'அவர் அவளுடைய குணவியல்புகளோடு எத்தனையோ தடவைகள் ஒத்துத்தான் போயிருக்கிருர்! ஆனுல், அதற்கும் ஓர் அளவு இருக்கிறதல்லவா...?'

அவனுக்கு அடிவயிற்றில் கலக்கம் தோன்றுகிறது; 'காதலர்களிடையே ஏற்படும் மனவேற்றுமைகளும், அவர்களைப் பிரித்து விடுமா?'

'அப்படியானுல், இப்போது அவர்கள் பிரிந்து விட்டார்களா?...'

'ஓம், சித்தி!...சித்தி, நான் நினைக்கிறேன், காதல் என்ற அந்த உறவு வெகு காலத்திற்கு நிலவக் கூடாது என்று...'

'அப்படியென்ருல்...?'

(13-ம் பக்கம் பார்க்க)



# அமரரின் பணியைத் தொடர்வதே நம் கடமை

## வரோதயர் நினைவு விழாவில் தலைவர்கள் திடசங்கற்பம்

“இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் முக்கியத்துவம் வாய்ந்ததும் கேந்திரஸ்தானமுமாக விளங்கும் திருகோணமலையின் காவலராக, வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் நடுவராக விளங்கிய திரு. என். ஆர். இராஜவரோதயத்தின் பிரிவு எம்மால் ஈடுசெய்ய முடியாத நட்டமாகும். அவர் எடுத்த பணியினைத் தொடர்ந்து முடிப்பது அவருடைய ஆத்ம சாந்திக்காக நாம் செய்யும் தொண்டாகும்.' பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வ. நவரெத்தினம் இவ்வாறு கூறினார்.

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் பேசுகையில், “திரு. இராஜவரோதயம் அமைதியாகச் செயல் புரியும் சிறந்த அரசியல்வாதி. தேசிய இனமான தமிழ் பேசும் சமுதாயம் தங்களுக்



திரு. சா. ஜே. வி. செல்வநாயகம்

குரிய பிரதேசங்களில் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதைப் பெரும்பான்மையினர் விரும்புவதாயில்லை. நம்மினம் சுபிட்சமுடன்

மறைந்துபோய்விடுவதில்லை. நமது கட்சி, அரசியலைக் கைப்பற்ற முயலும் கட்சியல்ல. விடுதலைக்காகப் பாடுபடும் ஒரு இயக்கம்; நமது இயக்கத்தில் ஈடுபடுபவர்கள் கண்ணீர், வியர்வை, இரத்தம், உயிர்ப்பலி இவற்றை அளித்தே இலட்சியப் பாதையைச் செப்பனிடுவர். அதற்கான உரம் கொண்டோர் அடுத்துவரும் அறப்போராட்டத்துக்கு அணி திரள வாரீர்.”

“தமிழ் பேசும் இனத்தை இருள் சூழ்ந்துள்ள இவ்வேளையில் ஒற்றுமை என்னும் ஒளியை ஏந்தித்தான் நாம் இருளகற்ற வேண்டும். இதற்காகவே திரு. இராஜவரோதயம் அல்லும் பகலும் அரும்பாடு பட்டார். அவர் வடக்கு கிழக்கு மாகாண வேற்றுமைகளை அகற்றிவிட உழைத்தவர். ஒற்றுமை வளர்ப்பதே நாம் அவருக்குச் செய்யக்கூடிய ஒப்பற்ற தொண்டாகும். இலட்சியப்பாதையில் ஒற்றுமை ஒளி பரவட்டும். ஊர்



திரு வ. நவரத்தினம்

திரத்துக்குப் புறம்பானவர்களாகவிருக்கப் போவதில்லை. இந்த நாட்டில் இனக்கொலை புரியும் அரசு, அந்நிய நாட்டில் நடக்கும் உள்நாட்டு விவகாரங்களுக்காக வரட்டுக் கூச்சல் போடுகிறது. தன்னைத் தானே

### பாதகம் செய்யும் பேதமை வேண்டாம்

வாழ உழைத்த தலைவரான திரு. வரோதயத்தின் செயலைப் பின்பற்றி உழைப்பதே அவருக்கு நாம் செய்யும் கைம்மாறாகும்,” என்றார்.

காவற்றுறைப் பிரதிநிதி திரு. சுந்தையாவன் மறைவினுல் ஏற்பட்ட இடைத் தேர்தலுக்கான ஆயத்தங்கள் நடைபெறுகையில் தமது நண்பர்களிடம் ‘அடுத்த இடைத் தேர்தல் திருகோணமலையில் தான்’ என்று திரு. வரோதயம் தீர்க்கதரிசனம் கூறியது உண்மையாகி விட்டது.” என்று மூதூர் முதல்வர் ஜனுப் எம் ஈ. எச். முகம்மதலி பேசினுர்.

### இலட்சியப் பாதைக்கு தியாகமே தேவை

பெட்ரோல் ஊற்றிப் பற்ற வைத்த பிக்குவைப் பற்றிப் பிரலாபிக்கும் இவர்கள், தாங்களே பெட்ரோலை ஊற்றி ஒரு சைவக் குருவைத் தீ மூட்டினுர்களே! இதைமட்டும் சிந்திக்க முடியவில்லையா?

“நியாயம் நம்பக்கம் இருக்கும் போது வெற்றியும் நம்

நம் பிரதேசத்தை வளப்படுத்தி நம்மினத்தை வாழ வைக்க வாரீர் வாரீர்” என்று கூறினுர்.

“இன்று நமது இனத்தில் வேறு சாதி கிடையாது. சிங்களம் படிக்கும் தமிழர்கள் தான் கீழ் சாதியைச் சேர்ந்தவர்கள். சிங்களம் படியாதவர் மேல் சாதி. இந்த நிலை தான் இனிமேல் ஏற்படப் போகிறது. சிங்களம் படித்துப் பதவிக்காக ஆசைப்படும் எவருக்கும் பெண் கொடுக்கக் கூடாது என்ற



திரு. செ. இராசதுரை

### உறைவிடத்தை வளமாக்க உழைக்க வாரீர்

விரதத்தைத் தாய்மார் கடைப்பிடிக்க வேண்டும்.”

“இஸ்லாமியர்கள் இனப் போராட்டத்தில் ஈடுபடாதிருக்கின்றுர்களே என்று யாரும் கவலை கொள்ள வேண்டியதில்லை. இஸ்லாமிகள் வீறு கொண்டெழும் காலம் விரைவில் வந்தே தீரும்,” என்று ஜனுப் மசூர் மெளலான கூறினுர்.

“சிங்களக் குடியேற்றத்தினுல் திருமலை பறிபோவதைத் தடுப்பதற்கு, தமிழர்களின் பூர்வீகப் பெருமை வாய்ந்த கோணேஸ்வரத்தின் புனருத்தாரணத்தினுலும், கோணேசலிங்கத்தை ஸ்தாபித்ததாலும், தெய்வீகமாகவே தடுப்பை ஏற்படுத்தி விட்டார் திரு. இராஜவரோதயம். பெருமை இழந்துவந்த திருக்கோணேஸ்வரத்தின் பெருமையை மீண்டும் நிலைநாட்டியதன் மூலம் தமிழர் தம்



திரு. எம். ஈ. எச். முகம்மதலி

உரிமையைத் திருகோணமலையில் நிலைபெறச் செய்து விட்டார்,” என்று சுதந்திரன் துணை ஆசிரியர் திரு. இரா. பத்மநாதன் கூறினுர்.



திரு. சி. மூ. இராசமாணிக்கம்

“நாம் இன்று அடிமைகள் போல் வாழ்கின்றோம். அப்படியிருக்கும்போதே அதற்குள் பிளவுபட்டுக்கொண்டு, பெரிய அடிமை, சிறிய அடிமை என்று பேதமை காட்டுவது கூடாது. நம்மிடம் உள்ள சாதிமதப் பிளவுகளை மறந்து உரிமைக்காக ஒன்றுபட்டுழைத்து மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்துவோமாக,” என்றுபருத்தித்துறைப்பிரதிநிதி திரு. க. துரைரெத்தினம் கூறினுர்.

அடுத்துப் பேசிய கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் கூறியதாவது: “தலைவர்கள் இந் நெருக்கடியான சூழ்நிலையில் அடிக்கடி மறைவது துர்ப்பாக்கியமான நிலைதான். தலைவர்கள் மறைந்தாலும் அவர்கள் விதைத்த கருத்துக்களும்

### இருள் நீக்க ஒற்றுமை ஒளி பரவட்டும்

டாக்டர் நாகநாதன் கீழ்க் கண்டவாறு பேசினுர்: “சாதி ஒழிப்பு மசோதாவைப் பாராளுமன்றத்தில் பிரேரிக்க திரு. இராஜவரோதயம் எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பாராட்டாதார் கிடையாது. அவர் மறைந்தாலும் அவருடைய கொள்கை, கருத்து முதலியன என்றும் நம்மை விட்டுப் போகப்போவதில்லை.

“இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்களுக்கு அரசாங்க உத்தியோகம் கூடாது. உத்தியோகம் தரவும் மாட்டார்கள். எங்கள் பிரதேசமான வடக்கையும் கிழக்கையும் பாலும் தேனும் ஓடும் பூமியாக்க விரைந்தோட வேண்டும். அத்துடன் அரசாங்கத்தின் வருமானத்தைக் குறைக்கும் பணியினை மேற்கொள்ளுவோமாக.”

உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரம் பேசும்போது கூறியதாவது: “1964ம் வருடம் ஜனவரி மாதத்தில் தமிழ் ஊழியர்கள் வெளியேறும் போது தமிழ் பேசும் மக்கள் சரித்

பக்கமே இருக்கும் என்பதை மனதில் வைத்துப் புதிய சரித்திரத்தை உருவாக்க விழைவோமாக.”

மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை பேசுகையில், “பற்றற்ற துறவற நிலையில் வாழ்ந்தவர் திரு. வரோதயம். தடுப்புக்காவல் காலத்தில் அவருடைய புனிதத் தன்மை தெள்ளெனத் தெரிந்தது. அவர் விட்டுச் சென்ற பணி நம்மைக் காத்துக் கிடக்கிறது. திருமலைக் குன்றின்மீது வங்காளக் கடலின் அலைகள் மோதும் காலம்வரை வரோதயத்தின் புகழும் மாறுது.

“ஒத்துழைப்பு முகாரி பாடும் ஒரு சிலர் இன்றும் நம்மிடம் இருக்கத்தான் செய்கிறுர்கள். நாம் எத்தனை தடவைகள் ஒத்துழைத்தோம், எத்தனை தடவைகள் ஒப்பந்தம் செய்தோம். ஆனுல் கண்ட பயன் என்ன? ஆகவே நாமே நமது வழியினை வகுக்க வேண்டியவர்களாகிறோம். வேற்று இனத்தின் மேம்பாட்டுக்கு இதுவரை நமது திறமைகளை விரயமாக்கியது போதும்.

## வர்க்க ஒற்றுமை....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டங்களுள் ஒன்று “கத்தோலிக்க நடவடிக்கையை” ஆராய்வது. ஒரு மதச் சிறுபான்மையினரை பெரும்பான்மை மதத்தினர் கொடுமைப்படுத்தும் நிகழ்ச்சி—அதுவும் அரசாங்கத்தின் துணையுடன் — ஏன் அரசாங்கமேகொடுமைப்படுத்துவது வெட்கக்கேடான விஷயம். இந்நாட்டின் சமீப கால வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் விசாரித்துத் தண்டிக்கப்பட வேண்டியது ‘பெளத்த நடவடிக்கையே’ அன்றி கத்தோலிக்க நடவடிக்கை அல்ல. அரசாங்க சேவையின் ஒவ்வொரு துறையிலும், பொலிஸ், சேனை, உட்பட — சிங்கள பெளத்தர்களே முக்கிய பொறுப்பாளராக இருக்க வேண்டும் என்பதும் தமிழ் இலங்கையின் இடங்களை பெளத்த சிங்களவருக்கு சொந்தமாக்க முனைவதும் (உதாரணம் — தீகவாப்பி, சேருவில) தான் மதத்தின் பெயரால் நடைபெறும் மோசடியே தவிர, ‘கத்தோலிக்க நடவடிக்கை’ என்பது சிங்கள பெளத்த அரசியல் வெறியர்கள் பெற்றெடுத்த குழந்தையே!

மொழியென்றுல் என்ன, வாழ்விடப் பிரச்சினை என்றுல் என்ன, குடியுரிமைப் பிரச்னை என்றுல்என்ன, மதக் கொடுமை என்றுல் என்ன, இந் நாட்டின் சிறுபான்மையினரைப் பொறுத்தமட்டில் —சிங்கள மக்களிடையே இயங்கும் — மூன்று பெரும் அரசியல் கட்சிகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். தங்களுக்குள் உள்ள அதிகாரப் போட்டியினுல் ஒருவர் குடுமியை மற்றவர் பிடித்தாலும் தமிழ் பேசும் சிறுபான்மையினரைப் பொறுத்தமட்டிலே மூன்றும் ஒரே கொள்கையைக் கடைப்பிடிக்கின்றன.

### மொழி வழி அரசு காண்போம்

இந் நிலையில் இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தால் பாராளுமன்ற ஜனநாயகம் கடைப்பிடிக்கப்படுமா? தமிழ் பேசும் மக்களுடைய கிளர்ச்சி ரஷ்ய ஆதிக்கத்திற்கு எதிராகக் கிளர்ந்த ஹங்கேரிய புரட்சியைப் போல் நசுக்கப்படுமா? மார்க்சிய தத்துவத்தின் முக்கிய அம்சங்களைக்கைவிட்ட இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி ஒரு கட்சி ஆட்சித் தத்துவத்தைக் கடைப்பிடிக்காது என்பதற்கு ஆதாரமில்லை.

இந்நிலையில் தமிழ் பேசும் தொழிலாளர்கள் — தமிழ் பேசும் இதர மக்கள், எந்தச் சிங்களக் கட்சியையும் நம்பி நட்டாற்றில் நிற்க முடியாது. மொழி வழி ஒன்று திரண்ட ‘தமிழ் பேசுமினத்தை உருவாக்கி உரிமைப் போரை உக்கிரமமாக நடத்த வேண்டும். எங்கள் தாய் மொழியாம் தீந்தமிழ் தான் எங்கள் உரிமைச் செம்பயிருக்கு வேர்! தமிழே தான் எங்கள் கையில் வாள்!

சிங்கள ஏகாதிபத்தியத்தை ஒழிப்போம்!

மொழி வளர அரசு காண்போம்!!

(முற்றும்)


## ‘சுதந்திரன்’
### புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-50 |

நிர்வாகி
‘சுதந்திரன்’

# படத்துறையில் புரட்சியைப் புகுத்தியவர்

## டி. ஆர். சுந்தரத்துக்கு சினிமா உலகம் அஞ்சலி

**தமிழ் சினிமாத்துறையில் பல புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டி அவற்றை ஓரளவு அமுல் நடத்திய பெருமைக்குரியவர் மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் திரு. டி. ஆர். சுந்தரம். அவர்களின் மறைவு சினிமா உலகிற்குப் பெரும் இழப்பாகும்!**

இவ்வாறு மாரடைப்பினால் மறைந்த மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர் திரு. டி. ஆர். சுந்தரத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக கடந்த வாரம் தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையில் நடைபெற்ற கூட்டத்திற்குத் தலைமை வகித்த சபைத் தலைவர் திரு. ஏ. எல். சீனிவாசன் கூறினார்.

திறமையுள்ள புதிய நடிகர்களைக் கொண்டு சிறந்த படங்களைத் தயாரிக்க திரு. டி. ஆர். சுந்தரம் வகுத்திருந்த திட்டம் பற்றி மாடர்ன் தியேட்டர்ஸில் நீண்ட காலம் பணியாற்றிய டைரக்டர் திரு. ஏ. எஸ். நாகராஜன் கூறியதாவது:-

"டி. ஆர். சுந்தரம் அவர்கள் எந்த ஒரு விநியோகஸ்தர்களையும் நம்பி படம் தயாரிப்பதில்லை. யாருடைய எதிர்ப்பையும் அவர் எடுத்துக்கொள்ள மாட்டார். தனக்குச் சரி என்று பட்டதைச் செய்யத் தயங்கவே மாட்டார். சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கதையை உருவாக்கினேம். அந்தக் கதையிலுள்ள ஒரு பாத்திரத்தை, ஒரு நடிகரை மனதில் கொண்டே நான் உருவாக்கினேன். அக்கதை படமாக்கப்படும்போது, புதியதொரு நடிகர் அதில் நடிக்க ஏற்பாடு செய்யப்பட்டார். நான் சுந்தரம் அவர்களிடம், இது இன்னுரை மனதில் வைத்து எழுதப்பட்டது என்று கூறினேன். அதைக் கேட்ட அவர், கதையைத் தூக்கி எறிந்து விட்டார். கதைக்கு ஏற்ற நடிகர்தான் எனக்கு வேண்டுமே தவிர, நடிகருக்கேற்ற கதை தேவையில்லை" என்று சொல்லி விட்டார்.

"இவருக்கு அதிர்ஷ்டமில்லை என்று படத்துறையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட ஒரு நடிகரை, அதிர்ஷ்டமென்பது அந்த நடிகரின் கையில் இல்லை என்பதை நிரூபிப்பதற்காக, தாம் தயாரிக்கும் படங்களில் எல்லாமே போட்டு வந்தார்.

### ரூ. 3 லட்சம் செலவில் படம்

"மூன்று லட்சம் ரூபாய் செலவுக்குள்தான் இனி படங்களைத் தயாரிக்க வேண்டுமென்ற புரட்சிகரமான திட்டமொன்றையும் அவர் தீட்டியிருந்தார். நல்ல திறமை மிக்க நடிகர்களைப் பொறுக்குவதற்கு ஒரு கமிட்டியை அமைத்து, அந்தக் கமிட்டி ஒவ்வொரு ஊர்களுக்குச் சென்று நடிகர்களைப் பரிசீலித்து வரவும் அவர் ஏற்பாடு செய்திருந்தார்.

"இதுபோன்ற சிறிய படங்களை வெளியிடும் துணிவு சாதாரண விநியோகஸ்தர்களுக்கு இருக்காதாகையால், ஒவ்வொரு ஜில்லாவிலும் விநியோக நிலையம் நிறுவவும் அவர் திட்டம் போட்டிருந்தார். இப்படியெல்லாம் பல பல திட்டங்களைத் தீட்டி, அவைகள் அமுலாகவிருந்த வேளையில் இப்படி மறைந்து விட்டது, படத்துறைக்கு ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத பெரும் நஷ்டமாகும்."

அடுத்துப் பேசிய எஸ்.எஸ். வாசன், "படத்துறையிலேயே கட்டுப்பாட்டை உருவாக்கி, வளர்த்து, அதைக் கடைசிவரை கடைப்பிடித்து வந்த பெருமை டி. ஆர். சுந்தரத்தையே சாரும்" என்று கூறினார்.

"ஒரே ஸ்தாபனத்தின் மூலம், இதுவரை 97 படங்களைத் தயாரித்த ஒரே தயாரிப்பாளர் இந்தியாவிலேயே டி. ஆர். சுந்தரம் ஒருவர்தான். படத்துறையில் ஏற்பட்டுள்ள பிளவை நீக்கி, அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்று கடைசிவரை அவர் அயராது பாடுபட்டார். ஆனல் அவர் பட்டபாட்டுக்கு பலன் கிடைக்கு முன்பே கண்ணை மூடி விட்டார். இனிமேலாவது படத்துறையிலுள்ள அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க முன்வர வேண்டும்" என்று தமது பேச்சில் டைரக்டர் கே. சுப்ரமண்யம் குறிப்பிட்டார்.

பின்னர் நடிகர் தங்கவேலு பேசினர். "படத்துறையிலுள்ள பெருந் தலைகள் நாலைந்து பேர்களில் சுந்தரமும் ஒருவர். என் வாழ்க்கையிலேயே நான் கண்ணீர் விட்டு அழுதது இரண்டே இரண்டு பேர்களுக்குத்தான். ஒருவர் கலைவாணர்; அடுத்தவர் டி. ஆர். சுந்தரம்" என்றார் அவர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"அவரால் முன்னுக்கு வந்த நடிகர்களே, அவரை வாட்டி வதைக்க முற்பட்டால் அது சகித்துக்கொள்ள முடியாத ஒன்றுதான். தயாரிப்பாளர்களை ராஜாப்பூவாகக் கருதி, அவர்களை நடிகர்கள் கசக்கி எறியாதிருக்க வேண்டும்" என்று கூறினார்.

### சிலை வையுங்கள்

டி. ஆர். சுந்தரம் அவர்களின் ஞாபகார்த்தமாக, பிலிம் வர்த்தக சபையில் ஒரு சிலை வைக்கத் தன்னுலான உதவியைச் செய்வதாக ஜெமினி கணேசன் பேசும் போது குறிப்பிட்டார்.



டி. ஆர். சுந்தரம்

நாடக விமர்சனம்

## அது அப்ப!.... இது இப்ப!....

**ராஜ்** நகைச்சுவை நாடகம், வயிறு குலுங்கச் சிரிக்கலாம், அலுப்புத் தட்டாது என்று எண்ணியவர்கள் — 'அது அப்ப இது இப்ப' என்ற நாடகத்தைப் பார்த்து ஏமாற்றமடைந்திருப்பார்கள். காரணம் இந் நாடகத்தில் நகைச்சுவை எடுபடவில்லை. அதனுல் இடையிடையே அலுக்கவும் செய்தது.

முக்கிய நகைச்சுவைப் பாகத்தைக் கையாண்ட 'ராஜி'ன் பகிடிகள் இடை இடையே சோர்ந்து விட்டன. ஆனல் வேலைக்காரன் வேலுவாக வந்த நாகேந்திராவின் நடிப்பும் நகைச்சுவையும் நன்ருக இருந்தன.

ஊமையாக வந்த தியாகராஜாவிற்கும் சிறிய பாகம் தான், ஆனலும் அதனைத் திறமையுடன் தத்ரூபமாகச் செய்தார். மோகனுக வந்த பாலேந்திராவும், குமாராக வந்த பத்மநாதனும் தமது பாகங்களை சரிவரச் செய்தனர்.

ஆங்கில மெட்டுக்களை தமிழர் உபயோகிப்பது உண்டு-இது வழக்கம். ஆனல் ஓர் ஆங்கிலப் பாடலைக் கர் நாடக மெட்டில் பாடிய திறமை குறித்து பத்மநாதனைப் போற்ற வேண்டும்."

நல்ல தம்பியாக வந்த பரமானந்தமும், வேலாயுதம் பிள்ளையாக வந்த திருநாவுக்கரசும் வழமைபோல் நடித்தனர். பெண் பாகத்தில் விஜயாள் இரத்தினசாமி சிறப்பாகத் தோன்றினர்.

மேடை அமைப்பு, இசை, ஒளி முதலியனவற்றில் குறைகூற இடமில்லை. ஒலி அமைப்பு (8-9-63, ஞாயிற்கிழமை) நன்ருக இருந்தது மட்டுமல்லாது மேடையிலே ஒரு புத்தகத்தின் ஒற்றையைத் திருப்பும் ஒலி கூட தெளிவாக சபையோருக்குக் கேட்கத் தக்கதாக அமைந்தது உண்மையில் ஒரு முன்னேற்றமாகும்.

தொலைவில் நடைபெறும் பொதுக்கூட்ட நிகழ்ச்சியை பிரதிபலிக்கையில் உண்மையில் கூட்டம் நடைபெறுவதுபோல இருந்தது. ஆனல் அதே நேரம் மேடையிலிருந்தோர் குரல்களையும் ஒலி பெருக்கியிருந்தால் மேலும் சிறப்பாக இருந்திருக்கும்.

நாடகத்தில் முக்கிய குறை —கதை அமைப்பே. நாடகம் எதுவித கருத்தையும் எடுத்துக் காட்டவில்லை. கதைகூட இல்லை என்றே கூறலாம். நகைச்சுவை ஓரளவு இக் குறைகளை மறைத்திருக்கலாம் — ஆனல் இம்முறை நகைச்சுவையும் எடுபடாததால் நாடகம் சோபிக்கவில்லை.

நடிப்பிலும் வேறு நுணுக்கங்களிலும் ஓரளவு சாதனைகளிருந்த போதிலும் கதையமைப்பில்லாததால் அச் சிறப்புகள் கூட மறைக்கப்பட்டு விட்டன. இனிமேலாவது கதை அமைப்பில் கவனம் செலுத்துவார்களென எதிர்பார்க்கிறோம்.

— மதி —

### 'ஸ்பூட்னிக் சுருட்டு'

கல்யாணத்தைப்பண்ணிப் பார், வீட்டைக் கட்டிப் பார்—இது பழைய மொழி. நாடகத்தை நடத்திப்பார்-இது புதியமொழி. ஒரு நாடகத்தை மேடையேற்றுவதற்கு என்ன விதமான கஷ்ட நஷ்டங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது என்பதைக் கருவூலமாகக் கொண்டு, இந்த முழு நீள நகைச்சுவை நாடகத்தை சண்முகம் எழுதியுள்ளார்.

நாடகத்தின் டைரக்ஷன் பொறுப்பை 'ஆர்பி' ஏற்றுள்ளார். அக்டோபர் 6ம் திகதி கொழும்பில் மேடையேற்றுவதற்குத் தயாரிப்பாளர் 'வரணியூரான்' திட்டமிட்டுள்ளார்.

### ஹிந்தி-தெலுங்கில்-ஆலயமணி

வீரப்பா தயாரித்த வெற்றிப் படமான 'ஆலயமணி' விரைவில் ஹிந்தியும் தெலுங்கும் பேசப் போகிறது. ஹிந்தியில் தயாரிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் முடிவடைந்து விட்டன. டைரக்ஷன், ஒலிப்பதிவுப் பொறுப்புக்களை சங்கரும், தம்புவுமே மேற்கொள்ளுவரெனத் தெரிகிறது.

## விபுலாநந்த மணிமண்டபத்தில் கலை நிகழ்ச்சி

**க**டந்த 7-9-63ல் மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் விபுலாநந்த மணி மண்டபத் திறப்பு விழா நடைபெற்றது. கலை நிகழ்ச்சியின் போது மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரின் வில்லுப்பாட்டு நடைபெற்றது. வில்லுப்பாட்டு நிகழ்ச்சி இம்முறையுடன் 72 வது தடவையாக மேடையேற்றப்பட்டது.

பல்லவர் காலத்துச் சிற்பி ஒருவனின் சோகவரலாற்றைச் சித்தரிக்கும் கதையான "குகைக் கோயில்" நாடகத்தை அன்பு மணி தயாரித்திருந்தார். எஸ். பாக்கியராஜா, கே. நவரெத்தினம், சி. சண்முகம், பி. தெட்சிணமூர்த்தி, எஸ். பாஸ்கரன், அன்புமணி ஆகியோர் இந் நாடகத்தில் தோன்றினர்.

அன்புமணி எழுதிய 'கலை உள்ளம்' நாடகம் திரு. கே. தியாகராசாவினுல் தயாரிக்கப்பட்டு மேடை ஏறியது. இளங்கோ துறவை மேற்கொள்ளும் கட்டத்தைப் புதிய கண்ணேட்டத்துடன் நாடகமாக்கியிருந்தனர். இந் நாடகத்தில் சிவாநந்த வித்தியாலய மாணவர்கள் நடித்தனர். நாடகத்தில் விறுவிறுப்பு இருக்கவில்லை. இவ்விரண்டு நாடகங்களுக்கும் தரமான ஒப்பனை செய்தவ.., திரு. ஏ. சிவானந்தராஜா.

இரண்டு நாட்களிலும் வேறு பல இசை, நடன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

### புது விருந்துகள்

சரவணு பிலிம்சார் தயாரித்தளிக்கும் 'பணத்தோட்டம்' விரைவில் சினிமாஸ் திரைகளுக்கு வருகின்றன. கடந்த வாரம் இப்படத்தை தேவர் பிலிம்சார் தயாரித்துள்ளனர் என்று தவறுதலாகப் பிரசுரித்து விட்டோம். இப்படத்தில் எம். ஜி. ஆர்., சரோஜாதேவி தோன்றுகின்றனர்.

'தீதார்' என்ற பெயரில் வெளியாகி ரசிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்த ஹிந்திப் படத்தின் கதையைத் தழுவிய 'நீங்காத நினைவு' சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் திரையிடப்படவிருக்கிறது. இப் படத்தில் இலட்சிய நடிகரும் அவர் துணைவியாரும் தோன்றுகின்றனர்.



பால் மணம் மாருத பச்சிளம் பருவத்திலும் பாவத்துடன் பரதம் ஆடிப் பரவசமூட்டும்செல்வி தங்கம் வைத்தியநாதன். விவேகானந்த சபை இசைவிழாவில் நடனம் ஆடி ரசிகர்களைக் கவர்ந்த இப் பாலகி "மஞ்சள் குங்குமம்" நாடகத்திலும் தோன்றுகிருள்.

### 'மஞ்சள் குங்குமம்'

திரு. கிங்ஸ்லி எஸ். செல்லையா தயாரித்து அளிக்கும் 'மஞ்சள் குங்குமம்' என்னும் நாடகம் 22-9-63 ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு லயனல் வென்ட் அரங்கில் அரங்கேற்றப்படவுள்ளது. இந்நாடகத்தில் வைத்தியநாதன் சகோதரிகளின் நாட்டிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

# மொழி வழி பிரிந்து போராடுவதே கடமை

## திருமலை த. பே. அ. ஊழியர்க்கு எழுதுவினைஞர் சங்கத் தலைவர் அறிவுரை

"நமது கோரிக்கைகள் யாவும் இந்த அரசாங்கத்தினுல் புறக்கணிக்கப்பட்டு வருவதால் நாம் மொழிவழி பிரிந்து போராடுவதுதான் ஒரே வழி. சிங்களம் படியாத காரணத்தினுல் எம்மைச் சேவையிலிருந்து வெளியேற்ற முடியுமானுல் செய்யட்டும். அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை எதிர்த்தே நாம் வழக்காட முன் வந்துள்ளோம்." இவ்வாறு திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் பேசும் அரசாங்க பொது ஊழியர் சங்க அமைப்புக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த அ. எ. வி. சங்கத் தலைவர் திரு. செ. கோடீஸ்வரன் கூறினுர்.

இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கான ஏற்பாடுகளை திரு. இ. நவரத்தினம் செய்தார். செல்வி து. இரங்கநாயகி தமிழ்த் தாய் வணக்கப்பாட்டுப் பாடினுர். ஆரம்பத்தில் திரு. இராசவரோதயத்தின் ஆத்மசாந்திக்காக இரண்டு நிமிடங்கள் மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

தலைவர் திரு. கோடீஸ்வரன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தமிழ் பேசும் மக்களுக்காக இந்த நாட்டுப் பெரும்பான்மையினம் எதுவுமே செய்யப்போவதில்லை. இனத்தால், பேசும் மொழியால் வேறுபட்ட இனங்கள் பிரிந்து நின்று தங்கள் உரிமைகளை நிலைநாட்டியதை நாம் உலக நாடுகளின் வரலாறுகளிலிருந்து நன்று அறிகிறோம். அதேபோல் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு முதலியவற்ருல் பெரும்பான்மையினருடன் மாறுபட்டிருக்கும் நாம் பிரிந்து நின்று நமது உரிமைகளுக்காகப் போராட வேண்டியவர்களாவோம்.

"இனப் பெருமையை உணர்ந்து இன்று கூடியுள்ள நாம், உலகவரலாற்றிலேயே புதிய பல வரலாற்றுகளை ஏற்படுத்த, எதேச்சாதிகாரப் போக்குக்குச் சாவுமணி அடித்து, நமது இழிநிலையை அகற்ற ஒன்றுபட வேண்டிய கடமைப்பாடுடையோம்.

"நமது உரிமை கோரி நாம் தொடர்ந்துள்ள வழக்குகளினுல் அரசு திண்டாடுகிறது. இவ்வழக்குகள் நமக்குச் சாதகமாகவே அமையும் என்பதில் ஐயமில்லை. நியாயமும் நேர்மையும் நம் பக்கம் இருக்கும் வரை நமக்குத் தோல்வியே கிடையாது".

மன்னுரைச் சேர்ந்த திரு. க. கந்தசாமி பேசும்போது குறிப்பிட்டதாவது:

தனிப்பட்ட ஒரு தொழிலாளி பாதிக்கப்பட்டாலே அதற்காகப் போராட வேண்டியது தொழிலாளர் சங்கத்தின் கடமையாகும். ஆனுல் தொழிலாளரின் உரிமையைப் பாதுகாப்பவர்கள் நாங்கள் எனத் தம்பட்டமடிக்கும் தொழிற் சங்கம் கணிசமான அளவில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்ட போதிலும் அதற்கெனப் போராடத் தவறியமையால் தான் நாம் மொழி வழி பிரிந்து தமிழ் பேசும் ஊழியர்களுக்கெனத் தனித் தொழிற் சங்கங்களை அமைக்க வேண்டி ஏற்பட்டது.

"வேறு மொழி படிப்பதிலுள்ள கஷ்டம் அளப்பரியது. அப்படிப் படித்த போதும் நியாயமான அளவு பதவி உயர்வும் சம்பள உயர்வும் கிடைக்கும் என்பது சந்தேகம். ஒரு மொழி, ஒரு அரசாங்கம் என்னும் தத்துவத்தை உலகம் ஏற்கும் வரை பல மொழிகளும் பல அரசாங்கங்களும் உலகில் இருக்கத்தான் செய்யும்."

திரு. பொ. நாகராஜா, ஜனுப் முகமது இஸ்மாயில், திரு. வீயோ ஆகியோரும் பேசினர்.

### உத்தியோகஸ்தர்கள்

திருவாளர்கள்: க. சிங்கராஜா, தலைவர்: மு. மகாலிங்கம், உப தலைவர்: இ. நவரெத்தினம், பொதுச் செயலாளர்: யோ. அ. அருளானந்தம், உப செயலாளர்: செ. கந்தசாமி, பொருளாளர்.

### நிர்வாக சபையினர்

திரு. ல. ஜெயபாலன் (மன்னுர் சார்பாக), திரு. பொ. நாகராஜா (வவுனியா சார்பாக), ஜனுப் முகமது இஸ்மாயில், திரு. செ. நல்லரெத்தினம், திரு. செ. தேவசகாயம், திரு சி. கேசவப்பிள்ளை, திரு. வே. பொன்னுத்துரை.

## வன்னியசிங்கம் நினைவு விழா

கொழும்பு செப்—19

20-9-63 வெள்ளிக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு கொழும்பு விவேகாநந்த மகா வித்தியாலய மண்டபத்தில் அமரர் வன்னியசிங்கம் நினைவு விழா நடைபெறுகிறது.

திரு. சி. மூ. இராசமாணிக்கம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் திருவாளர்கள் இ. மு. வி. நாகநாதன், ஜி. நல்லையா, அ. அமிர்தலிங்கம், செ. இராசதுரை, வ. நவரத்தினம், ஜனுப் எம். ஈ. எச். முகமதலி ஆகியோர் பேசுவர்.

## வன்னியர் வாய்மொழி

இந்த நாட்டின் பிரதமரான நீங்கள் காடைத் தனங்களுக்கு ஒத்தாசை புரிவதன் மூலம் நாட்டில் நீதியையும், ஒழுங்கையும் சீர்குலைக்கிறீர்கள். இது உங்கள் சொந்த அழிவுக்குத்தான் வழிகோலும்! இத்தகைய முடிவுதான் இறுதியில் உங்களுக்கு நிகழப் போகிறது என எச்சரிக்கிறேன்.


**ப்ரம்மீ கேசரஞ்சன தைலம்**



A 6 அவுன்ஸ் போ 3-50

அதிக நரை மாற்றும் ஸ்பெஷல்

B 6 அவுன்ஸ் போ: விலை 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்

1. ஸி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
5. லீலா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
6. எஸ். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.
11. பரஞ்சோதி மருந்துசாலை, திருகோணமலை.
12. நாகலிங்கம் குரோசரி ஸ்டோர்ஸ், 208, வார்ட் பிளேஸ், பொரளை.

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்
80 புதுச் செட்டித் தெரு
கொழும்பு 13.


## சமரச....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

குடியதிபதி பட்றிக் பிஸ்ஸின் தாயார், மாக்ஸிவிக்ய சீமாட்டியார், உண்ணுவிரதத்தால் மாண்ட தெரன்ஸ் மக்ஸ்வினியின் சகோதரி, கொலைகாரர் குழுவினுல் விமறிக்கில் முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட மைக்கேல் ஓகலக்கானின் கைம்பெண் ஆகிய பெண்மணிகள் ஒப்பந்தத்தை எதிர்த்துப் பேசினர். கிறிஸ்துமஸுக்காக 22-12-1921ல் 3-1-1922 வரை விவாதம் ஒத்திவைக்கப்பட்டது.

(வளரும்)

## நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

'அவர்கள் உடனேயே மணந்து கொண்டிருந்தால், இப்போது பிரிந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காதல்லவா?...'

'அது தவறு, உமா. கலியாணம் செய்து கொண்டபின் மன வேற்றுமையினுல் இருவருடைய வாழ்வும் சுவையற்றுப் போவதிலும் திருமணத்திற்கு முன்பே பிரிந்து விடுவது நல்லது! மேல் நாடுகளில் கண்டதும் காதல் கொண்டு நிகழ்கின்ற கலியாணங்களெல்லாம், மன வேற்றுமையினுல், விவாகரத்தில் முடிகின்றன!...இப்போது அவர் எப்படியிருக்கின்ருர்...?'

உமா மௌனமாகிருள்; அவன் கலங்கிப் போய்ச் செயலற்றுக் கிடக்கிருன். அவனைப் பொறுத்தமட்டில் அவனுடைய குணத்திற்கும், புவனத்தின் குணத்திற்குமிடையே எத்தனையோ வேறுபாடுகள் இருக்கின்றன!

கார்களின் சக்கரங்கள் அசுர வேகத்தில் வீதியினை விழுங்குகின்றன.

'சித்தி...!'

'என்ன, உமா?...'

'எனக்கு ஒரு உதவி செய்வீர்களா?...'

'இயலுமாகில் செய்கிறேன், உமா......! உனக்குச் செய்யாத உதவியா?...'

'நான்...'உமாவின் குரலில் தயக்கம்; எச்சிலை மென்று விழுங்கியபடி உமா கூறுகிருள்: 'நான் அவரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்...'

'உமா...!' சாவித்திரியின் விளிப்பிலே ஊறிக் கிடந்த உணர்ச்சிக்கு என்ன பெயர்?

'என்ன சொல்ருய், உமா, என்ன சொல்ருய்?'

'ஒருத்தியால் கிடைத்த ஏமாற்றத்தை, என்னேடு பழகுவதால் அவரால் மறக்க முடிகிறது, என்பதை நானறிகிறேன், சித்தி! அவர் வெற்றிதயம் அமைதி தரும் அன்புக்காக ஏங்குவதை என்னுல் உணர முடிகிறது, சித்தி! அவர் பெற ஏங்குகின்ற அந்த அன்பை, அவர் வாழ்வில் பெற விரும்பும் அமைதியை நானவருக்கு அளிக்கக் கூடாதா? எத்தனை நல்லவர்களின் வாழ்வை இக்காதல் சீரழித்து விடுகிறது! அமைதியை அழித்து விடுகிறது! சீரழிந்துபோன அவர் வாழ்வைச் செப்பனிட நான் ஆசைப் படுகிறேன், சித்தி! இது ஓரளவு சுயநலம் நிறைந்ததுதான்! ஏனெனில், நான் அவரை விரும்புகிறேன்......' உமா மழைபோலப் பொழிந்து விடுகிருள்.

'உமா...' என்று சாவித்திரியால் அழைக்க முடிகிறதே தவிர வேறொன்றும் பேச முடியவில்லை.

அவன் தன்னுடைய இருபத்திரெண்டு வருட வாழ்க்கையில் எத்தனை விதமான குணவேறுபாடுகளுடைய பெண்களைச் சந்தித்து விட்டான். ஆச்சி, கனகம், அண்ணி, புவனம், சரசு, சாவித்திரி, உமா......இவர்கள் எல்லோரும் ஒவ்வொரு வகையினர். எல்லோருமே புதிர்கள் தாம்!

கார் திடீரெனக் குலுக்கியபடி நிற்கிறது; பின்னுல் வந்த மற்றக் காரும் நிற்கிறது. அவன் திடுக்கிட்டுப் போய் வெளியே பார்க்கிருன். வேறு நினைவுகளில் இருந்ததால் வீட்டிற்கு வந்து விட்டதைக் கூட அவனுல் உணர முடியவில்லை. அவன் மட்டுமல்ல; சாவித்திரியும், உமாவும் கூட அந்நிலையில்தான் இருந்தனர்.

அவன் அறையில் அவனை எதிர்நோக்கி 'இருவர்' காத்திருந்தனர்; ஒன்று தந்தி உருவில் இருந்தது; மற்றவர்—

—சின்ராசு......!

(தொடரும்)

## தமிழ்ப் பிரதேசத்தில்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

"நமக்குக் கிடைத்துள்ள தகவலின்படி வடக்கே தமிழர்களின் வீடுகளில் ஆயிரக்கணக்கான சிங்களச் சிறுமிகள் அடிமை வேலைக்கு அமர்த்தப்பட்டுச் சித்திரவதை செய்து வேலை வாங்கப்படுகிருர்கள். தரகர்கள் மூலம் இந்தச் சிறுமிகள் வடக்கே கொண்டுசெல்லப் படுகிருர்கள்.

பின்னர் அவர்களுக்குத் தமிழ்ப் பெயர்கள் சூட்டப்பட்டு, தமிழ் உடையும் கொடுக்கப்படுகிறது.

அவர்கள் பருவமடைந்து யுவதிகளாக மாறியதும், தமிழர்களால் அவர்களின் கற்பு சூறையாடப்படுகிறது.

பின்னர் அவர்கள் சாரீரியப்பட்ட சக்கைகளாக வீதியிலே தள்ளப்பட்டு அனுதைகளாகின்றனர். உயிர் வாழ்வதற்கு வேறு வழியின்றி அவர்கள் கடைசியில் விபசாரத்தில் ஈடுபடுகின்றனர்."

### திருமலைக் கோட்டை

"நாம் தமிழர்" இயக்கம் திருகோணமலைக் கோட்டையைத் தமிழர் கோட்டையாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறதென்றும், எனவே கோட்டையிலுள்ள இராணுவச் சிப்பாய்களின் இல்லத்தை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டாமென்றும், அனுராதபுரியிலுள்ள போதிவர்தன சங்கம் பிரதமரைக் கேட்டுக் கொண்டிருப்பதாகத் "தினமின" பத்திரிகை 18-9-63 ந் திகதி ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

மதத்தின் பெயரால் இராணுவத்தினரின் இல்லத்தைத் திருமலைக் கோட்டையிலிருந்து அப்புறப்படுத்த "நாம் தமிழர்" இயக்கம் முயன்று வருகிறதென்றும், இது இராஜத் துரோகமான செயலென்றும், கத்தோலிக்க ஆக்கிரமிப்பாளர்கள் அவர்களுக்கு உறுதுணையாக நிற்கிருர்களென்றும் அந்த இல்லத்தை அப்புறப்படுத்தினுல், அங்கே கள்ளக் குடியேற்றக்காரர்கள் வந்து குவிந்து விடுவார்களென்றும் அந்தச் சங்கம் பிரதமருக்குத் தெரிவித்திருப்பதாகத் "தினமின" கூறுகிறது.


**நானாந்த தேவைக்கான துணிமணிகள் ஜனரஞ்சகமான விலைகளில்......**



அசல் '3 பீச்செஸ்'
4000 நீலக்கோடு பொப்லின்
36" அகலம், ரூ. 2-30 யார்
10 யார், ரூ. 23-00

10,000 நீட்டுத் துணி
(லோங் குளோத்) வெள்ளை
42" அகலம், ரூ. 2-00 யார்
10 யார் ரூ. 20-00

போஸ்டல் ஓர்டரோ அல்லது காசோலை மூலமோ, வாங்கப்படும் பொருளின் மதிப்புக்கு 25% முன் பணம் செலுத்தப்பட்டால், வி. பி. பி. கட்டளைகள் கவனிக்கப்படும்.

**குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,**
**110 & 114 மெயின் வீதி,**
**கொழும்பு-11.**

—Mylads




மர்மத் தொடர் கதை:

# புதுமைத் திருடன்

—மாஸ்டர் சிவலிங்கம்—

சற்று நேரத்திற்குப் பின் செட்டியாரைப் பிடித்து உலுப்பினான். அவர்...அசையாது மரக்கட்டைபோலக் கிடந்தார். இளைஞனின் முகம் மலர்ந்தது.

பெட்டியிலிருந்து மின் பொறி விளக்கை எடுத்தான்...வெளிச்சம் எங்கும் பரவாதிருக்கும் பொருட்டு தனது விரல்களால் ஒருவாறு மறைத்துக் கொண்டு, இரும்புப் பெட்டியை நோக்கி ஒளியை வீசினான். இரும்புப் பெட்டி நன்றாகப் பூட்டப்பட்டிருந்தது. வெகு நேர பரிசோதனைக்குப் பின் செட்டியாரின் தலையணை உறையுள்ளிருந்து திறப்புக் கோவையைக் கைப்பற்றிக் கொண்டு ஓசைப்படாமல் இரும்புப் பெட்டியைத் துறந்தான். உள்ளே.........! கட்டுக்கட்டாக ரூபா நோட்டுக்கள் அடுக்கப்பட்டிருந்தன. அவற்றில் சில நோட்டுக் கட்டுக்களை எடுத்துத் தனது தோல் பெட்டியில் திணித்துக் கொண்டான். முன்பிருந்தது போலவே இரும்புப் பெட்டியைப் பூட்டிவிட்டுத் திறப்புக் கோவையையும் இருந்த இடத்தில் வைத்துவிட்டுத் தனது கட்டிலில் படுத்துக் கொண்டான். செட்டியார் இன்னும் மயக்கத்திலேயே கிடந்தார்.

அடுத்த நாட் காலை.........! தேநீர் அருந்திய பின், அவசர அவசரமாக வேறு உடை அணிந்து கொண்டான். "கோப்பாயில் ஒரு நண்பரைச் சந்தித்துவிட்டு நாளைக் காலை உணவிற்குத் திரும்பி விடுகிறேன்" என்று கூறி விடை பெற்றுக் கொண்டு தனது பிரயாணப்பை சகிதம் புறப்பட்டான்.

"நாளைக்குக் காலைச் சாப்பாட்டிற்குக் கண்டிப்பாக வந்து விடுங்கள். தம்பியும் வந்துவிடுவார்......" என்று கூறி விடையளித்தார் செட்டியார்.

இளைஞன் தெருவிற்கு வந்ததும் கறுப்புக்கண்ணாடியை அகற்றித் தனது பையில் திணித்துக் கொண்டு, தங்க முலாம் பூசிய அழகிய மூக்குக் கண்ணாடியை அணிந்தவாறு கால் போன போக்கில் விரைவாக நடந்து கொண்டிருந்தான். அப்போது......

அவனை நோக்கி ஒரு வாடகைக் கார் வந்து கொண்டிருந்தது. காரை நிறுத்தும்படி சைகை காட்டினான். கார் அவனுக்குப் பக்கத்தில் வந்து நின்றது. பின் ஆசனத்தில் "ஜம்" என்று ஏறி அமர்ந்து கொண்டு, சாவகச்சேரிக்குச் செலுத்தும்படி உத்தரவிட்டான். கார்.... "உஷ்" என்ற இரைச்சலுடன் கிளம்பியது.

பாதையின் இரு மருங்குகளையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த அவ்விளைஞன், கார் ஒரு தேநீர்க் கடையைக் கடந்து சென்ற போது அவ்விடத்தில் நிறுத்தும்படி சொன்னான். கார்... "சர்ர்...!" என்ற ஒலியுடன் நின்றது.

"நெவிக்கட் பக்கெட்" ஒன்று வாங்கி வரும்படி கூறிச் சாரதியிடம் ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினான்.

"சார்! காலைச் சாப்பாடு இன்னும் ஆகவில்லை...ஐந்து நிமிடத்தில் ஏதாவது சாப்பிட்டுவிட்டு வரட்டுமா...?" என்று தயக்கத்துடன் கேட்டான் கார்ச் சாரதி.

"ஓ...! அதற்கென்ன...... எனக்கொன்றும் அவசரமில்லை...ஆறுதலாகச் சாப்பிட்டுவிட்டு வா...!" என்று மிகப் பரிவோடு கூறினான் அந்த இளைஞன்.

நன்றி தெரிவிக்கும் பாவனையில் சாரதி ஒரு புன்முறுவலை உதிர்த்துவிட்டு எதிரிலிருந்த தேநீர்க் கடைக்குள் நுழைந்தான். அவன் மறைந்ததும் காரினுள் இருந்த இளைஞன் தங்க முலாம் பூசிய கண்ணாடியை அகற்றித் தனது பையில் திணித்துக் கொண்டு, மீண்டும் கறுப்புக் கண்ணாடியை அணிந்து கொண்டான்.

சாரதியின் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்ட அந்த விசித்திர இளைஞன் காரைத் திடீரென்று அசுர வேகத்தில் செலுத்தினான்.

விரைந்து கொண்டிருநத கார் ஒரு முக்கிய சந்தியை நோக்கி வந்து கொண்டிருக்கையில்...ஒரு பொலீஸ் இன்ஸ்பெக்டர் நடுச் சந்தியில் நின்றவாறு காரை நிறுத்தும்படி சைகை காட்டினார். இளைஞனுக்குப் "பகீர்" என்றது. வேறு வழியின்றி நடுக்கத்துடன் காரை நிறுத்தினான். அடுத்த கணம்......!

(தொடரும்)

கவனிக்கவும்:

# பேச்சுப் போட்டி இடை, இறுதித் தேர்வு விபரங்கள்

தமிழ் பேசும் இளைஞர்களுக்குச் 'சுதந்திரன்' நடாத்தும் அகில இலங்கைப் பேச்சுப் போட்டிக்குரிய இடை இறுதிப் போட்டிகள் இவ் வாரம் 21ம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. இதர மாவட்டங்களுக்கான விபரங்கள் முதற் பக்கத்தில் வெளியாகியுள்ளன.

போட்டி விதிகளுக்கு அமைய, கட்டுப்பாடாக இயங்க வேண்டியது போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு இளைஞரதும் தலையாய கடமை.

போட்டியில் பங்கு கொள்பவர்களது கவனத்திற்கு:

(1) குறித்த தினத்தில் குறித்த இடத்தில் காலை ஒன்பது மணி [பதுளை, அட்டன் மாவட்டங்களில் பத்து மணி] தொடக்கம் மாலை ஐந்து மணி [பதுளை, அட்டன் மாவட்டங்களில் நாலு மணி] தொடக்கம் மாலை ஐந்து மணி [பதுளை, அட்டன் மாவட்டங்களில் நாலு மணி] வரை பேச்சுப் போட்டி நிகழும். நண்பகல் ஒரு மணித்தியாலயம் உணவுக்கு இடைவேளை கொடுக்கப்படும். ஒரு நாளில் போட்டி முடியாது விட் தொடர்ந்து அடுத்த நாட்களிலும் நிகழும்.

(2) பேச்சாளர்கள் குறித்த நேரத்திற்கு மண்டபத்தில் நிற்க வேண்டும். சிறிது நேரம் [அரை மணி கூடியது] பிந்தி வருபவர்களைத் தலைவர் விரும்பினால் மண்டபத்தில் அனுமதிப்பார்.

(3) பேச்சாளரது கருத்து வளம், மொழிவளம், ஆழ்த்துவம் [நிலை, தொனி, அசைவு] பேச்சுத்திறன் என்பவற்றிற்குப் புள்ளிகள் அளிக்கப்படும்.

(4) சீட்டுக் குலுக்குதல் மூலம் பேச்சாளர்கள் வரிசைப்படுத்தப் படுவார்கள்.

(5) ஒவ்வொரு பேச்சாளரும் பத்து நிமிடம் பேச அனுமதிக்கப்படுவர். ஒன்பதாவது நிமிடம் தலைவர் மணியொலி செய்வார். தொடர்ந்து ஒரு நிமிடம் பேசிப் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும். பேச்சு முடியாத விடத்து பத்து நிமிடம் முடிய அடுத்த மணி ஒலியைத் தலைவர் எழுப்புவார். அவ்வமயம் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

(6) வயது குறித்து நடுவர்கள் சந்தேகப்பட்டால் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் காட்டத் தயாராக இருக்க வேண்டும்.

(7) போட்டி முடிவு, அடுத்து வரும் 'சுதந்திரன்' இதழில் வெளியாகும்.

(8) முதல் மூவரைத்தவிர, நடுவர்களின் முடிவுக்கு இசையப் பாராட்டத்தக்க பேச்சாளர்களுக்கும் பரிசுப் பத்திரங்கள் உண்டு.

(9) போட்டி முடிவு வெளியாகிய ஒரு வாரத்திற்குள் தெரிவு செய்யப்பட்டவர்கள் 'பாஸ்போட்' அளவு தங்கள் நிழல் படங்களைப் பேச்சுப் போட்டி ஆசிரியர், சுதந்திரன், தபால் பெட்டி 1183, கொழும்பு-12. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(10) பரிசுக்குரிய முதல் இருவர் கொழும்பில் நடைபெறும் இறுதிப் போட்டியில் சமூகமளிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

(11) விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள தலைப்பிலேயே பேச வேண்டும்.

### உங்கள் சிந்தனைக்கு

நீ பட்டினி கிடந்தாயினும், உன்னிடமுள்ள கடைசிப் பருக்கையையும் தானமளித்துவிடு. தர்மம் செய்வதால் மரணம் நேரிடினும் அது சாதாரண மரணமாகாது; மோட்சமேயாகும். அப்படிக் கிட்டும் முடிவினால் நீ பூரணப் பொருளாவாய்; தெய்வமாவாய்.

—சுவாமி விவேகானந்தர்

# சிறுவர்கள் ஓடி விளையாட உதவி செய்யும் பொலீசார்!

சிறுவர்களை அமெரிக்காவிலுள்ள பொலீசார் எவ்விதம் சீர்திருத்தி வருகிறார்கள் என்பதை விளக்கும் இக் கட்டுரையின் முதலாம் பகுதி 8-9-63 இதழில் வெளியாகியிருந்தது. இது, இரண்டாவதும், இறுதிப் பகுதியுமாகும.

ஒரு சனிக்கிழமை காலையில் பெர்ஜென் தெருப்பொலீஸ் நிலையத்துக்குள் நுழையுங்கள். அங்கு முன்னால் ஒரு பொலீஸ்காரர் உட்கார்ந்திருப்பார். அவரைக் கடந்து உள்ளே செல்லுங்கள், பின்புறம் ஓர் அறையில் வின்சென்ட் எம். மரோன் என்பவர் இருப்பார். அவர்தான் இளைஞர்களைக் கண்காணிப்பவர். நூற்றுக்கணக்கான பையன்கள் அவரை "வின்" என்றே அழைக்கிறார்கள். "நான் பிறந்து வளர்ந்ததும் இந்த புரூக்லின் பகுதியில்தான். இந்தச் சிறுவர்களுக்கு என்னென்ன தேவை என்பது எனக்குத் தெரியும். நான் பேசுவது அவர்களுக்கும் விளங்கும்" என்கிறார் "வின்". இவர் பொலீஸ் வேலைக்கு வந்து கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாகின்றன; பெர்ஜென் தெருவில் இளைஞர்களைக் கண்காணிக்கும் பொறுப்பேற்றுக் கிட்டத்தட்ட பத்தாண்டுகளாகின்றன; இவர் பிள்ளை குட்டி உள்ளவர். ஆள் ஆறடி உயரம்; கரும் முடி; பரந்த முகம்; 43 வயது என்று சொன்னால் நம்ப மாட்டார்கள்.

### படம் பார்ப்பதற்கு "பாஸ்"

"சனிக்கிழமை காலையில் என் வேலை திரைப்படம் பார்க்கச் சிறுவர்களுக்கு "பாஸ்" வழங்குவது. தியேட்டர் மனேஜர்களுடன் கலந்து பேசி இந்த ஏற்பாடு செய்திருக்கிறேன். வாரத்துக்கு 50 கொடுக்கிறேன். பையன்களோடு தொடர்பு விட்டுப் போகாமல் இருப்பதற்கு இது ஒரு வழி. இது இல்லாவிட்டால் நான் எத்தனையோ பேர்களைப் பார்க்க முடியாது. அவர்கள் இங்கு வருவதால், எப்படியிருக்கிறார்கள், பிரச்சினைகள் ஏதாவது உண்டா என்று என்னால் அறிந்துகொள்ள முடிகிறது" என்று "வின்" கூறுகிறார்.

இந்தச் சமயத்தில் 12 வயதுப் பையன் ஒருவன் உள்ளே நுழைகிறான். தனக்கும் தன் நண்பனுக்கும் "பாஸ்" வேண்டும் என்கிறான். அவனுக்கு "வின்" ஒரு "பாஸ்" கொடுக்கிறார்; அவன் நண்பனுக்கு பி. ஏ. எல். ஸ்தாபனத்தில் சேர விண்ணப்ப நமூனு ஒன்றைக் கொடுக்கிறார். இருவரும் அறையினின்று வெளியே போகிறார்கள்.

பி. ஏ. எல். சிறுவர்கள் கோடைக் காலத்தில் முக்கியமாக விளையாடுவது "பேஸ்பால்". நகரத்தின் பற்பல பகுதிகளுக் கிடையில் போட்டிகள் நடைபெறும்.

### தெரு விளையாட்டு

பி. ஏ. எல். கோடைக் காலத்துக்குத் தெரு விளையாட்டுத் திட்டம் ஒன்று தீட்டி நடத்தி வருகிறது. சிறுவர்கள் விளையாடும் நேரத்தில் போக்குவரத்து இல்லாதபடி சில தெருக்கள் இரு புறமும் காவல் வைக்கப்படும். ஒவ்வொரு தெருவையும் மேற்பார்த்துக் கொள்ள இருவர் நியமிக்கப்படுவர்; இதற்கு இவர்களுக்குப் பயிற்சியும் ஊதியமும் உண்டு. விளையாட்டுக்கள், கைவினைத் தொழில்கள், நடித்தல் முதலியவற்றுக்குப் பி. ஏ. எல். ஏற்பாடு செய்கிறது. ஐ. நா; வில் சேர்ந்துள்ள நாடுகளின் பாடல்களையும் பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்வது ஒரு திட்டம். இத் திட்டத்தில் முக்கியமாகக் கலந்து கொள்பவர்கள், பெண்கள். பி. ஏ. எல். கோடை முகாம் ஒன்றும் நடத்துகிறது.

குளிர் காலத்தில் "பாஸ்கெட் பால்" முதன்மை வகிக்கிறது. குத்துச் சண்டை, தச்சு வேலை, நடிப்பு, இசைப் பயிற்சி முதலியவற்றுக்கு இளைஞர்களை "வின்", அருகிலுள்ள "லோவி" நிலையம், "மீச்சியோ" நிலையம் போன்றவற்றுக்கு அனுப்புகிறார். இத்தகைய நிலையங்கள் நகரில் மொத்தம் 12 உள்ளன. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஊதியம் பெற்று அவற்றில் முழு நேரம் பணியாற்றுகின்றனர். (சுகர் ரே ராபின்ஸன், டைகர் ஜோன்ஸ் இருவரும் பி. ஏ. எல். திட்டப்படி குத்துச்சண்டை பயின்றவர்களே.)

பி. ஏ. எல். திட்டங்களுக்கு ஊதியம் பெறாமல் உதவி புரியும் தொண்டர்களும் உளர். முக்கியமாக பேஸ்பால், பாஸ்கெட்பால் ஆட்டங்களுக்குப் பயிற்சியளிக்கவும், போட்டிகளில் "நடுவர்களாக" இருக்கவும் தொண்டர்கள் பணி செய்கிறார்கள். தொண்டர்கள் யாவரையும் முதலில் பி.ஏ. எல். தலைமையகம் நேரில் கண்டு தெரிவு செய்யும்.

— நியூ யோர்க் டைம்ஸ் மகசின்

?

# எங்கள் கோரிக்கைகள்

"எங்கள் கோரிக்கைகள்" என்னும் கட்டுரை சுதந்திரன் 1-9-63 இதழில் வெளியாகியிருந்தது. அக் கட்டுரையில் குறிப்பிடப்பட்ட பிராணி எது எனக் கேட்டிருந்தேனல்லவா? அதற்குச் சரியான விடை 8-9-63 இதழில் வெளியாகியது —"அணில்" என்று. இப் பகுதியில், சரியான விடை அனுப்பியோரின் பெயர்ப் பட்டியல் வெளியிடுவதாகக் கூறியிருந்தேனல்லவா? இதோ, வெற்றி பெற்றோரின் பெயர்கள்:

—வளர்மதி மாமா

1. எம். பி. துரைராஜ், தெனியாய. 2. செல்வர்கள் த. தேவராஜா, ஹென்றி சேவியர், எட்டியாந் தோட்டை. 3. க. சிவகாருண்ணியம், ஊர்காவற்றுறை. 4. ஞா. ஞானச்சந்திரன், இணுவில். 5. க. வீரபுத்திரன, மாத்தளை. 6. எம் எஸ்.கே. மகாலிங்கம், கொக்குவில். 7. இ. குமாரகுலசிங்கம், மானிப்பாய். 8 சுகிர்தா இராசதுரை, தெல்லிப்பளை. 9. இராஜாஜி இராசதுரை, தெல்லிப்பளை. 10. சோ. சச்சிதானந்தம், திருகோணமலை. 11. கிங்ஸ்டன் சிவப்பிரகாசம், மட்டக்களப்பு. 12. இக்பால் காரியப்பர், கல்முனை. 13. தி. மதுரம், அளவெட்டி. 14. விக்கினராசா இராசதுரை, தெல்லிப்பளை. 15. எஸ். பி. சுப்பையா, எட்டியாந் தோட்டை. 16. நியூட்டன் தர்மலிங்கம், பண்டத்தரிப்பு. 17. ஜெகநாதன் திருநாவுக்கரசு, பதுளை. 18. நா. பரமானந்தம், களுவாஞ்சிக்குடி. 19. மு. அனகுயை, கோப்பாய். 20 கே. பொன்னையாபிள்ளை, தெமோதரா.

# கழகச் செய்திகள்

## மட்டக்களப்பில் த. அ. ஊழியர் சங்க பொதுக் கூட்டம்

"இன்று தமிழ் அரசாங்க ஊழியர் எவருடைய முகத்தைப் பார்த்தாலும் மகிழ்ச்சியில்லை. ஒளியில்லை. துயரம் தேங்கிய முகத்தினராகவே காணப்படுகிறார்கள். எங்கள் சந்ததியினரின் எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற அச்சத்தோடே வாழ்கிறார்கள். இதற்குத் தக்க பரிகாரம் காணும் நோக்கமாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் எழுதுவினைஞர் சங்கத்தின் போராட்டத்தைப் பெலவீனப் படுத்தும் வகையில் சிலர் பேசியும் எழுதியும் விடுவதையிட்டு நாம் துக்கப்படுகிறோம். ஆயினும் நாங்கள் மேற் கொண்ட பணியைக் கைவிடாது நடத்தியே தீருவோம்"

தமிழ் அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் மட்டக் களப்புக் கிளையின் மாபெரும் பொதுக் கூட்டம் நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற



திரு. டி. எஸ். கே. வணசிங்க உரை நிகழ்த்துகிறார்.

போது, தலைமை தாங்கிய திரு. வை. சொக்கலிங்கம் மேற்கண்டவாறு பேசினார். திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி) வரவேற்புரை நிகழ்த்தினார்.

'எழுச்சி' ஆசிரியர் திரு. தங்கவேலு பேசுகையில், 'நாங்கள் அனைவரும் சிங்களப் பரீட்சை எடுக்க மறுத்து, அதனால் வரும் பாதிப்பிலிருந்து விடுபட வழக்குத் தொடர்ந்து போராடும் அதே வேளையில், எவரும் பதவியிலிருந்து விலகுவதாக எழுதிக் கொடுக்கக் கூடாதென்றும், சிங்களம் படியாமலிருந்து கோண்டே உரிமைகளைப் பெற வேண்டுமென்றும்' கேட்டுக்கொண்டார்.

அடுத்து, துணைச் செயலாளர்: திரு. த. மகேந்திரன், அவர்கள் தமது பேச்சின் போது குறிப்பிட்டதாவது:-

"நமது உரிமைக் கிளர்ச்சிப் போராட்டத்துக்கு வெளியிலிருந்து எவரும் உதவ முடியாது. நமது உரிமைகளை நாமே தனித்துப் போராடி எடுக்க வேண்டியுள்ளது. பொது மக்களோ அன்றி மற்றெவருமோ எமக்காகப் பாடுபட முடியாது"

அகில இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கத் துணைச் செயலாளர் திரு. டி. எஸ். கே. வணசிங்க, ஆசிரியர், பேசும் போது: "தமிழ் ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள் அனைவரும் ஒருமுகப்பட்டுச் சிங்களம் படியாது இருந்தால் நாம் அரசாங்கச் சட்டத்தை ஸ்தம்பிக்கச் செய்யலாம்" என்றார்.

மற்றும், திரு: வி. த. குமாரசாமி, இலங்கைப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த திரு. தங்கையா, மருவிய எழுதுவினைஞர் சங்கச் சார்பில் திரு. கே. வி. இராசரெத்தினம் (நடமாடி) ஆகியோரும் சொற்பெருக்காற்றினர்.

கூட்டுறவுத் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. அ. பரமேஸ்வரனின் தமிழ் வணக்கப் பாட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட இக் கூட்டத்தில், செல்வி வி. கோணேஸ்வரியின் பாட்டுநிகழ்ச்சியும், 'நடமாடி' குழுவினர் தயாரித்தளித்த "சரிந்தது கொற்றம்" எனும் நாடகமும் நடிக்கப்பட்டது.

மட்டக்களப்பு அ. எ. வி. சங்கச் செயலாளர் திரு. அ. புவனேசன் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

### கலா படிப்பக மன்றம்

கரணவாய்தெற்கு கலா படிப்பக மன்றத்தின் விசேட கூட்டம் 27-8-63 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகியது. கூட்ட ஆரம்பத்தில் மறைந்த தலைவர் திரு. ந. இ. இராஜவரோதயம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இரு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

'ஈழத் தமிழினம் சிறப்புவாய்ந்த அறிவுச் சுடரை இழந்து விட்டது துரதிருஷ்டமானதாகும். இராஜவரோதயத்தின் மறைவு குறிப்பாகத் திருக்கோணமலை மக்களுக்கும், தமிழ் அரசுக் கட்சிக்கும் பெரும் இழப்பாகும்' என்று தலைவர் திரு. கு. சுவாமிநாதர் குறிப்பிட்டார்.

திரு. எம். எஸ். யேசுதாசன், திரு. சுப்பிரமணியம், திரு. விஜயகமூர்த்தி, திரு. மக்களன்பன் ஆகியோரும் பேசினார்கள்.

### களுவாஞ்சிகுடி சைவ மகா சபையின் நிர்வாக சபைக் கூட்டம்

களுவாஞ்சிகுடி சைவமகா சபையின் நிர்வாக சபைக் கூட்டம் களுவாஞ்சிகுடி ஸ்ரீ விக்கினேஸ்வரர் ஆலயத்தில் சபையின் உபதலைவர் திரு. சி. அரசரெத்தினம் அவர்கள் தலைமையில் செல்வன் க. கந்தசாமி அவர்கள் தேவாரத்துடன் ஆரம்பமானது.

திரு. வீ. சதாசிவம்பிள்ளை அவர்கள் பேசும்போது சைவ மகா சபையினர் வெள்ளிக்கிழமைகளில் நடாத்தும் சமய வகுப்பு, கூட்டுப் பிரார்த்தனைகளில் சகல சைவர்களையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்.

இச் சபையின் செயலாளர் திரு. கோ. பாக்கியராசா ஸ்ரீ விக்கினேஸ்வரர் ஆலயத்துக்கு முன் மண்டபம் இல்லாமல் இருக்கும் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு சபையினர் இம் மண்டபத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றும் காலஞ்சென்ற ஊர்காவற்றுறைப் பிரதிநிதி அமரர் கந்தையாவின் குடும்பத்துக்கு அனுதாபம் தெரிவிக்க வேண்டுமென்றும் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களைச் சபையார் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். செல்வன் சு. பத்மநாதனின் தேவாரத்துடன் கூட்டம் முடிவுற்றது.

### தாவடி இளைஞர் முத்தமிழ் மன்றம்

மேற்படி மன்றத்தின் முதலாவது கூட்டம் 15-8-63ல் நடைபெற்றது. ஆவணி — மார்கழி நிர்வாக சபை அங்கத்தினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சி. சுதந்திரராஜா, துணைத் தலைவர்: திரு. சி. சண்முகராஜா, செயலாளர்: திரு. ச. விசுவநாதன், துணைச் செயலாளர். திரு. ந. பரமலிங்கம், தனாதிகாரி: திரு. க. சிதம்பரநாதன், பத்திராதிபர்: திரு. சு. ஸ்ரீ ஸ்கந்தன், மேற்பார்வையாளர்: திரு. த. பரமேஸ்வரன்.

### தாச்சிப் போட்டி

கட்டைக்காடு சென் மேரிஸ் இளைஞர் சங்கத்துக்கும் வெற்றிலைக் கேணி கிராம முன்னேற்றச் சங்கத்துக்குமிடையில் 1963ம் ஆண்டு ஆவணி மாதம் 18ம் திகதி ஞாயிறு மாலை 4 மணியளவில் நடைபெற்ற சிநேகபூர்வமான தாச்சிப் போட்டியில், கட்டைக் காடு சென் மேரிஸ் இளைஞர் சங்கம் 5 புள்ளிகளால் வெற்றியீட்டியது. போட்டிக்கு திரு. சி. கணபதிப்பிள்ளை ஆசிரியர் மத்தியஸ்தம் வகித்தார். போட்டி முடிவில் இரு பகுதி விளையாட்டு வீரர்களுக்கும் சென் மேரிஸ் இளைஞர் சங்கத்தினர் தேநீர் விருந்தளித்தர்.

### களுவாஞ்சிகுடி ஸ்ரீ சாரதா மாதர் சங்கம்

களுவாஞ்சிகுடி ஸ்ரீ சாரதா மாதர் சங்க விசேட பொதுக் கூட்டம் மகா விஷ்ணு ஆலய மடத்தில் திருமதி சகுந்தலா தெய்வநாதன் தலைமையில் கூடப்பட்டது. புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்: திரு. இராசகோபால், தலைவர்: திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம், துணைத்தலைவர்: திருமதி பொன்னம்மா நாகமணி, செயலாளர்: திருமதி சகுந்தலா தெய்வநாதன், துணைச் செயலாளர்: திருமதி அம்பிகை முத்துலிங்கம், பொருளாளர்: திருமதி சாவித்திரி கணபதிப்பிள்ளை, ஆட்சிக் குழு உறுப்பினர்கள்: திருமதி கிருபையம்மா நாராயணபிள்ளை, திருமதி கனகசபை கனகம்மா, திருமதி சுப்பிரமணியம் சுந்தரம்மா, திருமதி வேலுப்பிள்ளை கிருஷ்ணம்மா, திருமதிசினித்தம்பி ஞானசெல்வம், திருமதி கணபதிப்பிள்ளை சம்பூரணம், திருமதி குழந்தைவேல் சின்னமுத்து, திருமதி கிருஷ்ணபிள்ளை சடேஸ்வரி.

## இஸ்லாமியர் முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வேண்டுகோள்

ஒன்றுபட்டு வாழவேண்டிய இஸ்லாமியர்கள் இன்று "முஸ்லிம்—சோனகர்" என்று அவசியமின்றிப் பிளவுபட்டுள்ளனர். இப்பிளவு நீங்கிச் சமூகம் முன்னேற ஒன்றுபட வேண்டியது அவசியமாகிறது. இந்த இலட்சியத்துடன் இயங்கும் கழகத்தின் பொதுச்செயலாளர் ஜனாப் ஏ. அஸாத் 'சுதந்திரன்' மூலம் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

"அல்லா ஒருவன், நபி முஹம்மது அவனது இறுதித் தூதர்". இவ்விரண்டையும் வாயார மொழிந்து, மனமார ஒப்புக் கொண்டவர்களே இஸ்லாமியர். எங்களுள் சாதிப் பாகுபாடு இல்லை; இனப் பாகுபாடு இல்லை. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் ஒன்றுபட்ட ஒற்றுமையும், சகோதர பாசமுமே எம்மை அன்றிலிருந்து இன்றுவரை இஸ்லாமியர் என்ற கட்டுக்கோப்புக்குள் அடக்கி வந்திருக்கிறது. ஆனால் அதே வேளை எமது இன்றைய ஈழத்தில் முஸ்லிம்கள்—சோனகர் என்று ஏனோ பிரித்தனர்? ஓர் இறையையும், ஒரு மறையையும், ஒரு தூதுவரையும் ஒருமித்து ஓங்காரம் செய்த எம் மத்தியில் இந்தப் பிளவு தோன்றுவதற்கு என்ன காரணங்கள் தான் ஏற்பட்டனவோ என்பது பலரும் புரியாத பரம ரகசியமாக இருக்கிறது.

இந்நிலையால் ஒன்றாக ஒரே தலைவன் கீழ் இயங்க வேண்டிய இஸ்லாமியச் சமூகம் பல்வாறாகப் பிரிபட்டுக் கொள்கை, இலட்சியம் எதுவும் இல்லாதவாறு தத்தளிக்கிறது. அரசியலிலும்சரி-சமூக வளர்ச்சியிலும் சரி எங்களுள் இரு பிரிவுகள் ஏற்பட்டு, ஓர் இஸ்லாமியன் மற்ற இஸ்லாமியனைப் பகைவனெனக் கொண்டு முட்டிமோதுகிறான். இதனால் ஏற்படும் விளைவைத் தனக்கு ஏற்பட்ட விளைவு எனக் கருதுகிறானே ஒழிய, தனது இனத்தவனுக்கு ஏற்பட்ட இழிவை எண்ணுகிறானில்லை. காரணம்; இஸ்லாமியர் என்பதை மறந்து, சோனகன்—முஸ்லிம் என்ற வேறுபாடு தலைதூக்கி நிற்பதே ஆகும்.

இது முற்றாக ஒழிக்கப்பட்டு "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற முரசொலியை அன்றும்-இன்றும் என்-என்றுமே ஒலிக்கச் செய்து வரும் நாம், இஸ்லாமியர் என்ற அந்த, நமக்குச் சொந்தமான நாமத்தின் கீழ் ஒன்றுபட்டு எமது சகல உரிமைகளையும், கடமைகளையும் நிலைநாட்ட வேண்டும். அப்போதுதான் இன்று எம்மில் நிகழும் பாகுபாடு மறையும்.

இஸ்லாம் போற்றும் இஸ்லாமிய சகோதரத்துவத்தை இதயத்தே இருத்தி, இஸ்லாமியர் என்ற நாமத்தின் கீழ் ஒன்றுபடுவோம். பகைமையைப் போக்கி, பரிசுத்த பாதையை நாடிச் செல்ல அனைவரும் ஒன்று திரளுமாறு இஸ்லாமிய முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் என்ற ரீதியில் உங்கள் அனைவரையும் நம் சமூகம் ஒன்றுபட வழி வகுக்குமாறு வேண்டுகிறேன்.

## புத்தரின்..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய நகரத்தில் கட்டப்படவிருக்கும் ஸ்ரீ கதிரேசன் கோவில் கட்டட வேலைகளனைத்தையும் தங்கவேலு ஆசாரி குழுவினர் பொருத்தத்தில் எடுத்துள்ளனர். சென்ற ஜூலை மாதம் 12ம் திகதி (12-7-1963) அத்திவார வேலைகள் தொடங்கப்பெற்று கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிர்த்த மண்டபம் ஆறுமுக சுவாமி கோவில் ஆகியவற்றின் அத்திவார வேலைகள் பூர்வாங்கமாக முடிவுற்றுள்ளன. ஏனைய வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவ்வளவு துரித வேலைகள் நடைபெறுவது தானேசர் சபைத் தலைவர் திரு. ச. நடராசா, (பொருளாளர்) திரு. இரா. சதாசிவம்பிள்ளை, திரு. கந்தசாமி (செயலாளர்) ஆகியோரது இடைவிடாத முயற்சியாலும், ஊக்கத்தாலும் ஆதரவாலும் என்றால் மிகையாகாது. திரு. ப. பசுபதி அவர்கள் (கணக்காளர், கல்வி அலுவலகம்) சபையின் கௌரவ கணக்காளராகப் பணியாற்றி அளப்பரியசேவை செய்து வருகின்றார். கட்டிடக்குழு அங்கத்தவரான திரு. பாலசுப்பிரமணியம் (பிரதம எஞ்சினியர், பொது மராமரத்து இலாகா) அவர்கள் அவ்வப்போது புதிய கோவில் கட்டுமிடம் சென்று வேலைகளை மேற்பார்வையிட்டு, அரும் பணியாற்றுகின்றார்.

### வேண்டுகோள்

அரசாங்கம் அளித்த தொகை அநுராதபுரம் புதிய நகரில் ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தை சிற்ப வேலைப்பாடுகளுடன் நிர்மாணிக்க பற்றாதபடியால் மேற்படி ஆலய தானேசர் சபையினர் பொது மக்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுக்கின்றனர். சுமார் ஒன்றரை லட்சம் ரூபாய் கோவில் கட்டத் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழர்கள் பெருமைப்படக்கூடிய வகையில், தமிழ்ப் பேரரசன் எல்லாளன் ஆண்ட சரித்திரப் பிரசித்தி பெற்ற அநுராதபுர மாநகரில் ஓர் ஆலயம் நிறுவத் தங்களாலியன்ற பொருளுதவி அளிக்குமாறு பொதுமக்கள் வேண்டப்படுகின்றனர். "சிறுதுளி பெருவெள்ளம்" என்பது போல், அளிக்கப்படும் தொகை சிறிதாயினும் அது ஓர் அழகிய வேலைப்பாடுகளுடனமைந்த கோவிலை, புராதன நகரில் எழுப்ப உதவும் என்பது திண்ணம். பொருளுதவி அளிக்கும் அன்பர்கள் தயவு செய்து திரு. இ. சதாசிவம்பிள்ளை, (பொருளாளர்), அநுராதபுரம் ஸ்ரீ கதிரேசன் கோவில் திருப்பணிச்சபை, இல: 179, குருநாகல் வீதி, பழைய நகரம், அநுராதபுரம் என்ற விலாசத்திற்கு அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

### வன்னியர் வாய்மொழி

நமது சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கான தொண்டர் படையில் மாணவர்களும் ஆயிரக் கணக்கில் சேரவேண்டும். இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மா காந்தியடிகள் கூட மாணவர்களைப் பயன்படுத்தியுள்ளார்! மாணவர்களும் சேர்ந்து போராடி தமிழ் மொழி உரிமையையும், கலாச்சாரத்தினையும், நாட்டினையும் காப்பாற்றும்படி வேண்டுகிறேன்.

❖

இலங்கையில் இனி ஐக்கியம் இருக்க முடியாது! நாங்கள் வேறு நாடுகளுடன் சேர விரும்பவில்லை. ஆனால் தமிழர்களை நசுக்கி ஒழிக்கும் படலம் தொடருமானால் மற்ற நாடுகளின் உதவியை நாடவேண்டி வரும், உலக மக்களின் ஆதரவுக்கு நாம் வேண்டுகோள் விடுவோம்

கடைசி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

பார்த்தோரை மீண்டும் பார்க்கத் தூண்டும் பாங்கான சித்திரம்!

இன்றே பாருங்கள்



பி. பானுமதி,
எஸ். வி. ரங்கராவ்,
சௌகார் ஜானகி,
சந்திரபாபு, முத்தையா
மற்றும் பலர் நடித்த

# அன்னை

இந்திய ஜனாதிபதியின் பரிசு பெற்ற படம்

டைரக்ஷன்:
கி ரு ஷ் ண ன் - ப ஞ் சு

---

ஆவலோடு! எதிர்பார்த்த அற்புதப் படைப்பு!
செப்டம்பர் 27ம் உ. வெள்ளி முதல்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் சில
சினிமாஸ் திரைகளில்!

இலங்கையின் சரித்திரத்திலேயே
முதன் முறையாகத் தயாரித்து
வெற்றி கண்ட படம்!



பி. எஸ். கிருஷ்ணகுமார்,
ஜெயஸ்ரீ, மோகன் ராஜ்,
வி. தங்கவேலு, சாந்தி,
மாஷ்டர்பிரகாஷ் முத்துவேலு
மற்றும் பலர் நடித்த

ஸ்ரீ கணபதி பிக்சர்ஸ்

# தோட்டக்காரி

---

குதூகலமான 3வது வாரம்!

சென்ட்ரல் [மருதானை] ராஜேஸ்வரா [மட்டக்களப்பு]

ஜோதி [திருமலை] ராணி [யாழ்ப்பாணம்] லிபர்ட்டி [பதுளை]

பணம், படிப்பு, உழைப்பு
இம் மூன்றும் ஒன்றுபட்டால்
தொழிலில் முன்னேற்றம்
உண்டாகாமலிருக்குமா?
பணம் தனது குணத்தைக்
காண்பித்தால்......?
பணச் செருக்கால்
குணமிழந்து
குட்டிச்சுவரானவர்கள்—

# பங்காளிகள்

ஜெமினி கணேசன்,
தேவிகா, எம்.ஆர்.ராதா
மற்றும் பலர் நடித்தது.




---

அடுத்த திரை விருந்து!

இன்னிசை கான மழையுடன்
இன்ப நடனங்கள் இணைந்த

உமா பிக்சர்ஸாரின்

# சித்தூர் ராணி பத்மினி

சிவாஜிகணேசன்-வைஜயந்திமாலா
எம். என். நம்பியார்-டி. எஸ். பாலையா
காகா ராதாகிருஷ்ணன்-ராகினி
ஹெலன்-முத்துலட்சுமி

தோன்றும் பாங்கான சித்திரம்!

இசை:
ஜி. ராமநாதன்

ஸ்டண்ட்:
ஸ்டண்ட் சோமு

டைரக்ஷன்:
Ch நாராயணமூர்த்தி

---

செப்டம்பர் 25ம் திகதி புதன் முதல்!

செல்லமஹால்

மற்றும் 3 திரைகளில்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) செப்டம்பர் 20ம் திகதி முதல்!



அபார சாதனையை நிலைநாட்டிய

சாரதா

புகழ் நட்சத்திரங்களான

எஸ். எஸ். ராஜேந்திரன்

விஜயகுமாரி

ஆகியோர் மீண்டும் தோன்றி உங்கள்
உள்ளத்தை உருக்கும் சித்திரம்

# நீங்காத நினைவு

---

செல்லமஹால்
(கொட்டாஞ்சேனை)
8-வது வாரம்!

சிவாஜி கணேசன்-தேவிகா
எம். ஆர். ராதா-பாலாஜி
நடித்த

# ப்லே பாண்டியா

எதிர்பாருங்கள்!

ஜெமினி கணேசன்,
சாவித்திரி,
கமலா லட்சுமணன்
நடித்த

# கொஞ்சும் சலங்கை

இப் பத்திரிகை ஸிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் செப்டம்பர் மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.